
May 2024

# தமிழ்

நற்றமிழரின் நாடித்துடிப்பு




VARSHA™
IDLI/DOSA BATTER
Let's eat the Best!
VARSHA
Ready to Cook
Idli / Dosa Wet Mix
CRISPY DOSA * SOFT & FLUFFY IDLI
1Kg
100% Pure Vegetarian
Traditional taste that Lingers

# தமிழ்

நற்றமிழரின் நாடித்துடிப்பு

**May 2024** சுவடி — 14 ஓலை — 3


## வணக்கம் பல

போரைத் தொடங்குவது மிக எளிதாக அமைந்து விடுகிறது. ஆனால் முடிப்பதற்கு பல நாடுகள் முயன்றும் சம்பந்தப்பட்ட இரு நாடுகளுக்கான அதிகாரப் போக்கும், இன்னபிற காரணங்களும் போரை நீடிக்கச் செய்து கொண்டே இருக்கிறது. ஒருபுறம் இஸ்ரேல் ஈரான், மறுபுறம் உக்ரைன் — ரஷ்யா என்ற போர் காட்சிகள், மக்கள் சாதாரண விஷயமாகக் கடந்து செல்லக்கூடிய ஒரு சாட்சியாக மாறுகிற அவலச் சூழலை மாற்ற வேண்டிய கட்டாயத்தில் இருக்கும் உலக நாடுகள், வேடிக்கைப் பார்க்கும் பார்வையாளர்களாக இருந்து வருவது, உலகம் எதை நோக்கிச் சென்று கொண்டிருக்கிறது என்ற பெரும் வினாவினை எழுப்புகிறது. அந்த வினாவுக்கு, அமைதியும் சமரசமும் விரைவில் எட்ட வேண்டும் என்பதே விடையாக, இருக்கட்டும்.

அமெரிக்காவில் டிக் டாக் தடை விவகாரம் விஸ்வரூபம் எடுத்திருக்கிறது. உலகில் யாருக்காவது ஏதேனும் நடந்து விட்டுப் போகட்டும் எவர் தலையில் குட்டு விழுந்தால் நமக்கென்ன? என்ற போக்கில் இருப்பவர்கள், தன் தலையில் குட்டு விழும்போதுதான் அலறி அடித்துக் கொண்டு வாய் குழறியாவது பேச முற்படுவார்கள். இப்போது அமெரிக்கா அந்நிலையில் வந்து நிற்கிறது. பலவகையிலும் சீனாவின் அத்துமீறலை உணர்ந்து கொண்டு அதற்கான எதிர்வினையாற்றும் முகமாக டிக்டாக்கை தடை செய்திருக்கக் கூடிய அமெரிக்காவின் செயலை, உலக நாடுகள் கூர்ந்து நோக்கி அதில் இருக்கக்கூடிய உண்மையை உணர்ந்திட வேண்டும். அறிவியல் தொழில்நுட்பங்களை எப்படி ஆக்கபூர்வமாக பயன்படுத்த வேண்டும் என்ற பாடத்தையும், தொழில்நுட்பங்கள் மூலமாக ஏற்படக்கூடிய அபாயத்துக்கும் அதற்குத்தக்க எதிர் வினையாற்ற வேண்டும் என்ற செய்தியை உலக நாடுகள் உணர்ந்திருக்கிறது.

‘இளமையில் தலை குனிந்து வாசிப்பவர்கள், முதுமையில் தலை நிமிர்ந்து வாழக்கூடிய ஒரு உன்னத நிலையை அடைவார்கள்!’ என்பதற்கு இலக்கணமாகப் புத்தகங்கள் திகழ்கின்றன. அவற்றை வாசிக்கத் தூண்டும் கட்டுரையோடு, உழைப்பாளர்கள் தினத்தில் மலர்கின்ற நமது ‘அய் தமிழ்,’ ‘உழைப்பே உயர்வு தரும்!’ என்ற உண்மையை உயர்த்திப் பிடித்தபடி உழைப்பைப் போற்றும் உன்னத இதழாக மலர்கின்றது. ‘உழைக்கும் வர்க்கம் உயரட்டும்!’ என்ற உன்னத வேண்டுதலோடு அனைவர்க்கும் உழைப்பாளர் தின வாழ்த்துக்கள்! வாசியுங்கள்! நேசியுங்கள்!

நேசப்பகிர்தலுடன்

**ஆசிரியர் குழு**

## உள்ளே...


நிற்குமா நடக்குமா?
சுருங்கும் வலை
வாசிப்போம் நேசிப்போம்
தமிழே தமிழே
சேரமான் கனவு
தல வலம்
சிறுகதை
தமிழர் பெருமை
சிவகாமியின் சபதம்
இயற்கை காப்போம்
மருத்துவ தமிழ்
முதுமை பேணுவோம்



**IThamil Monthly Magazine**

**Chief Editor & Publisher**
Sivanesan

**Editor**
Khottravan

**Editorial Team**
Ganesan
Navani
Shanthakumar

**Art Editor**
Sriram

**Art & Marketing Director**
Jaya

**Printers**
Kanagam Pathippagam

**Contact us:**
*editor@ithamil.com*



*இதழில் வெளியாகும் படைப்புகள் அனைத்தும் படைப்பாளரின் பெருமைக்கும் பொறுப்புக்கும் உரியது

# நிர்த்துமா



## இரான் – இஸ்ரேல் மோதல் பற்றிய முழு விவரம்

முதல் முறையாக, இரான் தனது எல்லையில் இருந்து நேரடியாக இஸ்ரேல் மீது கடந்த ஏப்ரல் 13 இரவு தாக்குதல் நடத்தியது.சிரியாவின் தலைநகர் டமாஸ்கஸில் உள்ள இரான் தூதரகத்தில் இஸ்ரேல் நடத்தியதாகக் கருதப்படும் தாக்குதலுக்கு பதிலடி கொடுத்ததாக இரான் கூறுகிறது. இஸ்ரேலை நோக்கி ட்ரோன்களையும், ஏவுகணைகளையும் ஏவியது இரான்.

சிரியாவில் இரான் தூதரகத்தின் மீது தாக்குதல் நடத்தியதற்கு இஸ்ரேல் பொறுப்பேற்கவில்லை. இந்த நிலையில், இஸ்ரேலும் இரானில் ஏவுகணை தாக்குதல் நடத்தியிருப்பதாக அமெரிக்க அதிகாரிகள் தெரிவித்துள்ளனர். முன்னதாக இஸ்ரேலும் இரானும் பல ஆண்டுகளாக நிழல் யுத்தத்தில் ஈடுபட்டு வந்தன. அதாவது பொறுப்பை ஒப்புக்கொள்ளாமல் ஒரு நாடு மற்றொன்றுக்குச் சொந்தமான இடங்களின் மீது தாக்குதல் நடத்திவந்தன.இந்நிலையில், கடந்த ஆண்டு அக்டோபர் மாதம் எல்லைப் பகுதி இஸ்ரேலில் உள்ள குடியிருப்புகள்மீது பாலத்தீன ஆயுதக்குழுவான ஹமாஸ் தாக்குதல் நடத்தியது. அதன்பின் இஸ்ரேல் காஸா மீது தீவிரமான தாக்குதல் நடத்திவருகிறது. இதனால், இரான் — இஸ்ரேல்

தாக்குதல்கள் கணிசமாக அதிகரித்துள்ளன.

நட்பாக இருந்த இஸ்ரேலும் இரானும் எப்படி எதிரிகளாயின?

இரானில் 1979—ஆம் ஆண்டு இஸ்லாமியப் புரட்சி நடக்கும் வரை இரு நாடுகளும் நட்பு நாடுகளாக இருந்தன. புரட்சிக்குப் பிறகு இரானில் அமைந்த அரசு, இஸ்ரேலை எதிர்ப்பதை தனது சித்தாந்தத்தின் முக்கிய பகுதியாக அமைத்துக்கொண்டது.

இரானின் இந்தப் புதிய இஸ்லாமிய ஆட்சி இஸ்ரேலின் இருப்புக்கான உரிமையை அங்கீகரிக்கவில்லை, மேலும் அதை ஒழிக்க



# நடக்குமா?

வேண்டும் என்று கூறி வருகிறது. இரானின் உச்ச தலைவரான ஆயத்துல்லா அலி காமனெயி, முன்னர் இஸ்ரேலை ஒரு ‘புற்றுநோய் கட்டி’ என்று அழைத்தார். மேலும் அக்கட்டி “நிச்சயமாக அகற்றப்படும்,” என்றார்.

தெஹ்ரானின் சொல்லாட்சிகள், இஸ்ரேலை அழிக்க உறுதிமொழி அளித்த நிழல் படைகளை உருவாக்கியது, ஹமாஸ் மற்றும் ஹெஸ்பொலா போன்ற ஆயுதக் குழுக்களுக்கு நிதியுதவி மற்றும் ஆயுதம் வழங்குவது, மற்றும் இரான் ரகசியமாக அணு ஆயுதங்களை உருவாகுகிறது என்ற சந்தேகம் — இவற்றால் இரான் தனது இருப்புக்கே அச்சுறுத்தல் விடுப்பதாக இஸ்ரேல் நம்புகிறது.



சிரியாவின் தலைநகர் டமாஸ்கஸில் உள்ள இரானிய தூதரகக் கட்டடத்தின் மீது கடந்த ஏப்ரல் 1—ஆம் தேதி நடத்தப்பட்ட வான்வழித் தாக்குதலில், மூத்த இரானிய தளபதிகள் கொல்லப்பட்டதற்கு பதிலடியாக, இஸ்ரேல் மீது குண்டுவீச்சு நடத்தப்பட்டது என்று இரான் கூறுகிறது. தூதரகத்தின்மீது நடத்தப்பட்ட வான்வழித் தாக்குதலுக்கு இஸ்ரேல் மீது இரான் குற்றம்சாட்டுகிறது. இது தன் இறையாண்மையை மீறுவதாக இரான் கருதுகிறது. அத்தாக்குதலுக்கு இஸ்ரேல் பொறுப்பேற்கவில்லை.

அந்தத் தாக்குதலில் இரானின் உயர்நிலைக் குடியரசுக்காவலர்களின் வெளிநாட்டுக்கிளையான குத்ஸ் படையின் மூத்த தளபதியான பிரிகேடியர் ஜெனரல் முகமது ரெசா ஜாஹேதி உட்பட 13 பேர் கொல்லப்பட்டனர். லெபனானின் ஷியா ஆயுதக் குழுவான ஹெஸ்பொலாவுக்கு ஆயுதம் வழங்க இரான் எடுத்துவரும் முன்னெடுப்புகளில் அவர் முக்கிய நபராக இருந்தார்.



ஒவ்வொரு நாளும் இஸ்ரேலுடன் எல்லை தாண்டிய துப்பாக்கிச் சூடு நடத்தி வருகிறது. இதனால், எல்லையின் இருபுறமும் உள்ள பல்லாயிரக்கணக்கான பொதுமக்கள் தங்கள் வீடுகளை விட்டு வெளியேற வேண்டிய கட்டாயம் ஏற்பட்டுள்ளது. இராக், சிரியா மற்றும் ஜோர்டானில் உள்ள அமெரிக்கத் தளங்களை ராக்கெட் மூலம் தாக்கிய, இராக்கின் பல ஷியா போராளிகளை இரான் ஆதரிக்கிறது.

இந்தத் தூதரகத் தாக்குதல், இரானிய இலக்குகளுக்கு எதிராக இஸ்ரேல் நடத்துவதாகப் பரவலாகக் கூறப்படும் வான்வழித் தாக்குதல்களை ஒத்திருக்கிறது. கடந்த சில மாதங்களில் சிரியாவில் நடந்த வான்வழித் தாக்குதல்களில் பல மூத்த இரானிய தளபதிகள் கொல்லப்பட்டுள்ளனர்.உயர் ரக துல்லிய ஏவுகணைகள் உட்பட ஆயுதங்கள் மற்றும் உபகரணங்களை மிஸிநிசி சிரியா வழியாக ஹெஸ்பொலாவுக்கு அனுப்புகிறது. இஸ்ரேல் இதைத் தடுக்க முயற்சிக்கிறது. அதே போல் இரான் சிரியாவில் ராணுவ இருப்பை வலுப்படுத்துவதையும் இஸ்ரேல் தடுக்க முயல்கிறது.

இரானின் நட்பு நாடுகள் எவை?

இரான் மத்திய கிழக்கில் கூட்டாளிகள் மற்றும் நிழல் படைகளின் ஒரு வலையமைப்பை உருவாக்கியுள்ளது. இது அப்பகுதியில் அமெரிக்கா மற்றும் இஸ்ரேலிய நலன்களுக்குச் சவால் விடும் எதிர்ப்பின் ஒரு பகுதியாக இருப்பதாக இரான் கூறுகிறது. பல்வேறு வகைகளில் இந்த நாடுகளையும் அமைப்புகளையும் இரான் ஆதரிக்கிறது.

சிரியா இரானின் மிக முக்கியமான நட்பு நாடாகும். இரான், ரஷ்யாவுடன் இணைந்து, சிரிய அதிபர் பஷர் அல்—அசாத்தின் அரசாங்கத்திற்கு ஆதரவு வழங்கி வருகிறது. இதனால் அசாத்தின் அரசாங்கம் கடந்த 10 ஆண்டுகளாக நடந்துவரும் சிரியாவின் உள்நாட்டுப் போரில் இருந்து தப்பித்து வந்திருக்கிறது. இரான் ஆதரவளிக்கும் ஆயுதக் குழுக்களில் லெபனானில் உள்ள ஹெஸ்பொலா மிகவும் சக்தி வாய்ந்தது. இஸ்ரேலுக்கும் ஹமாஸுக்கும் இடையே போர் மூண்டதில் இருந்து, ஹெஸ்பொலா அமைப்பு கிட்டத்தட்ட

இரான், ஏமனில் உள்ள ஹூதி இயக்கத்திற்கும் ஆதரவு தருகிறது. ஹூத்தி இயக்கம் ஏமனின் அதிக மக்கள் தொகை கொண்ட பகுதிகளைத் தனது கட்டுக்குள் வைத்திருக்கிறது. காஸாவில் ஹமாஸுக்குத் தனது ஆதரவைக் காட்ட, ஹூத்திகள் இஸ்ரேல் மீது ஏவுகணைகள் மற்றும் ட்ரோன்களை ஏவியுள்ளனர். மேலும் கரையோரங்களில் வணிகக் கப்பல்கள் மீது தாக்குதல் நடத்தி, ஒரு கப்பலை மூழ்கடித்துள்ளனர். இதற்கு பதிலடியாக அமெரிக்காவும் இங்கிலாந்தும் ஹூதி இலக்குகளைத் தாக்கின.

கடந்த ஆண்டு அக்டோபர் 7—ஆம் தேதி இஸ்ரேலைத் தாக்கிய ஹமாஸ் உட்பட பாலத்தீனிய ஆயுதக் குழுக்களுக்கு இரான் ஆயுதங்களையும் பயிற்சியையும் வழங்குகிறது. இந்தத் தாக்குதல்தான் தற்போது நடக்கும் இஸ்ரேல்—காஸா போருக்குக் காரணமாக அமைந்தது. இது மத்தியக் கிழக்கில் இரான் மற்றும் இஸ்ரேலின் நட்பு நாடுகளிடையே மோதல்களுக்கு காரணமானது. ஆனால், அக்டோபர் 7 தாக்குதலுக்கும் தனக்கும் எந்தத் தொடர்பும் இல்லை என்று இரான் கூறி வருகிறது.

இரான் — இஸ்ரேல் யாருடைய ராணுவம் பலமானது?

புவியியல் ரீதியாக, இஸ்ரேலை விட இரான் மிகப்பெரியது. இரானின் மக்கள்தொகை 9 கோடி. இது இஸ்ரேலின் மக்கள்தொகையைவிட பத்து மடங்கு பெரியது. ஆனால் இது ராணுவ சக்தியில் பிரதிபலிக்கவில்லை. இரான் ஏவுகணைகள் மற்றும் ட்ரோன்களில் அதிக முதலீடு செய்துள்ளது. தனக்கென ஒரு பரந்த ஆயுதக் களஞ்சியத்தைக் கொண்டுள்ளது. தன் பினாமிகளான ஏமனில்

உள்ள ஹூத்திகள் மற்றும் லெபனானில் உள்ள ஹெஸ்பொலாக்களுக்கு கணிசமான ஆயுதங்களை வழங்கி வருகிறது. ஆனால், இரானிடம் நவீன வான் பாதுகாப்பு அமைப்புகள் மற்றும் போர் விமானங்கள் இல்லை. யுக்ரேன் போரில் போரில் ரஷ்யாவுக்கு இரான் ராணுவ ஆதரவு வழங்கியது. அற்கு ஈடாக ரஷ்யா இரானின் வான்வழிப் பாதுகாப்பை மேம்படுத்த உதவுவதாக நம்பப்படுகிறது.இதற்கு நேர்மாறாக, இஸ்ரேல் உலகின் மிகவும் மேம்பட்ட விமானப்படைகளைக் கொண்டுள்ளது. IISS இராணுவ இருப்பு அறிக்கையின்படி, இஸ்ரேலிடம் குறைந்தது 14 ஸ்க்வாட்ரான் ஜெட் விமானங்கள் உள்ளன.




எதிரி நாட்டு எல்லைக்குள் வெகுதூரம் சென்று தாக்குதல் நடத்திய அனுபவமும் இஸ்ரேலுக்கு உள்ளது.

இரான் மற்றும் இஸ்ரேலிடம் அணு ஆயுதங்கள் உள்ளனவா ?

இஸ்ரேல் சொந்தமாக அணு ஆயுதங்களைக் கொண்டிருப்பதாகக் கருதப்படுகிறது. ஆனால் இதைப்பற்றி அது தெளிவாகவோ வெளிப்படையாகவோ பேசுவதில்லை என்ற கொள்கையைப் பின்பற்றுகிறது. இரானிடம் அணு ஆயுதங்கள் இல்லை. தனது அணுசக்தி திட்டத்தைப் பயன்படுத்தி அணு ஆயுத நாடாக மாறுவதற்கு முயற்சிக்கிறது என்ற குற்றச்சாட்டை இரான் தொடர்ந்து மறுத்து வருகிறது.கடந்த ஆண்டு, உலகளாவிய அணுசக்தி கண்காணிப்பு அமைப்பு இரானின் நிலத்தடி ஃபோர்டோ தளத்தில் யுரேனியம் துகள்கள் 83.7% தூய்மையுடன் செறிவூட்டப்பட்டதைக் கண்டறிந்தது. இது அணு ஆயுதம் தயாரிப்பதற்கு தேவையான தரத்துக்கு மிக நெருக்கமான அளவாகும். இதுபற்றி, செறிவூட்டல் நிலைகளில் ‘எதிர்பார்க்கப்படாத ஏற்ற இறக்கங்கள்’ ஏற்பட்டிருக்கலாம் என்று இரான் கூறியது. உலகின் வல்லரசு நாடுகளுடன் 2015 ஆண்டு செய்துகொண்ட அணுசக்தி ஒப்பந்தத்தை மீறி இரான் கடந்த இரண்டு ஆண்டுகளுக்கும் மேலாக 60% தூய்மையான யுரேனியத்தை வெளிப்படையாகச் செறிவூட்டி வருகிறது.

இருப்பினும், இந்த ஒப்பந்தத்திலிருந்து அப்போதைய அமெரிக்க அதிபர் டொனால்ட் டிரம்ப் வெளியேறி, 2018—இல் இரான் மீது பொருளாதாரத் தடைகளை மீண்டும் கொண்டுவந்ததிலிருந்து இந்த ஒப்பந்தம் உடைந்துபோகும் நிலையில் உள்ளது. இஸ்ரேல் இந்த அணுசக்தி ஒப்பந்தத்திற்கு எதிராக இருந்து வந்துள்ளது.

“நாங்கள் தடுத்தோம். இடைமறித்தோம். ஒன்றாக வெற்றி பெறுவோம்“ என்று இஸ்ரேலிய பிரதமர் பெஞ்சமின் நெதன்யாகு தெரிவித்திருக்கிறார். ஆனால், பல பிரிட்டன் பிரதமர்களின் வெளியுறவுக் கொள்கை ஆலோசகரும், லெபனானுக்கான முன்னாள் பிரிட்டிஷ் தூதருமான டாம் பிளெட்சர், இரானிய தாக்குதல் ‘இரானின் திறன் மற்றும் பரவலைப் பற்றிய ஒரு சமிக்ஞை’ என்றார்.

இரான் மற்றும் இஸ்ரேல் ஆகிய இரு நாடுகளின் தலைமைகளும் ‘உள்நாட்டில் அழுத்தத்தில் உள்ளன, சர்வதேச விமர்சனங்களை எதிர்கொள்கின்றன, நெருப்புடன் விளையாடத் தயாராக உள்ளன’ என்று அவர் எச்சரித்தார். ஆனால் இரானின் முன் எப்போதும் இல்லாத வகையிலான இந்தத் தாக்குதல் கவனமாகத் திட்டமிடப்பட்டதாகத் தெரிகிறது என்று அவர் கூறினார். “இரான் நேரடியாக இஸ்ரேலின் இறையாண்மையை மீறுவதும், அதன்மீது தாக்குதல் நடத்துவதும் இதுவே முதல் முறை. இந்தத் தாக்குதல் நிச்சயமாக

தெளிவாகத் திட்டமிடப்பட்டது, அதிக சேதத்தை ஏற்படுத்தவோ, யாரையும் காயப்படுத்தக்கூடாது என்ற நோக்கத்துடன் ராணுவக் கட்டமைப்புகளை மட்டும் குறிவைத்தன," என்றார்.

இஸ்ரேல் — இரான் மோதல்: இந்தியாவுக்கு ஏற்படுத்தும் பாதிப்புகள்இரான் மற்றும் இஸ்ரேல் இடையே ஏப்ரல் 1இல் தொடங்கிய பதற்ற நிலை தற்போது மத்திய கிழக்கு முழுவதும் பரவும் அபாயத்தை ஏற்படுத்தியுள்ளது. கடந்த வாரம், இரான் 300க்கும் மேற்பட்ட ட்ரோன்கள் மற்றும் ஏவுகணைகள் மூலம் இஸ்ரேல் மீது தாக்குதல் நடத்தியது. ஏப்ரல் 1ஆம் தேதி சிரியாவின் டமாஸ்கஸில் உள்ள இரான் துணைத் தூதரகத்தின் மீது தாக்குதல் நடத்தப்பட்டதில் இருந்து இது குறித்த அச்சம் நிலவி வந்தது. இந்தத் தாக்குதலுக்கு இஸ்ரேல்தான் பொறுப்பு என்று இரான் கூறியது.

இந்தக் குற்றச்சாட்டு குறித்து இதுவரை இஸ்ரேல் எந்தவித கருத்தையும் தெரிவிக்காத நிலையில், இஸ்ரேல் இரான் மீது தாக்குதல் நடத்தியுள்ளதாக அமெரிக்கா கூறியுள்ளது. இதனால் அந்த பிராந்தியத்தில் பதற்றம் அதிகரிப்பதற்கான வாய்ப்புகள் இருப்பதாகவும் கூறப்படுகிறது. இரான் மற்றும் இஸ்ரேல் ஆகிய இரு நாடுகளுடனும் இந்தியா நல்லுறவைக் கொண்டிருப்பதால், இந்த நிலை இந்தியாவுக்கு மேலும் தொந்தரவாக மாறும் என நிபுணர்கள் கருதுகின்றனர்.மேலும், மேற்காசிய நாடுகளில் ஏராளமான இந்தியர்கள் வசிக்கின்றனர்.எனவே, இரானுக்கும் இஸ்ரேலுக்கும் இடையிலான மோதல் இந்திய பொருளாதாரத்தையும் பாதிக்கும் என்று அவர்கள் கருதுகின்றனர். தற்போது இஸ்ரேலில் சுமார் 18 ஆயிரம் இந்தியர்கள் உள்ளனர், இரானில் 5 முதல் 10 ஆயிரம் இந்தியர்கள் வசித்து வருகின்றனர். இரானின் தாக்குதலுக்குப் பிறகே, இந்திய வெளியுறவு அமைச்சகம் அறிக்கை ஒன்றை வெளியிட்டது. அதில் இரு நாடுகளும் ராஜதந்திர உத்தியைப் பின்பற்றுமாறு கேட்டுக் கொண்டது. மேலும், இந்தியர்கள் இந்த இரு நாடுகளுக்கும் பயணிக்க வேண்டாமென்றும் பயண வழிகாட்டுதல்களை வெளியிட்டிருந்தது.

இரானுக்கும் இஸ்ரேலுக்கும் இடையிலான மோதலுக்கு மத்தியில், இந்த இரு நாடுகள் மற்றும் மேற்கு ஆசியாவின் பிற நாடுகளில் வசிக்கும் லட்சக்கணக்கான இந்தியர்களின் பாதுகாப்பே இந்தியாவின் மிகப்பெரிய சவாலாக இருப்பதாக நிபுணர்கள் நம்புகின்றனர். தனது பயண வழிகாட்டுதலின்படி, இஸ்ரேல் அல்லது இரானுக்கு பயணம் செய்ய எந்தவிதமான தடையையும் இந்தியா விதிக்கவில்லை. மாறாக முன்னெச்சரிக்கை நடவடிக்கையாக அங்கு பயணம் செய்வதைத் தவிர்க்குமாறு கேட்டுக்கொண்டுள்ளது.

தற்போது இஸ்ரேலில் சுமார் 18 ஆயிரம் இந்தியர்கள் உள்ளனர், இரானில் 5 முதல் 10 ஆயிரம் இந்தியர்கள் வசித்து வருகின்றனர். ஹமாஸுடனான போர் தொடங்கிய பிறகு இஸ்ரேலில் கட்டுமானத் துறையில் தொழிலாளர்களுக்குக் கடும் தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளது. இந்தப் பற்றாக்குறையைப் பூர்த்தி செய்வதற்காக, இந்திய அரசுக்கும் இஸ்ரேல்




அரசுக்கும் இடையிலான ஒப்பந்தத்தின்படி, உத்தர பிரதேசம் மற்றும் ஹரியாணாவில் இருந்து 10 ஆயிரம் தொழிலாளர்கள் முழு சோதனைக்குப் பிறகு இஸ்ரேலுக்கு அனுப்பப்பட உள்ளனர். ஏற்கெனவே ஹரியாணாவில் இருந்து சுமார் 530 தொழிலாளர்கள் இஸ்ரேலுக்கு சென்றுள்ளனர். ஆனால் இந்திய அரசு பயண ஆலோசனை வெளியிட்ட பிறகு, மீதமுள்ள தேர்வு செய்யப்பட்ட தொழிலாளர்களின் நிலை அந்தரத்தில் தொங்கிக் கொண்டிருக்கிறது.

உலக விவகாரங்களுக்கான இந்திய கவுன்சிலை சேர்ந்த மூத்த உறுப்பினர் டாக்டர். ஃபஸுர் ரஹ்மான் கூறுகையில், “ 90 லட்சம் முதல் 10 மில்லியன் இந்தியர்கள் வரை மேற்காசிய நாடுகளில் வாழ்கின்றனர். அவர்கள் ஒவ்வோர் ஆண்டும் சுமார் 50 முதல் 55 லட்சம் டாலர்களை இந்தியாவுக்கு அனுப்புகிறார்கள். இந்தியாவுக்கு எண்ணெய் விற்பனை செய்யும் முக்கிய நாடுகளான சௌதி அரேபியா, இரான் உள்ளிட்ட முன்னணி நாடுகள் மேற்கு ஆசியாவில்தான் உள்ளன. எனவே இந்தப் பிராந்தியத்தில் பதற்றம் அதிகரித்தால், அது




நிச்சயமாக இந்தியாவுக்கு சிக்கலாக அமையும்." என்கிறார். அதேநேரம் ஜாமியா மில்லியா இஸ்லாமியா பல்கலைக்கழகத்தில் உள்ள நெல்சன் மண்டேலா மையத்தின் பேராசிரியரான டாக்டர் பிரேமானந்த் மிஸ்ரா கூறுகையில், "காஸாவில் நடந்து வரும் இஸ்ரேலிய தாக்குதலுக்கு பதிலடியாக செங்கடலில் ஹூத்தி கிளர்ச்சியாளர்களின் தாக்குதல்கள் அதிகரித்துள்ளன. இதன் காரணமாக, ஏற்பட்டுள்ள பாதிப்பு கடல் வர்த்தக பாதைகளில் ஏற்கெனவே வெளிப்படையாகத் தெரிகிறது. இந்நிலையில் இரான் மற்றும் இஸ்ரேலுக்கு இடையே போர் சூழல் ஏற்பட்டால், இந்தியா நீண்ட காலத்திற்கு நடுநிலைக் கொள்கையைக் கடைபிடிப்பது கடினம்," என்கிறார்.

இரான் மீதான இஸ்ரேலின் தாக்குதல் உறுதியானதையடுத்து, உலகளவில் கச்சா எண்ணெய் மற்றும் தங்கத்தின் விலை அதிகரித்துள்ளது. வெள்ளியன்று, ஆசியாவில் கச்சா எண்ணெய் விலை மூன்று சதவீதம் அதிகரித்துள்ளது. கச்சா எண்ணெய் விலை பேரலுக்கு 90 டாலர்களை எட்டியுள்ளது. இஸ்ரேல் மீதான இரானின் தாக்குதலுக்குப் பிறகு, இந்திய வெளியுறவு அமைச்சகம் இதுகுறித்த தனது கவலையை வெளிப்படுத்தும் வகையில் அறிக்கை ஒன்றை வெளியிட்டது. அதில் இந்தப் பிராந்தியத்தின் அமைதி மற்றும் பாதுகாப்பைப் பேணுவது எவ்வளவு முக்கியம் என்பதையும் குறிப்பிட்டிருந்தது. ராஜதந்திர உறவுகளின் மூலம் வன்முறை மற்றும் தாக்குதலில் இருந்து உடனடியாகப் பின்வாங்க வேண்டும் என்று நாங்கள் வலியுறுத்துகிறோம் என இந்தியா கூறியது.ஆனால் இந்தியா வெளியிட்டுள்ள அறிக்கையில் அதன் வெளியுறவுக் கொள்கையில் முரண்பாடு தெரிவதாக நிபுணர்கள் கருதுகின்றனர். முன்பு இரான் மீது அமெரிக்கா விதித்திருந்த தடைகள் இருந்ததாகவும், ஆனால் தற்போது நிலைமை வேறு என்றும் நம்புகிறார் பிரேமானந்த் மிஸ்ரா.

தற்போது இஸ்ரேலுடனான உறவைத் தக்கவைத்துக்கொள்ள இந்தியா விரும்பினால், அது இரானுடனான உறவை மோசமாக்கிவிடும். இதுவே இரானுடன் நெருங்கிப் பழகினால், அது இஸ்ரேல் மற்றும் அமெரிக்காவின் அதிருப்திக்கு ஆளாக நேரிடும்.

இந்தியாவை பொறுத்தவரை 'முன்னால் கிணறு, பின்னால் குழி' என்ற சூழலில் சிக்கிக்கொண்டுள்ளதாகக் கூறுகிறார் பிரேமானந்த் மிஸ்ரா. தொடர்ந்து அதிகரித்து வரும் பதற்றம் காரணமாக, இந்த விவகாரத்தில் இந்தியா அமைதி காப்பது அல்லது நீண்ட காலம் நடுநிலையாக இருப்பது கடினமானதாக இருக்கலாம் என்றும் கூறுகிறார் அவர்.இஸ்ரேலுடனான இந்தியாவின் ராஜ்ஜீய உறவின் வரலாறு ஒன்றும் மிக நீண்டதல்ல. 1948ஆம் ஆண்டில்தான் இஸ்ரேல் ஒரு நாடாக உருவானது. இந்தியா அதனுடன் 1992இல் ராஜ்ஜீய உறவுகளை ஏற்படுத்திக் கொண்டது. ஆனால், அன்றிலிருந்து இஸ்ரேலுடனான இந்தியாவின் உறவு நாளுக்கு நாள் வலுவடைந்து வந்துள்ளது.

தற்போது இந்தியாவுக்கு ஆயுதங்கள் மற்றும் தொழில்நுட்பங்களை ஏற்றுமதி செய்யும் முன்னணி நாடுகளில் இஸ்ரேலும் உள்ளது. மாறாக, இரானுடன் இந்தியா நீண்டகால உறவுகளைக் கொண்டுள்ளது. இந்தியாவுக்கு எண்ணெய் வழங்கும் முக்கிய நாடுகளில் இரானும் ஒன்று. அணுசக்தித் திட்டம் காரணமாக இரான் மீது சர்வதேச தடைகள் விதிக்கப்படுவதற்கு முன்பு, இந்தியாவிற்கு அதிகம் எண்ணெய் ஏற்றுமதி செய்யும் நாடுகளில் இரான் இரண்டாவது இடத்தில் இருந்தது. இஸ்ரேலிய ராணுவத்தில் உள்ள யூத பழமைவாத படைப் பிரிவான நெட்ஸா யெஹூதா (Netzah Yehuda) என்ற படைப்பிரிவின் மீது அமெரிக்கா பொருளாதாரத் தடைகளை

விதிக்கத் திட்டமிடுவதாக உறுதிப்படுத்தப்படாத செய்திகள் வெளியாகியிருக்கின்றன. இதற்கு இஸ்ரேலிய அரசியல்வாதிகள் கோபமாக எதிர்வினையாற்றியுள்ளனர்.ஆக்கிரமிக்கப்பட்ட மேற்குக் கரையில் மனித உரிமை மீறல் சம்பவங்கள் நடந்ததாகக் கூறப்படுவதால் இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக ஏக்சியோஸ் (Axios) செய்தி இணையதளம் தெரிவித்துள்ளது.

இந்த முடிவு அமலுக்கு வந்தால், ஓர் இஸ்ரேலிய ராணுவப் பிரிவின் மீது அமெரிக்க அரசு தடை விதிப்பது இதுவே முதல் முறையாக இருக்கும்.இதுகுறித்து பதிலளித்த இஸ்ரேல் ராணுவம், நெட்ஸா யெஹூதா படை மீது 'அமெரிக்கத் தடைகள் பற்றி எதுவும் தெரியாது' என்று கூறியது. மேலும், அந்தப் படை 'சர்வதேசச் சட்டத்தின் கொள்கைகளின்படி செயல்படும் ஒரு போர்ப் பிரிவு' என்றும் கூறியது."இது தொடர்பாக ஒரு முடிவு எடுக்கப்பட்டால், அது மறுபரிசீலனை செய்யப்படும்," என்று இஸ்ரேலிய ராணுவம் கூறியிருக்கிறது. மேலும், "எந்தவொரு அசாதாரணமான சம்பவம் நடந்திருந்தாலும் அதை நடைமுறை அளவிலும், சட்டத்தின் படியும் விசாரிக்கத் தொடர்ந்து பணியாற்றும்," என்றும் கூறியது. நெட்ஸா யெஹூதா மீது அமெரிக்கா தடை விதித்தால், அந்தப் பிரிவுக்கு அமெரிக்க ராணுவ உதவி அல்லது பயிற்சிகள் கிடைக்காது என அமெரிக்க வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

பாலத்தீனயர்களுக்கு எதிராக இந்தப் படைப்பிரிவு நடத்திய தாக்குதல்கள் பற்றிய விசாரணைகளின் முடிவுகளை அமெரிக்கா இஸ்ரேலிடம் பலமுறை கோரியதாக, இஸ்ரேலிய அதிகாரிகளை மேற்கோள் காட்டி இஸ்ரேலிய பொது ஒலிபரப்பு கூட்டுத்தாபனம் செய்தி வெளியிட்டுள்ளது.இஸ்ரேல், பாலத்தீனம், யூதர்கள், நெட்ஸா யெஹூதா, மனித உரிமை மீறல், அமெரிக்கா, போர்படக்குறிப்பு, இஸ்ரேலில் பழமைவாத யூதக் குழுவினாரன 'ஹரேடி யூத' சமுதாயத்தைச் சேர்ந்த பலரும் கட்டாய ராணுவச் சேவையில் சேர மறுக்கிறார்கள்

இஸ்ரேலின் காட்டமான எதிர்வினை அமெரிக்கத் தடைகள் குறித்த இந்தச் செய்தியறிக்கைகளுக்கு இஸ்ரேலிய பிரதமர் பெஞ்சமின் நெதன்யாகு கோபமாக எதிர்வினை ஆற்றியிருக்கிறார். இந்தத் தடைகள் அமலுக்கு வந்தால், அவை 'அபத்தத்தின் உச்சமாகவும், தார்மீக வீழ்ச்சியாகவும்' இருக்கும் என பெஞ்சமின் நெதன்யாகு கூறினார். இஸ்ரேல் அரசின் போர்க்குழு அமைச்சர் பென்னி காண்ட்ஸ், இந்த இஸ்ரேலிய ராணுவப் பிரிவின் மீது அமெரிக்கா தடைகளை விதிப்பது ஒரு 'ஆபத்தான முன்னுதாரணம்' என்று கூறினார். அமெரிக்க வெளியுறவு அமைச்சர் ஆண்டனி பிளிங்கனுடனான ஒரு தொலைபேசி உரையாடலில், அமெரிக்கா இந்த முடிவை மறுபரிசீலனை செய்ய வேண்டும் என்று அவர் கோரிக்கை விடுத்தார்.

நெட்ஸா யெஹூதா படையின் மீது பொருளாதாரத் தடைகளை விதிப்பது, நடந்துவரும் போரின் போது 'இஸ்ரேலின் சட்டபூர்வமான நிலைப்பாட்டுக்குத் தீங்கு விளைவிக்கும்' என்று காண்ட்ஸ் கூறினார். "ராணுவப் படைப் பிரிவுகள் சர்வதேச சட்டத்தின் உத்தரவுகளுக்கு உட்பட்டவை என்பதால் அவற்றின் மேல் தடைகளை விதிப்பதற்கு எந்த நியாயமும் இல்லை," என்று அவர் கூறினார். அமெரிக்கா பரிசீலித்துவரும் தடைகளுக்கு எதிர்வினையாற்றிய இஸ்ரேலின் பாதுகாப்பு அமைச்சர் இடாமர் பென்—க்விர், இஸ்ரேல் மூலம் பாலத்தீன அதிகார அமைப்புக்கு வழங்கப்பட்ட அனைத்து நிதியையும் பறிமுதல் செய்ய அழைப்பு விடுத்தார்.நெட்ஸா யெஹூதா படைப்பிரிவுக்கு எதிரான எந்தவொரு தடையும் "பாலத்தீன அதிகாரத்தில் இருக்கும் இஸ்ரேலின் எதிரிகளை ஆதரிப்பதாக" இருக்கும் என்று பென்—க்விர் கூறினார்.இஸ்ரேலின் போர்க்குழு அமைச்சர் காடி ஐசென்கோட், நெட்ஸா யெஹூதா படைப்பிரிவின் மீது பொருளாதாரத் தடைகளை விதிப்பது 'அடிப்படையில் தவறானது' என்று கூறினார்.

இஸ்ரேலிய நிதியமைச்சர் பெசலெல் ஸ்மோட்ரிச், இந்த நடவடிக்கை 'பைத்தியக்காரத்தனமானது மற்றும் பாலத்தீன அரசை உருவாக்கும் முடிவை இஸ்ரேல் மீது திணிக்கும் முயற்சி' என்று விவரித்தார். இஸ்ரேலிய எதிர்க்கட்சித் தலைவர் யேர் லாபிட், "இஸ்ரேலிய அரசாங்கத்தின் சட்டவிரோத கொள்கை மற்றும் அரசியல் தோல்வியால் முதலில் பாதிக்கப்படுவது இஸ்ரேலிய ராணுவமும் அதன் தலைவர்களும்தான்," என்றார். ஆனாலும் அவர் நெட்ஸா யெஹூதா படைப்பிரிவின் மீதான பொருளாதாரத் தடைகள் 'தவறானவை, தடுக்கப்படவேண்டியவை' என்றார் ஆனால் இவை அனைத்திற்கும் எதிரான கருத்தைத் தெரிவித்த இஸ்ரேலிய தொழிலாளர் கட்சியின் தலைவரான மெராவ் மைகெலி, நெட்ஸா யெஹூதா படைப்பிரிவை கலைக்க அழைப்பு விடுத்தார். இப்படையின் 'மூர்க்கத்தனமான, ஊழல் மலிந்த' செயல்பாடுகள் 'பல வருடங்களாக அனைவருக்குக் தெரிந்ததே' என்றார்.இஸ்ரேலில் ராணுவ சேவை கட்டாயமாகும். ஆண்கள் சுமார் மூன்று ஆண்டுகளும், பெண்கள் இரண்டு ஆண்டுகளும் கட்டாய ராணுவச் சேவை செய்யவேண்டும். ஆனால், யூத மத நம்பிக்கையில் வேரூன்றிய பழமைவாத யூதக் குழுவினாரன 'ஹரேடி யூத' சமுதாயத்தைச் சேர்ந்த பலரும் கட்டாய ராணுவச் சேவையில் சேர மறுக்கிறார்கள். ஏனெனில்,



அவர்கள் தோரா (ஹீப்ரு யூத பைபிளின் முதல் ஐந்து புத்தகங்கள்) மற்றும் மத புத்தகங்களின் விளக்கங்களை கற்றுக்கொள்வதில் தங்கள் நேரத்தை செலவிடுகிறார்கள், என்று தலைமை ராபி (யூத மதகுரு) யிட்சாக் யோசெப் கூறுகிறார்.

இருப்பினும், அனைத்து இளம் ஹரேடி யூதர்களும் மதக் கல்லூரியில் சேருவதில்லை. சிலர் தங்கள் மதக்கல்வி பாதிக்காததை உறுதி செய்துகொண்டு, சிறப்பு நிபந்தனைகளோடு ராணுவத்தில் சேர்கிறார்கள்.கடந்த 1999—ஆம் ஆண்டு, 'நஹால் ஹரேடி' என்ற லாப நோக்கற்ற அமைப்பு செயல்படத் துவங்கியது. இதில் ஹரேடி யூத மதகுருக்கள் உறுப்பினர்களாக இருந்தனர். அவர்கள் பாதுகாப்பு அமைச்சகம் மற்றும் இஸ்ரேலிய ராணுவத்துடன் இணைந்து மதப்பள்ளிகளில் படிக்காத இளம் ஹரேடிகளுக்கு அவ்வமைப்பில் இடமளித்தனர். இந்த ஒத்துழைப்பின் விளைவாக ஆயிரக்கணக்கான ஹரேடி வீரர்களைக் கொண்ட நெட்ஸா யெஹூதா படைப்பிரிவு உருவாக்கப்பட்டது.

நஹால் ஹரேடி அமைப்பு, 'ஹரேடி ஆண்கள் தங்கள் ஹரேடி வாழ்க்கை முறையை சமரசம் செய்துகொள்ளாமல் இஸ்ரேலிய ராணுவத்தில் மதிப்புமிக்க பதவிகளில் பணியாற்ற உதவும் கொள்கைகள் மற்றும் கட்டுப்பாடுகளை கடைபிடிக்கிறது,' என்று கூறுகிறது.கடந்த 1999—ஆம் ஆண்டு, 30 ஹரேடி வீரர்களைக் கொண்ட முதல் படைப்பிரிவு உருவாக்கப்பட்டது. ஹரேடிகளை ராணுவத்தில் அறிமுகப்படுத்தும் யோசனையை முன்வைத்த பொதுமக்கள் அமைப்பின் பெயரால் இப்படை 'நஹல் ஹரேடி', 'நெட்சா யெஹூதா' அல்லது 'பட்டாலியன் 97' என்று பெயரிடப்பட்டது.

இஸ்ரேலிய ராணுவம் முதல் ஹரேடி போர் படைப்பிரிவினை உருவாக்கி, இஸ்ரேலின் கட்டுப்பாட்டில் இருக்கும் பாலஸ்தீனப் பகுதியான மேற்குக் கரையில் இருக்கும் ரமல்லா மற்றும் ஜெனின் ஆகிய நகரங்களில் செயல்பட்டது. கடந்த 2019—ஆம் ஆண்டில், ஹீப்ரு செய்தித்தாளான 'யெடியோத் அஹ்ரோனோத்', இஸ்ரேலிய ராணுவம் நெட்ஸா யெஹூதா படைப்பிரிவினை ரமல்லாவிலிருந்து ஜெனினுக்கு மாற்ற முடிவு செய்ததாகத் தெரிவித்தது.

கடந்த 2022—ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் மேற்குக் கரையில் இருந்த நெட்ஸா யெஹூதா படைப்பிரிவினை இஸ்ரேல் பட்டாலியனை இடம் மாற்றியது. ஆனாலும் இந்த மாற்றம் அப்படை வீரர்களின் நடத்தை காரணமாக இந்த மாற்றம் செய்யப்படவில்லை என்று இஸ்ரேலிய ராணுவம் கூறிவருகிறது.அதிலிருந்து இப்படை இஸ்ரேலின் வடக்கில் இயங்கி வருகிறது.இந்த ஆண்டின் துவக்கத்தில், ஜெருசலேம் போஸ்ட் செய்தித்தாளின் ஓர் அறிக்கையின்படி, காஸாவில் நடக்கும் போரில் இந்தப் படைப்பிரிவு சண்டையிடத் தொடங்கியது.

லெபனான், சிரியா மற்றும் காஸாவில் நெட்சா யெஹூதா படையினரை உள்ளடக்கிய 'க்ஃபிர்' (Kafir) படை சண்டையிடும் என்று இஸ்ரேலின் முன்னாள் ராணுவத் தளபதி அவிவ் கொச்சாவி கூறினார்.தற்போது, நெட்சா யெஹூதா படைப்பிரிவில் சுமார் 1,000 வீரர்கள் உள்ளனர். இவர்கள் பயிற்சியிலோ அல்லது போர்ப் பணியிலோ உள்ளனர்.இந்தப் படைப்பிரிவின் வீரர்கள் இஸ்ரேல் ராணுவத்தில் மொத்தம் இரண்டு ஆண்டுகள் 8 மாதங்கள் பணியாற்றுகின்றனர்.

'டைம்ஸ் ஆஃப் இஸ்ரேல்' செய்தித்தாளின் அறிக்கையின்படி, இந்தப் படையின் ஆண் வீரர்கள், பெண் துருப்புகளுடன் தொடர்பு கொள்வதில்லை. மேலும் அவர்களுக்கு தொழுகை மற்றும் மதநூல்கள் படிப்பதற்கு கூடுதல் நேரம் கொடுக்கப்படுகிறது.கடந்த 2022—ஆம் ஆண்டு ஜனவரி மாதம், 79 வயதான பாலஸ்தீன—அமெரிக்கர் உமர் அசாத்தை நெட்ஸா யெஹூதா படைப்பிரிவின் உறுப்பினர்கள் கொன்றதாகக் குற்றம் சாட்டப்பட்டது. அவர் ஒரு சோதனைச் சாவடி அருகே கைது செய்யப்பட்டார். ஆசாத்தின் குடும்பத்தினர், ராணுவ வீரர்கள் அவரது கைகளை மற்றும் வாயைக் கட்டி, தரையில் கிடத்தியதாகக் கூறினர். பின்னர் அவர் தரையில் பிணமாகக் கண்டெடுக்கப்பட்டார்.

இச்சம்பவத்தை விசாரித்த இஸ்ரேல் பாதுகாப்புப் படைகள், இதனை "படைகளின் தார்மீக தோல்வி, அவர்களது தவறான முடிவு, மற்றும் மனித



கண்ணியத்தின் மதிப்பை கடுமையாக பாதிக்கும் செயல்," என்று அறிவித்தன.இச்சம்பவத்தைத் தொடர்ந்து, நெட்ஸா யெஹூதா படைப்பிரிவின் தளபதி கண்டிக்கப்பட்டார். அப்படையின் நிறுவனத் தளபதி மற்றும் சிப்பாய்களின் படைப்பிரிவு தளபதி பணியிலிருந்து நீக்கப்பட்டனர். ஆனால், இப்படையின் வீரர்களுக்கு எதிரான குற்றவியல் விசாரணை அவர்களை விசாரிக்காமலேயே மூடப்பட்டது. பாலத்தீன குடிமக்களுக்கு எதிரான பல வன்முறைச் சம்பவங்களில் அப்படையினர் ஈடுபட்டதையடுத்து, அமெரிக்க வெளியுறவுத்துறை 2022—ஆம் ஆண்டின் பிற்பகுதியில் நெட்ஸா யெஹூதா படைப்பிரிவினை விசாரிக்கத் துவங்கியது. இந்த விசாரணைகளில் உமர் அசாத் கொல்லப்பட்ட சம்பவமும் அடங்கும் என்று 'ஹாரெட்ஸ்' செய்தித்தாள் தனது அறிக்கையில் தெரிவித்திருந்தது.

கடந்த ஆண்டு அக்டோபர் 7—ஆம் தேதி காஸா பகுதியை இஸ்ரேலிய ராணுவம் தாக்கத் துவங்கியதில் இருந்து, பாலத்தீனர்களுக்கு எதிராக நடந்த வன்முறைச் சம்பவங்கள் காரணமாக, தனிப்பட்ட இஸ்ரேலிய குடியேற்றவாசிகளுக்கு எதிராக அமெரிக்கா மூன்று தடைகளை விதித்துள்ளது. அமெரிக்க வெளியுறவுத்துறையின் கூற்றுப்படி, மனித உரிமை மீறல்களில் ஈடுபட்டது நிரூபிக்கப்பட்ட வெளிநாட்டு அரசாங்கங்களுக்கு அமெரிக்க உதவி செய்வதை லேஹி விதிகள் தடை செய்கிறது.தடை செய்யப்பட்ட உதவி வகைகளில், அமெரிக்க பாதுகாப்புத் துறையின் பயிற்சித் திட்டங்களும் அடங்கும்.இத்தகைய மனித உரிமை மீறல்களுக்குப் பொறுப்பான அரசாங்கங்களுக்குத் தகுந்த தண்டனை வழங்கப்பட்டால், அமெரிக்க வெளிநாட்டு உதவி மீண்டும் துவங்கப்படலாம்.லேஹி விதிகள் "வெளிநாட்டுப் படைப்பிரிவுகள் தீவிர மனித உரிமைகள் மீறலில் ஈடுபட்டதுபற்றி நம்பத்தகுந்த தகவல் இருந்தால், அப்படைப் பிரிவுகளுக்கு வழங்கப்படும் நிதிக்கும் பொருந்தும்," என்று அமெரிக்க வெளியுறவுத்துறை கூறுகிறது.

அமெரிக்கா கொண்டுவர விரும்பும் விசாரணைகளில் அரசியல், பாதுகாப்பு மற்றும் மனித உரிமைகள் தொடர்பான பிற பிரச்சினைகளும் அடங்கும். அமெரிக்க அரசாங்கத்தால் அங்கீகரிக்கப்பட்ட அதிகாரிகள் பொது மற்றும் ரகசியப் பதிவுகளை மதிப்பாய்வு செய்வர். அமெரிக்க அரசாங்கம் 'சித்ரவதை, சட்டத்தை மீறிய கொலை, வலிந்து காணாமல் ஆக்கப்படுவது மற்றும் சட்டத்தின் போர்வையில் நடத்தப்படும் பாலியல் வன்புணர்வு ஆகியவற்றை தீவிர மனித உரிமை மீறலாகக் கருதுகிறது. இந்தக் குற்றங்கள் நிரூபிக்கப்படும்போது லேஹி விதிகள் அமலுக்கு வரும். 1990—களின் பிற்பகுதியில் இந்தச் சட்டத்தை முன்மொழிந்த அமெரிக்க பாராளுமன்ற உறுப்பினர் பேட்ரிக் லேஹியின் நினைவாக இச்சட்டத்திற்கு பெயரிடப்பட்டது.

சர்வதேச தடைகள் இருந்தபோதிலும்கூட, இந்தியா இரானுடன் சமநிலையான உறவைக் கடைபிடித்து வந்தது. இந்திய வெளியுறவுத்துறை அமைச்சர் ஜெய்சங்கர் இந்த ஆண்டு இரானுக்கு பயணம் சென்றிருந்தார். அந்த நேரத்தில் சபஹர் துறைமுகம் குறித்தும் விவாதிக்கப்பட்டது. சபாஹர் துறைமுக கட்டுமான திட்டத்தில் இந்தியாவும் முதலீடு செய்துள்ளது. மூலோபாயக் கண்ணோட்டத்தில், இந்தத் துறைமுகம் இந்தியா மற்றும் இரான் ஆகிய இரு நாடுகளுக்கும் முக்கியமானது.

மேற்கத்திய நாடுகளின் பொருளாதாரத் தடைகளின் தாக்கத்தைக் குறைக்க இந்தத் துறைமுகம் இரானுக்கு உதவியாக அமையும். அதே நேரத்தில், ஆப்கானிஸ்தான் மற்றும் மத்திய ஆசியாவுடன் வர்த்தகம் செய்ய இந்தியா பாகிஸ்தான் வழியாகச் செல்ல வேண்டியதில்லை. காஸாவில் நடந்து வரும் போரை நிறுத்த இந்தியா சர்வதேச அமைப்புகளின் வழியாகத் தீவிர பங்காற்ற வேண்டும். இருப்பினும், இரான் மற்றும் இஸ்ரேல் இடையே இந்தியா மத்தியஸ்தம் செய்ய ஒரு வாய்ப்பு அமைந்தால், அது இந்தியாவுக்கு அவ்வளவு எளிதாக இருக்காது.

# கருத்துப் ப(ா)டம்

நன்றி: தினமலர்





# சொல்றாங்க... சொல்றாங்க...



*"போர்நிறுத்த திட்டத்துக்கு ஒப்புதல்! ஹமாஸிடம் வலியுறுத்தி உள்ளோம்!"*

**ஆன்டனி பிளிங்கன்**

*(பிள்ளையைக் கிள்ளி விட்டு தொட்டிலை ஆட்டும் வேலை, உங்க ஆளுங்களுக்கு கைவந்த கலைதானே!)*



*"நிச்சயம் உலக சாம்பியன் பட்டம் வெல்வேன்!"*

**குகேஷ்**

*(நம்பினோர் கெடுவதில்லை! இது நான்குமறைத் தீர்ப்பு!)*



*"நடராஜன் கவனிக்கப்படவில்லை!"*

**முத்தையா முரளிதரன்**

*(இந்திய கிரிக்கெட்டிலும் தமிழர்கள் கவனிக்கப்படவே இல்லைன்னு பலர் கூவிக்கொண்டே இருக்காங்க! அதுவும் கேட்கப்படவில்லை! கவனிக்கப்படவில்லை!)*



*"டிரெஸ்ஸிங் ரூமில் அனைவருமே மிகுந்த அனுபவம் வாய்ந்தவர்கள். அவர்களிடம் இப்படி ஆடுங்கள் இப்படி வீசுங்கள் எனக் கூற முடியாது. அதனால் நான் அவர்களுக்கு பின்னால் இருந்து கொள்கிறேன் அவ்வளவுதான்!"*

**ருதுராஜ் கெய்க்வாட்**

*அனுபவ வீரர்களோடு இருப்பதனாலே பேச்சும் பதம், பக்குவம், அனுபவமாத்தான் இருக்கும் போலிருக்கு!)*

# சுருங்கும்

## அமெரிக்காவை ஆட்டுவிக்கும் 'டிக் டாக்'

டிக் டாக் செயலி பயன்படுத்த தடை: டிக் டாக் செயலியை இந்தியாவை தொடர்ந்து பல்வேறு நாடுகள் தடை செய்து வருகிறது. அந்த வகையில் தற்போது டிக் டாக் செயலியை தடை செய்வதற்கான சட்டத்தை அமெரிக்காவின் நாடாளுமன்ற மேலவை நிறைவேற்றியுள்ளதாக தகவல்கள் வெளியாகியுள்ளது. அதாவது டிக் டாக் செயலியின் பிறப்பிடமான சீனாவின் பைட் டான்ஸ் நிறுவனம் 9 மாதங்களுக்குள் டிக் டாக்கின் அமெரிக்க பங்குகளை விற்காவிட்டால் அதை தடை செய்ய இச்சட்டம் வழிவகை செய்துள்ளதாக குறிப்பிடப்பட்டுள்ளது.

குறிப்பாக டிக் டாக் செயலி தங்களுடைய பயனாளர்களின் முக்கியமான தகவல்களை சீனாவிடம் கொடுக்கிறது. இதனால் அமெரிக்கா சட்டத்தை அமெரிக்காவின் நாடாளுமன்ற மேலவை நிறைவேற்றியுள்ளது.

தகவல் தொழில்நுட்பத்தின் வளர்ச்சி மனித வாழ்க்கையை பல்வேறு நிலைகளில் மிகவும் இலகுவாக்கியுள்ளது. அதே நேரத்தில் இத்தொழில்நுட்பம் தவறாகப் பயன்படுத்தும்போது பெரும் சிக்கல்களும் ஏற்படுகின்றன என்பதை மறுப்பதற்கில்லை. அந்த வகையில் இன்று நம் ஒவ்வொருவரின் வாழ்க்கையிலும் நவீன தொழில்நுட்பத்தின் தலைப்பிள்ளையான சமூக ஊடகங்கள் பெரும் தாக்கத்தை ஏற்படுத்தி வருகின்றன.

தகவல்கள், புகைப்படங்களை பரிமாறிக் கொள்வதில் தொடங்கி பல்வேறு தரப்பினரும் பணம் ஈட்டும் இடமாகவும் யூடியூப், ஃபேஸ்புக், இன்ஸ்டாகிராம் உள்ளிட்ட சமூக ஊடகங்கள்




சீனா மீது வழக்குப்பதிவு செய்யப்பட்டுள்ளது. அதாவது இந்த நிறுவனம் பயனாளர்களின் அனுமதியின்றி இரகசியமாகத் தகவல்களை எடுப்பதாக குற்றம் சுமத்தப்பட்டுள்ளது. இதனால் டிக் டாக் செயலியை தடை செய்வதற்கான

திகழ்கின்றன. அதே நேரத்தில் இதுபோன்ற செயலிகள் தேசிய அளவில் பிரச்னைகளை உருவாக்கும் இடமாகவும் திகழ்கின்றன.

அந்த வரிசையில் சீனாவின் டிக் டாக் செயலி அமெரிக்காவுக்கு பெரும் தலைவலியாக

# வலை!


**சு.வெங்கடேஸ்வரன்**

இப்போது உருவெடுத்துள்ளது. டிக் டாக் செயலி அதனைப் பயன்படுத்தும் அமெரிக்கர்களின் தனிப்பட்ட தகவல்களை திருடுகிறது. மேலும், சீன அரசுக்கு எதிரான தகவல்களை தங்கள் செயலியில் பரவவிடாமல் முடக்குகிறது. இவை எல்லாவற்றுக்கும் மேலாக இந்த ஆண்டு இறுதியில் நடைபெற இருக்கும் அமெரிக்க அதிபர் தேர்தலில் சீனா தலையிட இச்செயலியைப் பயன்படுத்த வாய்ப்புள்ளது என்று அமெரிக்க தேசிய புலனாய்வு அமைப்பு எச்சரித்துள்ளது.

இதன் காரணமாகவே அமெரிக்க நிறுவனத்திடம் டிக் டாக் செயலியை அதன் சீன உரிமையாளரான பைட்டான்ஸ் நிறுவனம் விற்றுவிட வேண்டும் அல்லது டிக் டாக் தடை செய்யப்படும் என்று அமெரிக்க நாடாளுமன்றத்தில் தீர்மானம் நிறைவேற்றப்பட்டுள்ளது. இதற்கு அதிபர் ஜோ பைடனும் உடனடியாக கையொப்பமிட்டு ஒப்புதல் வழங்கியுள்ளார்.

இந்த விஷயத்தில் அமெரிக்காவைவிட இந்தியா முன்யோசனையுடன் நடந்து கொண்டது. கடந்த 2020—ஆம் ஆண்டே இந்தியாவில் டிக் டாக் உள்பட பல சீன செயலிகள் ஒரே நேரத்தில் தடை செய்யப்பட்டன. அப்போது இந்தியாவில் சுமார் 20 கோடி பேர் டிக் டாக் பயன்படுத்தி வந்தனர்.

இந்திய, சீன ராணுவ வீரர்கள் இடையே எல்லை மோதல்ஏற்பட்டுபலர்உயிரிழந்தநேரத்தில்நேரத்தில் டிக் டாக் தடை செய்யப்பட்டதால், இந்தியாவின் சிறப்பான பதிலடி நடவடிக்கையாகவும் அது கருதப்பட்டது. சீன செயலிகளை தடை செய்யும் அரசின் முடிவுக்கு மக்களின் ஆதரவும் இருந்தது. அப்போது இந்தியாவின் நடவடிக்கையை முதல் ஆளாக வரவேற்ற அமெரிக்கா, இப்போது தங்கள் நாட்டில் அதனைத் தடை செய்ய தயாராகி வருகிறது. இந்தோனேசியா பாகிஸ்தான், ஆப்கானிஸ்தான், பிரான்ஸ், டென்மார்க், கனடா, பெல்ஜியம் உள்ளிட்ட பல நாடுகளும் டிக் டாக்






செயலிக்கு தடை, கட்டுப்பாடுகளை ஏற்கெனவே விதித்துள்ளன.

இந்தியாவுடன் ஒப்பிடும்போது அமெரிக்காவில் பேச்சு, கருத்து சுதந்திரத்துக்கு கூடுதல் முக்கியத்துவம் அளிக்கப்படுகிறது. எனவே, இந்தியாவில் பாதுகாப்புக் காரணங்களை முன்வைத்து சீன செயலிகளை ஒரே உத்தரவில் மத்திய அரசு தடை செய்ததுபோல அமெரிக்காவில் தடை செய்ய இயலவில்லை. அதற்கான சட்டவிதிமுறைகளைப் பின்பற்றியும், கால அவகாசம் கொடுத்தும் நடவடிக்கை எடுக்க வேண்டியுள்ளது.

மறுபுறம் அமெரிக்க டிக் டாக் பயனாளர்கள் டிக் டாக் தடை செய்யப்படக் கூடாது என்று சமூக வலைதளங்களில் பிரசார இயக்கத்தையும் நடத்தி வருகின்றன. அமெரிக்க நிறுவனத்திடம் டிக் டாக் செயலியை விற்பது என்பது சாத்தியமற்□கவே உள்ளது. ஏனெனில், டிக் டாக் செயலியின் வெற்றிக்கு முக்கியக் காரணமாக உள்ள அதன் அல்கோரிதம் (தரவு பகுப்பாய்வு, தன்னியக்க சிந்தனை உள்ளிட்டவற்றின் தொகுப்பு) தொழில்நுட்பத்தையும் அமெரிக்க நிறுவனத்துக்கு விற்றாக வேண்டும்.


ஆனால், இந்த விற்பனைக்கு சீன அரசின் ஒப்புதலைப் பெறுவது கட்டாயமாகும். சீன அரசு இந்த ஒப்புதலை அளிக்கும் என்பதை எதிர்பாக்கவே முடியாது. ஏனெனில், இது அமெரிக்காவிடம் சரணடைவதற்கு ஒப்பானது என்றே சீன அரசு கருதும்.

இதுபோன்ற அரசியல் தொழில்நுட்பம் சார்ந்த சிக்கல் ஒருபுறம் என்றால் மறுபுறம் டிக் டாக்கை தடை செய்வது அமெரிக்காவில் பொருளாதாரரீதியாகவும் பலருக்கும் பாதிப்பை ஏற்படுத்தும். ஏனெனில், கைப்பேசி செயலிகளை நம்பி கடைவிரித்துள்ள பல அமெரிக்க சிறு தொழில் நிறுவனங்கள் டிக் டாக் செயலி மூலம்தான் பல நூறு கோடி வருவாய் ஈட்டி வருகின்றன.

சுமார் 34 கோடி மக்கள்தொகையைக் கொண்ட அமெரிக்காவில் 17 கோடி பேர் வரை டிக் டாக் பயன்படுத்துகிறார்கள். இதில் பாதிக்கும் மேற்பட்டோர் 24 வயதுக்கும், 89 சதவீதம் பேர் 45 வயதுக்கும் உள்பட்டவர்கள் ஆவர். அமெரிக்காவில் பல்வேறு பொருள்களை விளம்பரப்படுத்துவது, வாங்குவது, பயன்படுத்திவிட்டு கருத்து தெரிவிப்பது என பல்வேறு பொருளாதாரச் செயல்பாடுகளிலும் டிக் டாக் ஆதிக்கம் செலுத்தி வருகிறது.

டிக் டாக்கின் மற்றொரு வடிவமான லெமன்8 செயலியும் அமெரிக்க சமூக வலைதள பயனாளிகள் மத்தியில் பெரும் தாக்கத்தை ஏற்படுத்தி வருகிறது. அந்நாட்டில் தங்கும் விடுதிகள், உணவு, பேஷன் பொருள்கள், நவீன ஆடைகள் விற்பனை, சுற்றுலா என பல்வேறு துறைகளில் லெமன்8 ஆதிக்கம் செலுத்தி வருகிறது. டிக் டாக் தடை செய்யப்படும்போது இந்த செயலியும் வெளியேற்றப்பட வேண்டிய கட்டாயம் ஏற்படும்.

2020—ல் டொனால்டு டிரம்ப் டிக்டாக் செயலிக்குத் தடை விதிக்க முயற்சி மேற்கொண்டார். இதனைத் தொடர்ந்து அமெரிக்காவின் அரசுத் துறையில்




பணி செய்பவர்கள டிக்டாக் செயலியைப் பயன்படுத்துவதற்குத் தடை விதிக்கப்பட்டது. அப்போது, டிக்டாக் மீதான குற்றச்சாட்டிற்கு அதன் சிஇஓ சவ் சி சூவ் அமெரிக்க நாடாளுமன்றக் குழுவில் ஆஜராகி விளக்கமளித்தார்.

இந்நிலையில், தற்போது 352 பாராளுமன்ற உறுப்பினர்கள் ஆதரவுடன் அமெரிக்க நாடாளுமன்றத்தில் டிக்டாக் செயலிக்குத் தடை விதித்து மசோதா நிறைவேறியுள்ளது.

டிக்டாக் மூலம் அமெரிக்கர்களை சீன அரசு உளவு பார்க்கக் கூடிய வாய்ப்பிருப்பதால், அந்த செயலியால் தேச பாதுகாப்புக்கு அச்சுறுத்தல் நிலவி வருவதாக எப்பிஐ இயக்குநர் கிறிஸ் ரே தெரிவித்துள்ளார்.

அண்மையில் மிச்சிகன் பல்கலைக்கழகத்தில் நடந்த நிகழ்ச்சி ஒன்றில் பேசிய அமெரிக்க புலனாய்வு அமைப்பான எப்பிஐயின் இயக்குநர் கிறிஸ் ரே, “டிக்டாக் செயலி முழுக்க முழுக்க சீன அரசின் கட்டுப்பாட்டில் உள்ள ஒரு நிறுவனமாகும். அதன் செயல்பாட்டை சீன அரசு கட்டுப்படுத்துகிறது. எனவே, டிக்டாக்கின் உள்ளடக்கங்களை கையாளவும், சீன அரசு விரும்பினால் அதன் செயல்பாடுகளில் ஆதிக்கம் செலுத்தவும் முடியும். மேலும், அமெரிக்கர்களின் தகவல்களை பெறும் டிக்டாக் அவற்றை சீன அரசுடன் பகிர்ந்து கொள்ள வாய்ப்புண்டு. இத்தகவல் மூலம் அமெரிக்கர்களை சீன அரசால் உளவு பார்க்க முடியும். எனவே இது மிகப்பெரிய தேசப் பாதுகாப்பு அச்சுறுத்தலாக கவலை அளிக்கிறது எனவே அமெரிக்காவிலும் விரைவில் டிக்டாக்கிற்கு தடை விதிக்கப்பட வாய்ப்புகள் உள்ளன” என அவர் தெரிவித்திருந்தார்.

அமெரிக்க நிறுவனங்களின் யூடியூப் சார்ட்ஸ், இன்ஸ்டாகிராம் ரீல்ஸ் ஆகியவற்றைவிட டிக் டாக் அமெரிக்காவில் மக்களை வெகுவாகக் கவர்ந்த, அதிகம் பயன்படுத்தப்படும் செயலியாக உள்ளது.

எனவே, டிக் டாக் செயலியின் தடை அமெரிக்காவில் குறிப்பிடத்தக்க மக்களின் பொருளாதாரத்திலும் பாதிப்பை ஏற்படுத்தும் என்பதை மறுப்பதற்கில்லை. இது இளைஞர்கள் மத்தியில் அரசு குறித்த அதிருப்தியையும் ஏற்படுத்த வாய்ப்புள்ளது.

அதே நேரத்தில் அமெரிக்க அரசின் முடிவை எடுத்து சட்டப் போராட்டத்துக்கு டிக் டாக் தயாராகி வருகிறது. தங்களைத் தவிர மற்ற யாரிடமும் சிறந்த தொழில்நுட்பம் இருக்கக் கூடாது என்ற அமெரிக்காவின் எண்ணத்தின் காரணமாகவே டிக் டாக்கை அபகரிக்க முயற்சிப்பதாக அந்நிறுவனம் குற்றம்சாட்டியுள்ளது. இந்த விவகாரம் அமெரிக்கா—சீனா இடையிலான மற்றொரு பனிப்போராக உருவெடுத்துள்ளது.

# தமிழே

## எதிர்வினையாற்றும் ஆளுமை!

மனிதர்களின் ஆளுமையை உளவியலறிஞர்கள் பல வகைகளாகப் பகுத்துக் காட்டியுள்ளனர். ஜான்சன் டர்பி என்னும் உளவியலறிஞர், வெளிப்படைத் தன்மை மிக்கோர், மனச்சான்றினை மதிப்போர், நட்புறவு கொள்வோர், ஒத்திசைவு கொள்வோர், நரம்பியல் பாதிப்புள்ளோர் என்றவாறு பலவகையான ஆளுமைப் பண்புடைய மனிதர்களை இனங்காட்டுகின்றார்.

இங்குக் குறிப்பிடப்படாத வேறு சில வகை ஆளுமையாளர்களும் உள். அத்தகையவர்களுள் குறிப்பிடத்தக்க ஒரு வகையினர் எதிர்வினையாற்றும் ஆளுமையாளர் ஆவர். எதிர்வினை என்றவுடன் எதிர்மறைச் செயல் (நெகட்டிவ் ஆக்ஷன்) என்ற பொருளை நினைவுகூர்ந்து, இணைத்து இடர்ப்படத் தேவையில்லை.

எதிர்வினை (ரீஆக்டிவ்) என்பது, ஒரு நிகழ்ச்சியைக் கண்ணெதிரே கண்டவுடன் “நமக்கேன் வம்பு’ என்று ஒதுங்கிப் போகாமல், அதில் தன்னை ஈடுபடுத்திக் கொண்டு மேலதிகமாகச் செயல்படும் மனிதர்களைப் பற்றியதாகும்.

உளவியலறிஞர்கள் எதிர்வினையாற்றும் ஆளுமையினரின் பண்புகளைப் பின்வருமாறு வகைப்படுத்திக் காட்டுகின்றனர்: மிக விரைவாகவும் மரபுகளைத் தேவையான அளவு வளைத்தும், செயல்படக் கூடியவர்கள். இவர்கள் ஒரு பணியைச் செய்வதில் பின்பற்றப்பட விதிமுறைகளை மட்டுமே பற்றிக் கொண்டிராமல் விட்டுக் கொடுத்தும் போவார்கள். இவர்களுக்கு ஒரு செயலின் இறுதி விளைவே முக்கியம். ஒரு சிக்கலை அதன் வேருடன் களைபவர்களாக இவர்கள் இருப்பார்கள்; சிக்கலின் அறிகுறிகளை மட்டும் களைபவரல்லர்.

துன்பங்கள் ஏற்படும் போது விரைந்து செயல்பட்டு உதவுவர். கடினமான அழுத்தங்களுக்கு இடையிலும் இவர்கள் திறம்படப் பணிபுரிவார்கள். குறிப்பிட்ட செயலின் மீதான தங்களது அறிவுபூர்வமான மதிப்பீட்டினையும் செயற்படுத்துவார்கள். வெறுமனே சிக்கல் — தீர்வு மட்டுமே இவர்களது இலக்கல்ல. ஒரு நிகழ்ச்சியில், தாங்கள் முதன்மை இடத்தைப் பிடிக்க வேண்டும் என்று போராடுவார்கள்.

இத்தகைய எதிர்வினையாற்றும் ஆளுமைப் பண்பினர் தங்கள் திறமை மற்றவர்களால்



# தமிழே

முனைவர்
**ம. திருமலை**

கவனிக்கப்பட வேண்டும் என்று விரும்புவர்களாக இருப்பார்கள்; மனித வள மேலாண்மைத் துறையில் இப்பண்பு மிக இன்றியமையாததாகும்.

எதிர்வினையாற்றும் ஆளுமையுடையவர்கள் பற்றி இற்றை நாள்களில் கூறப்பட்டுள்ள உளவியல் ஆய்வு முடிவுகள் பல தமிழின் செவ்வியல் இலக்கியங்களுடன் பொருந்துகின்றன என்பது வியப்பை ஏற்படுத்துவதாக உள்ளது.

சங்க இலக்கியங்களுள் ஒன்றான புறநானூற்றில் குறிப்பிடப்படும் பல மன்னர்கள் எதிர்வினையாற்றும் ஆளுமைப் பண்புடையவர்களாகச் சித்திரிக்கப்பட்டுள்ளனர். மதுரைக் குமரனார் என்ற புலவர் சிற்றூர் ஒன்றின் தலைவனான தோயன் மாறன் என்பவனைக் குறித்துப் பாடியுள்ள பாடல் எதிர்வினையாற்றும் ஆளுமைத் திறனுக்குச் சான்றாக அமைகிறது.

வறுமையில் வாடிய இரவலர் ஒருவரை நோக்கி, “நாள்தோறும் கொடுக்குமளவுக்குச் செல்வமில்லாதவன். ஆயினும் துன்பப்படுபவர்களுக்கு இல்லைஎன்றுபதில்கூறுகின்ற சிறுமையுமில்லாதவன். இவன் பல்வேறு போர்களில் ஈடுபட்டு உடலில் விழுப்புண்களைத் தாங்கியவன். பாணர்களை வருத்தும் பசிக்கு அவன் பகைவன். நீ என்னுடன் வந்தால் நமது ஒட்டிய வயிற்றைக் கொல்லனிடம் காட்டி, உடனே நல்ல வலிமையுடைய வேலினை வடித்துக் கொடு என்று அவனிடம் கேட்பான்’ என்று மதுரைக் குமரனார் கூறுகிறார்.



இக் கருத்தமைந்த பாடல் அடிகள் (புறநானூறு: 180) பின்வருமாறு:

யாம் தன் இரக்கும் காலை, தான் எம்
உண்ணா மருங்குல் காட்டி, தன் ஊர்க்
கருங் கைக் கொல்லனை இரக்கும்,
திருந்து இலை நெடு வேல் வடித்திசின்

இப்பாடலில், பாணர் வறுமை தீர்க்கக் கொல்லனிடம் வேல் வடித்துக் கொடுக்குமாறு வேண்டும் செயல் உலக இலக்கியங்களில் எங்கும் காணவியலாத ஒன்றாகும்.

செயல்படும் பண்பைப் குறிக்கிறது. இது சிக்கலின் ஆணிவேரினைக் களைதல் எனும் பண்பாகும்.

பாணனின் தோற்றத்தினைக் கண்டவுடனே கொல்லனிடம் வேல் வடித்துத் தருமாறு கேட்டல் விரைவுப் பண்பைக் குறிக்கிறது. தோயன் மாறன் எதிர்வினையாற்றும் ஆளுமை உடையவன் என்பதை இப்பாடல் உணர்த்துகிறது. உளவியலும் இலக்கியமும் சந்திக்கும் மையப்புள்ளி இது என்பதை நாம் புரிந்து கொள்ளலாம் .



எதிர்வினையாற்றும் ஆளுமை மிக்க மனிதர்களின் பண்பான விரைந்து செயல்படுதல் (ஸ்விஃப்ட் ஆக்ஷன்), சிக்கலை வேருடன் களைதல், கடினமான சூழல்களுக்கு நடுவிலும் செயல்படுதல் போன்ற பண்புகள் தோயன் மாறனிடம் இருப்பதைப் புலவர் காட்டுகிறார்.

தன்னிடம் போதிய செல்வம் இல்லாத நிலையில் பிறருடன் போரிட்டுப் பொருள் சம்பாதித்து வந்து உதவ நினைப்பது கடினமான சூழலிலும்

தலையாலங் கானத்துச் செருவென்ற பாண்டியன் நெடுஞ்செழியன் மிகவும் இளம் வயதிலேயே அரசப் பதவியை அடைந்தவன். அவன் மீது அழுக்காறு கொண்ட மன்னர் பலரும் ஒன்றாக இணைந்து போர் தொடுக்க , இதனை ஒற்றர் மூலம் அறிந்த பாண்டியன் நெடுஞ்செழியன் சினம் கொண்டு பகைவரின் திட்டத்திற்கு எதிர்வினையாற்றுகிறான்.

அவன், “என்னை இகழ்ந்து பேசிய பகைவர்களை வென்று அவர்களின் வெற்றி முரசத்தைக் கைப்பற்றுவேன்’ என்று சூளுரை


VARSHA™
Ready to Cook
Made with Quality Natural Products
Idli / Dosa Wet Mix • இட்லி / தோசை மாவு
ఇడ్లీ దోస పిండి • ಇಡ್ಲಿ ದೋಸೆ ಹಿಟ್ಟು
ഇഡ്ഡലി / ദോശ മാവ്
CRISPY DOSA * SOFT & FLUFFY IDLI
100% Pure Vegetarian
ઈડલી ડોસા નું ખીરું
इडली/ दोसा आटा



பகர்கிறான். பகையரசர் இன்னவாறு கூறினர் என்று, கேட்டவுடன் செயலில் இறங்கும் விரைவு, தீவிரத்தன்மை முதலிய தலைமைப் பண்புகள் உடையவனாகத் தலையாலங்கானத்துச் செருவென்ற நெடுஞ்செழியனின் பண்பு புலப்படுத்தப்படுகிறது.

அப்பாடல்,

நகுதக் கனரே நாடு மீக் கூறுநர்
இளையனிவ னெனஉளையக் கூறிப்
படுமணி இரட்டும் பாவடிப் பணைத்தாள்
நெடுநல் யானையும் தேரும் மாவும்
படையமை மறவரும் உடையம் யாம் என்று
உறுதுப்பு அஞ்சாது உடல்சினம் செருக்கிச்
சிறுசொல் சொல்லிய சினங்கெழு வேந்தரை
அருஞ்சமம் சிதையத் தாக்கி முரசமொடு
ஒருங்கு அகப்படேனாயின் பொருந்திய
என் நிழல் வாழ்நர் செல் நிழல் காணாது
கொடியன் எம்இறை எனக் கண்ணீர் பரப்பி
குடிபழி தூற்றும் கோலேன் ஆகுக!
ஓங்கிய சிறப்பின் உயர்ந்த கேள்வி
மாங்குடி மருதன் தலைவன் ஆக
உலகமொடு நிலைஇய பலர்புகழ் சிறப்பின்
புலவர் பாடாது வரைக என் நிலவரை...
(புறநானூறு: 72)

விரைவும் தீவிரத் தன்மையும் உடைய ஆளுமைப் பண்பு இப்பாடலில் புலனாவதை உணரலாம்.


நடைபெறும் ஒரு நிகழ்ச்சியில் தன்னை முதல் மனிதனாக நிலைநிறுத்திக் கொள்ள எதிர்வினையாற்றும் ஆளுமையாளன் முயற்சி செய்வான் என்பது முன்னர்க் குறிப்பிடப்பட்டது. அதியமான் இவ்வாறு மற்றவர்களை முந்திச் சென்று கருணை காட்டுபவன் என்பதை ஔவையார் ஓர் இரங்கற்பாவில் கூறுகிறார்.

புறநானூற்றில்,

சிறியகட் பெறினே, எமக்கீயும் மன்னே!
பெரிய கட் பெறினே!
யாம் பாடத், தான் மகிழ்ந்து உண்ணும் மன்னே!
சிறு சோற்றானும் நனிபல கலத்தன் மன்னே!
பெருஞ்சோற்றானும் நனிபல கலத்தன் மன்னே!
என்பொடு தடிபடு வழி எல்லாம்
எமக்கு ஈயும் மன்னே!
அம்பொடு வேல் நுழை வழி எல்லாம்
தான்நிற்கும் மன்னே!
(புறநானூறு: 235)

என்று ஔவையார் அதியமானைக் குறித்துப் பாடிய இரங்கற்பாவில் எல்லா நிலைகளிலும் தன் முயற்சிகளைக் குறைவின்றிச் செய்து பெயர் பெற்ற அதியமானின் பண்பு கூறப்பட்டது.

சிலப்பதிகாரம் வஞ்சிக் காண்டத்தில் சித்திரிக்கப்படும் சேரன் செங்குட்டுவன்



கனக விசயர்களைக் கைதிகளாகக் கண்ட சோழனும் பாண்டியனும் பாராட்டுவார்கள் என்றும் தமிழரின் வீரம் குறித்துப் பெருமிதம் கொள்வரென்றும் செங்குட்டுவன் கருதினான்; அதற்கு மாறாக, சோழனும் பாண்டியனும் கேலி செய்து பேசினர். இதனைக் கேட்டவுடன் செங்குட்டுவன், கோபமடைகிறான்.

இது அவனது எதிர்வினையாற்றும் ஆளுமையை எடுத்துக் காட்டுகிறது. மாடல மறையோன் செங்குட்டுவனின் வீரத்தையும் வெற்றிகளையும் பலவாறு பாராட்டிய பின்னரே செங்குட்டுவன் அமைதியடைகிறான்.

மேற்கூறப்பட்ட எதிர்வினையாற்றும் பண்புடையவன், எதிர்வினையாற்றும் ஆளுமை மிக்கவர்களிடம் காணப்படும் "அங்கீகார எதிர்பார்ப்பு' (ரெகக்னேஷன்) செங்குட்டுவனிடம் காணப்படுகிறது.

வடதிசைப் படையெடுப்பில் வெற்றி பெற்றுக் கண்ணகியை வழிபடக் கல் கொண்டு திரும்பிய பின்னர் கனக விசயரை ஏனைய தமிழ் மன்னர்களான சோழனுக்கும் பாண்டியனுக்கும் காட்டி வெற்றியை அறிவித்து வருமாறு கூறி படைத் தலைவர்களை அனுப்புகிறான் செங்குட்டுவன்.



இலக்கியங்களை அவற்றுக்குள் மட்டுமே நின்று புரிந்து கொள்வதைவிட உளவியல், சமூகவியல், மானுடவியல் போன்ற துறைகளின் கோட்பாடுகளைக் கொண்டு ஆய்வது பயன்மிகு செயலாகும். இம்முறையில் சிலப்பதிகாரத்தை நோக்கும் போது மூலப் பனுவலின் சிறப்பு பன்மடங்கு மிகுகிறது.

கட்டுரை

# வாசிப்போம்

## அறிவை உயர்த்தும் ஆற்றலைப் பெருக்கும்

யாருடைய அறிவையும் உயர்த்தியதாக தம்பட்டம் அடித்துக்கொள்ளாத மேன்மையான குணமுடையவை புத்தகங்கள்.

உலகிலுள்ள உயிரினங்கள் அனைத்திலும் மனிதன் ஆறறிவுடையவனாகப் படைக்கப்பட்டுள்ளான். இதுவே மனிதனை வளர்ச்சி அடையச் செய்துள்ளது. மனித அறிவில் வாசிப்பு முக்கிய இடம் வகிக்கின்றது. வாசிப்பு மனிதனை பூரணப்படுத்தும். மனிதன் முழுமை பெறவேண்டுமெனில் வாசிப்பு அவசியம். “நூலளவு ஆகுமாம் நுண்ணறிவு போன்ற பழமொழிகள் எல்லாம் வாசிப்பின் முக்கியத்துவத்தினை வெளிப்படுத்துகின்றன.

உலகில் உயர்ந்த இடத்திலுள்ள பலர் வாசிப்பினால் உயர்ந்துள்ளனர். அன்றாடம் நாம் வாசிப்பதன் மூலம் அறிவைப் பெருக்கிக் கொள்ளலாம்.ஆனால் இன்றைய நவீன உலகில் தொழில்நுட்ப பயன்பாட்டால் வாசிப்பு பழக்கம் அருகி வருகின்றது. வாசிப்பின் முக்கியத்துவம் பற்றி இக்கட்டுரையில் காண்போம்.

வாசிப்பின் முக்கியத்துவம்

“கண்டதைக் கற்றவன் பண்டிதன் ஆவான் என்னும் பழமொழியின் மூலம் வாசிப்பின் முக்கியத்துவம் எளிதாக விளக்கப்படுகின்றது. உடலிற்கு எவ்வாறு உடற்பயிற்சி முக்கியமோ அதுபோல வாசிப்பு மனதிற்கு முக்கியமானதாகும்.

ஓர் சிறந்த மனநிலையை உருவாக்குவதற்கு வாசிப்பு அவசியம். நன்மை தீமைகளைக் கண்டறிய வாசிப்பு உதவுகின்றது. அறிவினை விருத்தி செய்து கொள்வதற்கும் வாசிப்பு முக்கியமானதாகும்.கல்வி மட்டுமல்லாது நம்மைச் சுற்றியுள்ள சமூகத்தின் போக்கையும் உலகம் பற்றிய விடயங்களையும் தெரிந்துகொள்ள வாசிப்பு முக்கியமாகின்றது.

வாசிப்பின் பயன்கள்

நூல் வாசிப்பு மனிதனுக்கு அறத்தினை புகட்டும்,





# நேசிப்போம் !

முனைவர்
என். மாதவன்

ஆக்கத்தை அளித்திடும்.வாசிப்பதன் மூலம் ஞாபக சக்தியானது அதிகரிக்கும்.


பார்ப்பதன் மூலமே மற்றும் கேட்பதன் மூலமே ஒரு விடயத்தினை அறிவதைவிட வாசிப்பதன் மூலம் அறியும் விடயமானது நீண்டகாலத்திற்கு நினைவிருக்கும்.


திறன் அதிகரிக்கும்.

உலக விடயங்களை அறிந்துகொள்ள முடிகின்றது.

வாசிப்பே ஒருவனை அறிவார்ந்தவனாகக் கட்டமைக்கிறது. ஏனெனில் வாசிப்பு அறிவை வழங்கும் அமுதசுரபியாகும். ஒரு கல்லை உளி செதுக்கி செதுக்கி அழகிய சிற்பமாய் மாற்றுவது போல புத்தகங்கள் வாசிக்க வாசிக்க அவை நம்மை பண்புள்ள மனிதர்களாக்குகின்றன.இன்று நம்மிடையே குறைந்து வரும் பழக்க வழக்கங்களில் ஒன்றாக வாசிப்பு காணப்படுகின்றது. வாசிப்புப் பழக்கத்தை வாழ்வோடு தொடர்புடைய அம்சமாக பார்க்கவேண்டும்.வாசிப்புப் பழக்கத்தை அதிகரித்துக் கொள்வதில் ஒருவரின் மனநிலை பிரதான பங்கு வகிக்கின்றது. வாழ்வோடு ஒன்றிணைந்த செயற்பாடாக வாசிப்பினை மாற்றிக்கொள்ள வேண்டும்.

புத்தகங்களை வாசிப்பதன் மூலம் எமது வாழ்க்கையானது வெற்றிப் பக்கங்களை நோக்கி பயணிக்கும் என்பதனை நினைவு கொள்ள வேண்டும். சிறு வயதிலிருந்தே வாசிப்புப் பழக்கங்களை வளர்க்க வேண்டும்.வாசிப்பதற்காக ஒரு இலக்கை தீர்மானித்தல் வேண்டும். ஒரு நாளைக்கு ஒரு பக்கமோ அல்லது ஒரு மாதத்திற்கு ஒரு புத்தகமே என்று ஒரு இலக்கை நிர்ணயித்து வாசிக்க ஆரம்பிக்க வேண்டும்.அமைதியான சூழலை தேர்ந்தெடுத்தல் வேண்டும். தினமும் வாசிப்பதற்கு என நேரத்தை ஒதுக்குவது அவசியம். பயன் தரும் நூல்களைத் தெரிவு செய்து நமது வருமானத்தின் ஒரு பகுதியை நூலுக்காகச்






செலவிட வேண்டும். வாசித்தைப் பிறருடன் பகிர்ந்து கொள்ள வேண்டும்.

இன்றைய இளைஞர்களும் மாணவர்களும் வாசிப்பில் ஈடுபாடு காட்டாத நிலையையே நாம் அதிகம் காண்கின்றோம். நூல்களைக் கையில் எடுத்தாலே தூக்கம், சோம்பல், ஆர்வமின்மை போன்ற எதிர்மறை எண்ணங்களே அவர்களிடம் தோன்றுகின்றது.இத்தகைய தலைமுறை நாட்டிற்கு பாதகத்தினையே ஏற்படுத்தும். தொழில்நுட்ப சாதனங்களின் மீதுள்ள மோகம் இளைய சமுதாயத்தில் வாசிப்புப் பழக்கத்தை அரிதாக்கி வருகின்றது.

பல்வேறு தினசரிப் பத்திரிகைகள், நூல்கள் வெளிவருகின்ற போதிலும் அதுபற்றி அறியாதவர்களாகவேயுள்ளனர். எனவே வாசிப்பின் மீதான ஆர்வத்தினை அவர்களுக்கு ஏற்படுத்துவது அவசியம். வாழ்க்கையென்பது இடர்கள் நிறைந்தது. அதை நோக்கியப் பாதை தெளிவாகவுள்ள போதுதான் வாழ்க்கை சிறப்பாகும். பிரகாசமான வாழ்க்கையை ஏற்படுத்துவதில் நூல்கள் மீதான வாசிப்பு பெரும் பங்காற்றி வருகின்றது. வாசிப்பு நம் முன்னோர்களின் வாழ்வோடு இரண்டறக் கலந்திருக்கின்றது. அதனால் தான் அவர்களால் அதிக நூல்களை அடுத்த தலைமுறைக்காக விட்டுச் செல்ல முடிந்தது.


யாருடைய அறிவையும் உயர்த்தியதாக தம்பட்டம் அடித்துக்கொள்ளாத மேன்மையான குணமுடையவை புத்தகங்கள். ஒவ்வொரு புத்தகமும் சமூக மாற்றத்திற்கு ஆற்றல் அளிக்க வல்லது. புத்தகங்களை உருவாக்கும் மனிதர்களை புரிந்துகொண்டு புத்தகங்களை மேலும் புரிந்துகொள்ள முயல்வோம்.

சிந்தனைகளையும் செயல்பாடுகளையும் வைத்து மனிதர்களை எளிதாகப் புரிந்து கொள்ள இயலும். இவ்வாறான புரிதலின் அடிப்படையில் சமூகவியலாளர்கள் நான்கு விதமாக மனிதர்களை வகைப்படுத்துகின்றனர். தானுண்டு தன் வேலையுண்டு என்று இருந்துகொண்டு தனது குடும்பமே உலகம் என்று வாழ்வோர் ஒரு வகை. சமூக மாற்றத்தைப் பற்றி என்னால் ஓரளவு யோசிக்க முடியும் ஆனால் கூடுதலாக யோசிக்க முடியவில்லை என்று ஆதங்கம் கொண்டோர் இரண்டாவது வகை.

என்னால் யோசிக்கவும் இயலும், அதனைப் புத்தகமாக வடிக்கவும் இயலும் என்போர் மூன்றாவது வகை. என்னால் சிந்தனைகளாக வடிக்கவும் இயலும் சிந்தனைகளுக்கு செயல்வடிவம் கொடுக்கவும் இயலும் என்போர் நான்காவது வகையினர் என்கின்றனர்.

முதலாவது வகையினர் தமது குடும்பம் பற்றிய


VARSHA™
Ready to Cook
Made with Quality Natural Products
Idli / Dosa Wet Mix
இட்லி / தோசை மாவு
ఇడ్లీ దోస పిండి
ಇಡ್ಲಿ ದೋಸೆ ಹಿಟ್ಟು
ഇഡ്ഡലി / ദോശ മാവ്
CRISPY DOSA * SOFT & FLUFFY IDLI
100% Pure Vegetarian
ઈડલી ઢોસા નું ખીરું
इडली/ दोसा आटा




சிந்தனைகளிலிருந்து வெளிவந்து பலரோடு இணைந்து பழகவேண்டும். முதல் கட்டமாக உறவினர்களுடன் கலந்துபேசி அவர்களது பழகும் வட்டத்தைப்பெரிதாக்க முயலலாம். இரண்டாவது வகையினர் மேலும் ஆழமாக யோசிப்பதற்கான பணியை புத்தகங்களை வாசிப்பதன் மூலம் தொடங்கலாம்.


கருத்துகளை மட்டும் வழங்கிக்கொண்டிருக்கும் மூன்றாவது வகையினர், சமூக மாற்றத்திற்கான சிறு சிறு செயல்பாடுகளில் ஈடுபட்டு நான்காவது வகையினராகப் பரிணமிக்க முயல வேண்டும். நான்காவது வகையினராக இருப்போர் தமது செயல்பாட்டினால் தாம் சந்தித்த சவால்களைப் பதிந்துவைக்கலாம். சமூக இயங்கியலில் பெரும் அமைப்பாகச் செயல்படுவோர் தமது உறுப்பினர்களை இவ்வாறாக வகைப்படுத்தி தமது அமைப்பையும் பலப்படுத்திக்கொள்ளலாம். .

இவ்வாறான திட்டமிடல்கள் ஏதும் இல்லாமலே புத்தகங்கள் என்னும் அறிவுச்சுரங்கங்களை அந்தந்த காலகட்டங்களின் வாழும் சிந்தனையாளர்கள் உருவாக்குகின்றனர். அவற்றின் மூலம் அவர்கள் தாம் வாழும் காலத்திற்குப் பின்னரும் நினைவுகூரப்படுகின்றனர். அவ்வாறே இன்றைக்குப் பலரும் வரலாறாகி வாழ்கின்றனர்.

உலகில் பிறந்து வாழ்ந்து மடிந்த அனைவரையும் வரலாறு நினைவில் வைத்திருப்பதில்லை. வரலாற்றில் இடம் பிடிப்போரில் சிலர் தலைவர்களாக வாழ்ந்து மறைகிறார்கள். சிலர் சமூக சிந்தனையாளர்களாக கருத்துக்களை விதைத்துச் செல்கிறார்கள். அவர்களது மாணவர்கள் அடுத்தடுத்த தலைமுறைகளுக்கு அவற்றைக் கடத்துகின்றனர்.

பெரும்பாலான சமூக சிந்தனையாளர்கள் தமது சிந்தனைகளை எழுத்திலும் விட்டுச் செல்கின்றனர். அப்போது சமூகத்திற்கு அளவற்ற சிந்தனைச் செல்வங்கள் கிடைக்கின்றன. பெரும்பாலும் அவர்கள் காலத்தில், அவர்கள் வாழ்ந்த சமூகத்திற்கான சவால்கள் என்னென்ன? அவற்றை எதிர்கொள்ள அவர்கள்






பரிந்துரைத்த வழிமுறைகள் என்னென்ன? அந்த வழிவகைகள் மூலம் விளைந்த மாற்றங்கள் என்னென்னஎன்பதாக அவை அமையும்.

சிந்தனையாளர்கள் பரிந்துரைக்கும் சமூக மாற்றங்களில் பெரும்பாலானவை அவர்கள் காலத்துக்குள் நிறைவு பெறுவதில்லை. அவ்வாறு நிறைவுபெற இயலாத கனவு குறித்த சிந்தனைகளை அவர்கள் ஏன் விதைத்து செல்கிறார்கள் என்ற வினா நமக்கு ஏற்படலாம். எந்த ஒரு சமூக சவாலுக்கும் தீர்வு இல்லாமல் இருப்பதில்லை. ஆனால், அதே நேரத்தில் சமூக சவால்களுக்கான தீர்வுகளை யோசிக்க ஒருவர் முனையும்போது அவருக்கு பல முதன்மைத் தகவல்கள் தேவையாக உள்ளன.

அந்த சவால்கள் குறித்து ஏற்கனவே சமூகத்தில் உள்ள புரிதல் என்ன? அந்த சவால்களுக்கு தீர்வு காண மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கைகள் என்னென்ன? அந்த நடவடிக்கைகளில் ஏற்பட்ட வெற்றி அல்லது தோல்வியின் விவரங்கள். தோல்வி என்றால் தோல்விக்கான காரணிகள் இப்படியாக அவற்றைப் பட்டியலிடலாம்.

இந்தப் பட்டியலில் பலவற்றை சிந்தனையாளர்கள் எழுத்தில் வடித்துவைத்துவிட்டுச் செல்கின்றனர். இதனால் அதே சவால் குறித்துப் புதிதாக சிந்திக்கும் ஒருவரது பணி மிகவும் எளிதாகிறது. முந்தைய தலைமுறையினரின் பலதரப்பட்ட அனுபவங்களோடு சவாலை அணுகுகின்றனர். இதனால் சவாலுக்கான தீர்வுகளை அவர்கள் விரைவாகக் கண்டறிகின்றனர். இவ்வாறு அவர்கள் புதிதாக முயலாமல் ஏற்கெனவே உள்ள தீர்வுகளிலின் அடிப்படையில் அணுகுவது என்பது எளிதாக இருக்கிறது.

சிந்தனையாளர்களின் எழுத்துகளை காலந்தோறும் பாதுகாப்புப் பெட்டகமாக்கி நமக்கு அளிக்கக்கூடிய அரும்பணியை புத்தகங்கள் செய்கின்றன. ஒவ்வொரு சிறந்த புத்தகமும் பல்வேறு புதுப்புது அர்த்தங்களை, புதுப்புது வடிகால்களை அளிப்பதாகவே உள்ளது. அவ்வாறுதான் ஒவ்வொரு புத்தகத்தின் பக்கங்களிலும் இருக்கக்கூடிய சிந்தனைகளை ஒரு மனிதன் புரிந்து கொள்ள வேண்டும்.

ஒவ்வொரு கட்டத்திலும் வாழும் மனிதர்கள் மனிதவளத்தை அடுத்த கட்டத்தினை நோக்கி நகர்த்த முனையவேண்டும். இதற்கு ஒரு மிகப்பெரிய சமூக இயக்கம் தேவைப்படுகிறது. அந்த சமூக இயக்கத்தை கட்டமைக்கும் பணியைப் பள்ளிக்கூடங்கள் செய்யலாம். ஆனால், இன்றைக்கு இருக்கக்கூடிய பள்ளிக்கூடங்கள் குழந்தைகளின் எதிர்கால வேலைவாய்ப்புக்கான முகமை என்பது போல மாறிவருகின்றன.

ஆனால், ஒவ்வோர் ஊரிலும் ஒரு நூலகம் இருந்து இந்தப் பணியை செய்ய முன்வருமானால் நிச்சயமாக நல்ல பலன் கிடைக்கும். உலக புத்தக நாளில் இந்த புரிதல் மேம்பட அனைவரும் கூட்டாகச் சிந்திப்போம். புத்தகங்களே சமூகத்தின் அறிவுநிலையை உயர்த்தி ஆற்றலைப் பெருக்கும் கருவிகள். இந்தக் கருவிகளின் பயன்பாட்டில் ஆரோக்கியமான மாற்றங்கள் ஏற்படாமல் மனிதவள மேம்பாட்டில் மாற்றம் ஏற்படுவதென்பது சாத்தியமில்லை.

எனவே வாசிப்புப் பழக்கத்தை ஏற்படுத்திக் கொண்டு எதிர்காலத் தலைமுறையினருக்கு நாமும் நன்மை செய்வோம். வாசிப்புக் கலாச்சாரம் கொண்ட ஒரு சமூகத்தை கட்டியெழுப்புவோம்.




## 46. சிலை தந்த மயக்கம்!

**கொற்றவன்**

தெலோஸ் தீவின் மலைமுகட்டில் அமைந்திருந்த அற்புதமான அரண்மனை, கலைநுணுக்கம் மிகுந்ததாய் இருந்தது. எந்தப் பக்கம் திரும்பினாலும் சிற்பங்களும் ஓவியங்களும், அழகு மிளிரும் வேலைப்பாடுகளுமாய் வில்லவன் மனத்தைக் கொள்ளைக் கொண்டன.

அங்கிருக்கும் சாளரத்தின் வழியே பார்வையைப் படரவிட்டவன், மலைப்பின் உச்சத்துக்கே சென்றான். அவன் கண்களுக்குத் அத்தீவின் மூன்று திசைகளும் தெள்ளத் தெளிவாக தெரிந்தன.

என்னவொரு அற்புதம்! அங்கிருந்து பார்த்தால் தீவின் சுற்றுப்புறம் முழுமையும் தெரியும் வண்ணமாக இடத்தைத் தேர்வு செய்து அதில் இப்படியொரு அரண்மனை எழுப்பியிருக்கும் கிரேக்கர்களின் அறிவுக்கூர்மையை மனதுக்குள் மெச்சினான்.

அங்கிருக்கும் மற்றொரு சாளரத்தின் முன் நின்று பார்த்தால் தீவின் மறுபுறத்தின் மூன்று திசைகளையும் காண முடிந்ததை உணர்ந்தான்.

ஆகா, இம்மாளிகையின் இரண்டு சாளரங்களின் வழியே முழுத் தீவையும் கண்டு ரசிக்க முடிவதை எண்ணி மலைதான்.

தீவின் கரையோரம் நின்றிருக்கும் சிறிய வணிக நாவாய்கள், இங்கிருந்து ஏதென்ஸ் நகரத்துடன் தொடர்பு கொண்டிருப்பதையும், கடல் செல்வங்களான முத்து, பவளம், போன்றவற்றைப் பிற நாட்டுக்குக் கொண்டு செல்வதாகவும் மன்னர் பாரீஸ் கூறக் கேட்டதை, கடல் வணிகம் சிறப்பாக நடப்பதை இப்போது அவனால் காணமுடிந்தது.

அவன் பார்வை திரும்பிய போது, புதையல் ஒன்று பூமியிலிருந்து வெளிப்படுவதைப் போல ஓரிடத்தில் பொன்னொளி மின்னுவதைக் கண்ட வில்லவன் விழிகள் விரிந்தன.

தென்னைமர அளவைத் தாண்டிய உயரத்துடன் பிரம்மாண்ட மனிதன் ஒருவன் முழங்காலிட்டு அமர்ந்திருப்பதைப் போலத் தெரிந்த ஒரு சிலையின்மீது செங்கதிரவனின் ஒளி பாய்ந்ததைக் கண்டதும் மலைத்துப் போனான்.


இதற்குமுன் அவன் இப்படியொன்றைக் கண்டதில்லை என்பதால், விரிந்த விழிகளுடன் அச்சிலையை அதிசயமாய் பார்த்தவனிடம் இருந்து வார்த்தைகள் உதிர்ந்தன.

"அடேயப்பா! எவ்வளவு பிரம்மாண்ட சிலை!"

"அதுதான் ஹீலியஸ் சிலை!" தனக்கு மிக அருகில் ஒலித்த குரல் கேட்டுத் திரும்பினான் வில்லவன்.

பொற்சிலையென அருகில் நின்றிருந்தாள் தியோதாரா!

அவளைக் கண்டதும், மின்னல் வெட்டும்போது பட்டென மொட்டவிழ்ந்து மணம் பரப்பும்



தாழம்பூவென, வில்லவனின் மனமெங்கும் மகிழ்ச்சிப் பூக்கள் மடல் விரித்தன.

அகமும் முகமும் ஒருசேர மலர்ச்சி பரவ, "வா! தாரா! உங்கள் தீவின் கடற்கரை அழகில் மயங்கி நின்றுவிட்டேன். நீ... வந்து வெகுநேரமாகிறதா?"

"அப்படியெல்லாம் ஒன்றுமில்லை! இப்போதுதான் வந்தேன்!" முறுவலித்தாள் அவள்.

தியோதாராவைச் சிறிதுநேரம் இமைக்காமல் பார்த்தபடி நின்றிருந்தவனின் மனதுக்குள் எண்ணங்கள் வார்த்தைகளாய் ஓடின.

'ஆகா! இவள் பூவுலக மங்கையா? வானுலக தேவதையா? இவள் அழகுக்கு ஈடாக எதனையும் உவமைப்படுத்த இயலவில்லையே! இந்த அழகுச் சிலை, இறைவனது படைப்பின் இன்னொரு அதிசயம் தான்! சேரநாட்டிலிருந்து கடல் தாண்டி இந்தப் பவளத்தீவுக்குத் தன்னைக் கொண்டுவந்திருக்கும் இந்த மந்திரச்சிலையை காணும் போதெல்லாம் மந்திரத்துக்குக் கட்டுப்பட்டாற்போல ஆகிகிறதே தன் நிலை? என்னை மெய்மறக்கச் செய்கிறதே இந்த பொற்சிலை!'

"இந்தச் சிலை உங்களுக்கு மலைப்பை ஏற்படுத்துகிறது, இல்லையா?"

தியோதாரா கேட்டதும் தடுமாறிப் போனான் வில்லவன்.

"என்ன?... நான்... ஏதேனும் உளறினேனா?"

"ஏன்? ஏன் இந்தப் பதற்றம்?"

"இல்லை, இப்போது நான்... சிலை என்று ஏதாவது..." மீண்டும் தடுமாறினான்.

"தாங்கள் அந்தச் சிலையை மெய்மறந்து ரசித்துக் கொண்டிருப்பதைப் பார்த்ததனால் கேட்டேன்!" எனக் கடற்கரையோரம் இருந்த ஹீலியஸ் சிலையை தன் கண்சாடையில் காண்பித்தாள்.

ஓ! இவள் அந்தச் சிலையைத்தான் குறிப்பிடுகிறாள் என்பதை உணர்ந்தவன் சற்றே ஆறுதல் அடைந்தான்.

"ஆம்! இந்தச்சிலையைக் காண்பவர் எவரும் மலைத்துத்தான் போய் விடுவார்கள்! இது யாருடைய சிலை?"

"இது எங்கள் சூரியக் கடவுளான ஹீலியஸ் சிலை! பேராற்றல் மிக்கவர்! எங்கள் தீவைக் காக்கும் காவல் தெய்வம் இவர்தான்!"


"ஓ!..." அவள் கூறுவதை ஆர்வமுடன் கேட்கத் தலைப்பட்டான்.

தியோதாரா தங்கள் நாட்டின் அமரகாவியமான இலியட்டை கூறும் ஹீலியஸ் தெய்வம் நிகழ்த்தும் சாகசங்களைக் கூறினாள்.

"ஒருசமயம் இந்தத் தீவுக்கு வந்த ஒரு பேராபத்தை தாங்கிக் கொண்டு ஹீலியஸ் இத்தீவைக் காப்பாற்றியிருக்கிறார்!"

"ஓ! அப்படியென்ன பேராபத்து வந்தது?"

"பல்லாண்டுகளுக்கு முன்பு ஒருநாள்... இதோ! அமைதியாய் தெரியும் இந்த நீலக்கடல் மலையளவு உயரத்துக்குப் பொங்கி எழுந்தது. அந்த ஆழிப்பேரலையில் எங்கள் தீவே கடலுக்குள் மூழ்கிப் போகும் அபாயம் இருந்தது. அப்போது நின்றிருந்த எங்கள் தெய்வம், முழங்கால் மடக்கி அமர்ந்தது. அந்தத் தெய்வச் செயலைக் கண்டு கடல் பின்வாங்கியது! எங்கள் தீவு அழிவிலிருந்து



தப்பியது! அதன்பின் இந்தத் தெய்வத்தை மீண்டும் நிற்க வைக்க எவராலும் இயலவில்லை!" தியோதாரா தன் நீள்விழிகள் நாலாபுறமும் அலைபாய்ந்தும், செங்கனி அதரங்கள் குவிந்தும் சுழிந்தும் கூறிய அந்தச் சம்பவத்தை மிகக் கவனமாய்ச் செவிமடுத்தான் வில்லவன்.

“கேட்கக் கேட்க, ஆவலைத் தூண்டுகிறது!”

“எங்கள் இலியட் இதிகாசத்தை முழுவதும் கூறவேண்டுமானால், நாட்கணக்காகும்!” என்றபடியே தியோதாரா ஹீலியஸ் சிலையைப் பார்த்து கரம் கூப்பினாள்.

அவளது பார்வை தூரத்து சிலைமீது இருந்தது. வில்லவன் பார்வையோ அருகில் நிற்கும் அழகுச் சிலைமீது பதிந்தது.

மாலை நேரக் கடற்காற்று மாளிகையினுள் நுழைந்து அவர்களைத் தீண்டியது.


காற்றில் அலைபாய்ந்த தியோதாராவின் நீள்கூந்தல், மென்பட்டென வில்லவன் முகத்தை வருடியதும், அவன் நாசியில் மயக்கும் நறுமணம் ஏறியது. கால்கள் தரையிலிருந்து நழுவுவதுபோல உணர்ந்தான். அவன் நாளங்களில் குருதி வேகமெடுத்து பாய்ந்தது. உடலில் இன்பமான சூடு பரவியது. கண்களில் கிறக்கம் குடிகொண்டது.

பின்னால் நிற்கும் வில்லவனுக்குள் நிகழும் மாற்றங்கள் ஏதுமறியாமல் நின்றிருந்த தியோதாராவுக்குள்ளும் மாற்றங்கள் நிகழ்ந்தவண்ணமே இருந்தன. ஆனால் அவளது பார்வை மட்டுமே கடற்கரைப் பக்கம் இருந்தது. அவள் மனம் முழுவதும் வில்லவன்தான் விளையாடிக் கொண்டிருந்தான்.

இயற்கையின் படைப்பில் மனிதனே ஒரு அதிசயம்தான் என்றாலும், மனிதனின் மனமோ அதிசயத்துக்கெல்லாம் அப்பாற்பட்ட அதிசயம்!

தரையில் நிற்கும்போது வானில் பறக்கிற விந்தையை ஏற்படுத்திக் காட்டவல்ல மனித மனத்தின் பேராற்றல் எதையும் சாதிக்க வல்லது!

சில நேரங்களில் சிக்கலான ஒன்றை எளிதில் தீர்வு காண்பதும், தெளிவான ஒன்றைப் பெரும் சிக்கலாக்கி விடுவதும் மனம் செய்யும் மந்திர விளையாட்டு!



தியோதாராவின் மனதும் இப்போது அந்த விந்தையைத்தான் நிகழ்த்தியபடி இருந்தது. மனத்தளவில் அவள் வில்லவனை ஆரத்தழுவிக் கொண்டிருந்தாள். ஆனால் அதற்கான எவ்வித அறிகுறியும் அவள் மூச்சிலும் கூடத் தென்படவில்லை!

அலைபாயும் கூந்தலைத் தொடர்ந்தாற்போல், அவள் மேனியை அலங்கரிக்கும் மென்பட்டுத் துகிலும் இப்போது வில்லவனின் முகத்தை வந்து வருடியது.

கடலோரக் காற்று காதல் விளையாட்டைத் துவங்கியது!

விசாலமான அறையில் அவர்கள் இருவருக்கும் கிடைத்த தனிமை, அந்த மாலைப் பொழுது வழங்கிய கருணைதான் என இருவருமே உணர்ந்தார்கள்.

அவளை இறுக அணைத்துக் கொள்ளத் துடித்தது வில்லவன் மனம்!

அவன் தன்னை அணைக்க மாட்டானா எனத் துடித்தது அவள் மனம்!

அங்கே சிலநொடிகள் நிலவிய அமைதியை உடைத்தது ஒரு குரல்...

“வில்லவரே.... ஒரு அவசர செய்தி!...” என விறுவிறுவெனக் கூறிக்கொண்டே விடுவிடுவென உள்ளே வந்த வளவத்திரையன், ஒருகணம் திடுக்கிட்டு நின்றான்.

வில்லவன் மட்டும் அங்கே நிற்பதாக நினைத்து வந்தவன், தியோதாராவும் அங்கே நிற்பது கண்டு துணுக்குற்றான்.

“மன்னிக்கவேண்டும்... நான்... தாங்கள் மட்டும்...”

“இருப்பதாக நினைத்துவிட்டாயா? இந்தக் கவிதாயினி சற்றுமுன்தான் வந்தார். இங்குள்ள சிலை குறித்து விளக்கிக் கொண்டிருந்தார்! அதற்குள் நீ வந்துவிட்டாய்! வா வளவா!...” நின்ற இடத்திலிருந்து நகராமல் வளவத்திரையனை அழைத்தான் வில்லவன்.

தியோதாரா சற்று இடைவெளிவிட்டு நகர்ந்து கொண்டு “வாருங்கள் வளவரே!” எனக் கரம் கூப்பினாள். வளவத்திரையன் அவர்களை நோக்கி வந்தான்.

“உங்கள் உரையாடலில் குறுக்கிட்டதற்கு முதலில் மீண்டும் மன்னிக்கவும்!” சாளரத்தின் வழியே அவன் பார்த்தபோது ஹீலியஸ் சிலை அவனைப் பார்ப்பது போலத் தெரிந்தது.

“அதெல்லாம் ஒரு குறுக்கிடும் இல்லை! நீ ஏதோ



அவசரச் செய்தி என்றாயே!...”

“ஆம்! நாம் அனைவரும் ஆபத்தில் இருக்கிறோம்!... உடனே மன்னரைச் சந்திக்கவேண்டும்!” என்றவன், சட்டென வில்லவன் காதில் ஏதோ கிசுகிசுக்க, வில்லவன் முகம் மாறினான்.

தியோதாரா விவரம் ஏதும் அறியாதவளாய் அவ்விருவரையும் மாறிமாறிப் பார்த்தாள்.

மாலை நேரத்தில் கதிரவன் செய்த மாயவித்தையால் பொன்னை உருக்கி வார்த்தது போல தகதகத்தது தெலோஸ் தீவின் கடற்பரப்பு!

மன்னர் பாரீசும் அமைச்சரும் அந்தப் பொன்வார்ப்பினை ரசித்திடும் நிலையில் இல்லை! மன அமைதியற்று ஆழியை நோக்கியே பார்வையைப் பதித்தபடி நின்றிருந்தனர்.

அவர்களருகே கவலை கவ்விய முகத்துடன் இருந்த தியோதாராவின் கரத்தை அழுந்தப் பிடித்தபடி நின்ற தாலியாவும் கலக்கத்துடனேயே இருந்தாள்.

ஹீலியஸ் சிலை அருகே கோட்டையின் ஒரு சாளரத்தில் நின்றிருந்த அந்த நால்வரது பார்வையும் மேற்குநோக்கி கடலில் விரையும் சேரநாட்டு நாவாய்கள் மீதே நீடித்தது.

“நான் பெரும் தவறு செய்துவிட்டேன் அமைச்சரே!” மிகுந்த வருத்தத்துடன் வெளிப்பட்டன மன்னர் பாரீஸின் வார்த்தைகள். அவரது மனநிலையில்தான் மற்ற மூவரும் இருந்தனர்.

“ஆம்! அந்த இளைஞன் நமக்காக தன் உயிரைப் பணயம் வைக்கும்போது, நாம் இங்கே வேடிக்கை பார்க்கும் சூழலில் நிற்பது, மிகுந்த வேதனையாகத்தான் இருக்கிறது! ஆனால் அரசே! எவ்வளவோ எடுத்துக்கூறியும் நம்மை வரக்கூடாது என்றல்லவா வாக்குறுதி வாங்கிக் கொண்டு சென்றுவிட்டான் அந்த வீர இளைஞன்!” அமைச்சரின் வார்த்தைகளில் அவரது உள்ளக் குமுறல் தெரிந்தது.

ஆழியின்மீதே வைத்தகண் வாங்காமல் நின்றிருந்த தியோதாராவின் விழிகளில் நீர் கசிந்தது.

“நம்மைக் காக்க வந்து தன்னைப் பணயம் வைக்கும் நிலை ஏன் வில்லவருக்குத் தொடர்கதையாக



இருக்கிறது?" கண்கள் துளிர்க்கக் கூறியவளைத் தாலியா ஆறுதல்படுத்தினாள்.

"கலங்காதே தியோ! வில்லவர் மட்டுமல்ல, வளவத்திரையரும் உடனிருக்கிறார். அவர்களின் வீரத்தின்மீது நம்பிக்கை கொள்!" அமைதியாகச் சொன்னாலும் அழுத்தமான நம்பிக்கையுடன் கூறினாள் தாலியா.

"ஆம்! வளவத்திரையர் மட்டும் சரியான நேரத்தில் செய்தி கொண்டுவராவிட்டால், நம் தீவில் இன்று இரவு இரத்த ஆறு ஓடியிருக்கும் தாலியா!" உள்ளம் கலங்கியபடி வார்த்தைகளை உதிர்த்த தியோதாராவின் கண்கள் தாரையிட்டது.

காலையில் வில்லவனோடு இதே இடத்தில் நின்றிருந்தபோது, வேகமாய் நுழைந்த வளவத்திரையன் கூறிய செய்தி, வில்லவன் செவியில் தீயாகப் பாய்ந்தது.

அதிகாலையில் கடலில் தெரிந்த வெளிச்சப்புள்ளிகள் ஐயத்தைக் கிளப்பியதால், இத்தீவுக்கு வந்ததும், ஒரு படகில் நான்கு வீரர்களை மீனவர்களைப் போல் அனுப்பி உளவு பார்க்கச் செய்திருந்தான் வளவத்திரையன்.

தீவிலிருந்து பார்ப்பவர் கண்களுக்குத் தென்படாவண்ணம் தொலைதூரத்தில் நாற்பது கப்பல்கள், போர் வீரர்களைத் தாங்கியபடி நிற்பதையும், அக்கப்பல்களில் உள்ளவர்கள் இன்றிரவு தெலோஸ் தீவின் மீது போர் தொடுக்கும் முயற்சியில் இருக்கிறார்கள் என்பதையும் கணித்தான் வளவத்திரையன்.

அந்தச் செய்தியை வில்லவனுக்குத் தெரிவித்ததும், மன்னரிடமும் இதைப்பற்றிப் பேச முடிவெடுத்தார்கள்.

தீவின் வீரர்கள் ஏதென்ஸ் நகருக்குச் சென்றிருக்கும் சமயம் பார்த்து, இப்படியொரு போர்மேகம் சூழ்ந்ததை எண்ணிப் பெரிதும் கவலைப்பட்டார் மன்னர். இருக்கும் சொற்ப வீரர்களுடன் கடல்புக முடிவெடுத்தபோது வில்லவன் தடுத்தான்.

'கடற்போரில் வல்லவர்களான எங்கள் சேரவீரர்கள் இருக்கும்போது தாங்கள் கவலைப்பட வேண்டாம்! வந்திருக்கும் நாற்பது நாவாய்களில் உள்ளவர்களால் இத்தீவுக்குச் சிறு ஆபத்தும் ஏற்படாமல் பார்த்துக் கொள்கிறோம்! நீங்கள் எவரும் இப்போரில் ஈடுபடக்கூடாது! அத்துடன் இந்தப் போர்ச் சூழல் குறித்து மக்களுக்குத் தெரிவித்து அவர்களுக்குக் கலக்கம் தரவேண்டாம்! நாங்கள் பார்த்துக் கொள்கிறோம்! வெற்றியோடு திரும்புகிறோம்!" அழுத்தமான உறுதியை மன்னரிடம் தந்துவிட்டு விடைபெற்றுப் புறப்பட்டு விட்டான் வில்லவன்.

அவன் சென்றதையே பார்த்தபடி நின்றிருப்பவர்கள்தான் இப்போது அந்நால்வரும்!

அவர்களது பார்வையில் இருந்து சேரநாட்டுக் கலங்கள் மறைந்து வெகுநேரம் ஆகியும், அவர்கள் அந்த பொன்னிறக் கடற்பரப்பையே கூர்ந்தபடி நின்றிருந்தனர்.

இந்தப் பொன்னிறம் இன்றிரவு செந்நிறமாகப் போகிறதே... என்ற கவலை அந்த நால்வர் மட்டும் அறிந்த ரகசியமாக இருந்தது.

(கனவு தொடரும்...)

# தெய்வ நம்பிக்கை

எதிர்பாராச் சூழல்
எதிர்காலம் தாங்கும்
புதிர்விடை!

யார்க்கும்
புதிர்பின் விடைமுன்.
நிகழ்பவை யாவுமே
நேற்று நிகழ்வின்
தகவல் சுமந்திருக்கும்!

தப்பினால் நாளை!
நிகழ்வின் அறிகுறி
நீயே கதியெனத் தெய்வ நினைவில்
செயல்படும் யாவரும்
செய்யும் செயல்கள் திருத்தமாய் செய்ய
உணர்வால் உணர்த்துவார்
உள்நின்று காக்கும்
உணர்வு மொழியில் உரையாடும் அப்பன்

திடமாக நம்பினால்
தெய்வ மடியில்
கிடக்கும் மழலை வாழ்வு!

**எஸ். சுதாகர்**

# நகர்வு

நகரும் போதுதான் நதி அழகு!
நடக்கும் போதுதான் வாழ்க்கை அழகு!
நடந்தேன் நடந்தேன்!

ஊரை விட்டு
உறவை விட்டு
ஒரு நகர்வு!
நடந்தேன் நடந்தேன்!
ஈழம் விட்டு
இருந்த சொந்தம் விட்டு
இன்னொரு நகர்வு!

நடந்து களைத்து
நின்று நினைத்துப்
பெருமூச்சு விட்டேன்!
அப்போது தெரிந்தது!
வாழ்வின் அருமை! —அதற்குள்
அடுத்தடுத்த நகர்வுகள்!

காலநதியில் கால்பதித்து
கல்வி தேவதையோடு
கைகோர்த்து
கனதூரம் நடந்தேன்!
ஓரமாய் ஒளிர்ந்தது
ஒரு புதிய விடியல்!

விடியலைக்கண்டு
வட்டம் விட்டு
வெளியே வந்து பார்த்தேன்!
வாழ்க்கை வனப்புடையதாயிற்று!
நடக்கும் போதுதானே
வாழ்க்கை அழகு!
நம்பினேன் நடந்தேன்!
நடந்தது வாழ்க்கை நலமாக!

**கலாநிதி தனபாலன்**

## களைப்பே தெரியவில்லை !

கடந்துதான் வந்திருக்கிறேன்
தொலை தூரமாய்
களைப்பு ஒன்றும் தெரியவில்லை!

சூரியன் உட்பட
அவரவர் வேலையை
அவரவர் செய்ததால்
உயிர்கள்
தோன்றி மறைந்து
தோன்றி...

மனித கணக்கீட்டில்
இலட்சம், கோடி ஆண்டுகளாய்
இயற்கை கூட
தன்னை வளர்ந்து அழிந்து
வளர்ந்து

எதுவும் என்னிடம்
இல்லை
இருக்கும் என்பவை
நாளை இல்லை!

நான் என்பது நாளா?
நாள் என்பது
இரவும் பகலுமா?

நானே யார்
என்பது அறியாமல்
இதோ அடுத்த நிகழ்வுக்கு
நகர்ந்து கொண்டே
இருக்கிறேன்

வெகு தூரம்தான்
வந்திருக்கிறேன்
களைப்பே தெரியவில்லை!

களைப்பே தெரியவில்லை!

**எஸ்.தாமோதரன்**

## உயிர் எங்கள் தமிழ்

அகரம் மறந்தால் உயிர் இருக்காது
ழகரம் மறந்தால் தமிழ் இருக்காது
அன்பை மறந்தால் உறவிருக்காது
பண்பை மறந்தால் அறமிருக்காது
கண்ணை மறந்தால் ஒளி இருக்காது
தன்னை மறந்தால் வழி இருக்காது
விழுதை மறந்தால் ஆல் இருக்காது
பொழுதை மறந்தால் நாள் இருக்காது
நீரை மறந்தால் உயிர் இருக்காது
வேரை மறந்தால் பயிர் இருக்காது
ஒலியை மறந்தால் மொழி இருக்காது
வலியை மறந்தால் தொழிலிருக்காது
நூலை மறந்தால் ஞானம் இருக்காது
சேலை மறந்தால் மானம் இருக்காது
வனப்பை மறந்தால் சுவை இருக்காது
அணைப்பை மறந்தால் சுகம் இருக்காது
வானை மறந்தால் ஈரம் இருக்காது
வாளை மறந்தால் வீரம் இருக்காது
ஊரை மறந்தால் வீடிருக்காது
போரை மறந்தால் நாடிருக்காது
அடியை மறந்தால் ஆட்சி இருக்காது
கீழடியை மறந்தால் நீட்சி இருக்காது
தமிழை மறந்தால் வாழ்விருக்காது
தமிழுணர்வை மறந்தால்...
இருந்தும் இருக்காது உயிர்!

**மோ. அ. சூசைதாசன்**

# மகாகவி வரிகளுக்கு வந்த சோதனை!



## ‘அறம்’ தந்த அறிமுகம்!

## அருமையான பெருமிதம்!

## பார்வையாளர்க்கும் சோதனை ஆகாதிருக்கட்டும்!

நயன்தாராவின் ‘அறம்’ படத்தின் மூலம் இயக்குநராக அறிமுகமானவர் கோபி நயினார். ரசிகர்களிடையே நல்ல வரவேற்பைப் பெற்ற ‘அறம்’ படத்தைப் போலவே கதாநாயகிக்கு முக்கியத்துவம் கொடுக்கும் ‘மனுசி’ என்ற படத்தை கோபி நயினார் இயக்குகிறார். இப்படத்தில் பிரதான வேடத்தில் ஆண்ட்ரியாவுடன் விஜய் சேதுபதி நடிக்கிறார். இளையராஜா இசையமைக்க, வெற்றி மாறன் தயாரிக்கிறார். ‘மனுசி’ படத்தின் டிரைலர் வெளியாகி இணையத்தில் டிரெண்டாகியுள்ளது.

அறிமுக இயக்குநர் பாலாஜி கேசவன் இயக்கத்தில், அசோக் செல்வன், அவந்திகா மிஸ்ரா நடிப்பில் கலக்கலான காதல் நகைச்சுவையாக உருவாகியுள்ள படம் “எமக்குத் தொழில் ரொமான்ஸ்” இப்படத்தின் ஃபர்ஸ்ட் லுக், ரசிகர்களிடம் பெரும் வரவேற்பைப் பெற்ற நிலையில் தற்பொழுது படத்தின் டீசர் வெளியாகியுள்ளது. அசத்தலான ரொமான்ஸ் காமெடியாக அனைத்து தரப்பினரும் விரும்பும் வகையில் இப்படம் உருவாகியுள்ளது.



## அடங்காத ‘அரண்மனை’ அட்டகாசம்!

## இடம் விட்டு இடம் பெயரும் குபேரன்!

குபேரன் அருள்
இடம் பெயராதிருந்தால் சரி!

## வசூலிலும் ‘அரண்மனை’ அட்டகாசம்தான்!

இயக்குநர் சுந்தர்.சியின் இயக்கத்தில் ‘அரண்மனை’ திரைப்படம் நல்ல வரவேற்பினைப் பெற்றதையடுத்து ’அரண்மனை — 2 மற்றும் 3’ எடுக்கப்பட்டது. தற்போது, ’அரண்மனை 4’ படமும் வரவுள்ளது. யோகி பாபு, ராஷி கண்ணா, தமன்னா முக்கிய கதாபாத்திரத்தில் நடித்துள்ளனர். ஹிப்ஹாப் ஆதி இசையில் முதல் பாடலான ‘அச்சச்சோ’ பாடல் தமிழ் புத்தாண்டில் (ஏப். 14) வெளியாகி ரசிகர்களின் கவனத்தை ஈர்த்து வருகிறது. இப்படம் மே.3ஆம் தேதி வெளியாகுமென தெரிவித்த படக்குழு, ‘நல்ல விஷயங்கள் நேரமெடுக்கும்’ எனவும் தெரிவித்துள்ளது.

தனுஷின் — 51வது படத்தை சேகர் கமூலா இயக்கி வருகிறார். இதில் நாகர்ஜுனா முக்கிய கதாபாத்திரத்தில் நடிக்கிறார். தேவிஸ்ரீ பிரசாத் இசையமைப்பில் பான் இந்தியப் படமாக உருவாகும் இப்படத்திற்குக் குபேரா எனப் பெயரிடப்பட்டுள்ளது. இதன் படப்பிடிப்பு திருப்பதி, தாய்லாந்து, மும்பையில் நடைபெற்று வந்த நிலையில், தற்போது படப்படிப்பு நிறைவடைய உள்ளது.



# தல வலம்

## பெண்ணாகடம்

### பிரளய காலேசுவரர்

புவனகிரி செயபாலன்

‘பொன்னார் திருவடி கொன்றுண்டு விண்ணப்பம் போற்றி செய்யும்
என்னாவி காப்பதற்கு இச்சையுண்டேல் இருங் கூற்றகல
மின்னாரு மூவிலை சூலமென் மேற்பொறி மேவுக் கொண்டல்
பொன்னார் கடந்தையுள் தூங்கானை மாடச்சுடர்க் கொழுந்தே!’
திருநாவுக்கரசரின் தேவாரப் பதிகம்.



தேவார பாடல் பெற்ற 274 தலங்களில், நடுநாட்டுத் தலங்களில் இது இரண்டாவது தலமாகும்.

இறைவன் சுடர்க் கொழுந்துநாதர், கைவழுங்கீசர், பிரளய காலேசுவரர்.

இறைவி ஆமோதனாம்பாள், கடந்தை நாயகி, அழகிய காதலியம்மன்.

தலவிருட்சம் செண்பகம்.

தீர்த்தம் கயிலை தீர்த்தம், பார்வதி தீர்த்தம், இந்திர தீர்த்தம், முக்குளம், வெள்ளாறு.

புராணம்

தேவலோகத்தில் தேவேந்திரனுக்கு பூஜை செய்ய பூலோகத்து பூக்கள் தேவைப்பட்டது. எனவே பூலோகத்தில் இருந்து பூக்களைப் பறித்து வர



தேவலோகக் கன்னியர் இருவரை அனுப்பினான். அவர்கள் பூமி முழுக்க சுற்றி வந்தும் பூக்கள் கிடைக்காத நிலையில், நடுநாட்டின் திருக்கடந்தை என்று அழைக்கப்பட்ட பெண்ணாகடத்தில் உள்ள பிரளய காலேசுவரர் கோயில் நந்தவனத்தில் பல வகைப் பூக்கள் பூத்துக் குலுங்குவதைக் கேள்விப்பட்டு, இங்கு வந்து நந்தவனத்தில் உள்ள பூக்களைப் பறித்தபோது, அங்கு வீற்றிருந்த பிரளய காலேசுவரர் அருளால் ஈர்க்கப்பட்டு, தாம் வந்த காரணத்தை மறந்து சிவ சிந்தனை வயப்பட்டு, பறித்த பூக்களை அங்குள்ள சிவலிங்கத்திற்கு சாத்தி வழிபட்டு தங்கிவிட்டனர்.

தேவலோகக் கன்னிகைகள் திரும்பி வராததால் கோபம் கொண்ட இந்திரன், அவனிடமிருந்த காமதேனுவை (பசு) அனுப்பி தேவலோக கன்னிகளை அழைத்து வரும்படி ஆணையிட்டான். மண்ணுலகம் வந்த காமதேனு எங்கு தேடியும் அவர்கள் கிடைக்காமல் சிந்தை கலங்கி நின்றது. அப்போது தெற்கிலிருந்து வந்த தென்றல் திசை நோக்கி காமதேனு சென்றது. அங்குள்ள பூஞ்சோலை ஒன்றின் மையத்தில் தேவலோகக் கன்னிகள் இருவரும் சிவ பூஜை செய்வதை கண்ணுற்றது.

காமதேனு அருகில் சென்றதும், காமதேனுவின் உள்ளம் லயித்து, தான் வந்த பணியை மறந்து அவர்களுடன் சேர்ந்து கொண்டு, அவர்களுக்கு உதவியாக பிரளய காலேசுவரர்மீது காமதேனு பாலைப் பொழிந்தபடி வழிபடத் தொடங்கிவிட்டது.

காமதேனுவும் திரும்பாததால் வருத்தமுற்று ஐராவதம் என்ற தனது வெள்ளை யானையிடம் பூலோகம் சென்று தேவ கன்னியர் மற்றும் காமதேனுவையும் அழைத்து வர அனுப்பினான். அந்த யானை உலகெங்கும் தேடிப் பசியுடன் திரிகையில் ஓர் இடத்தில் முற்றிய கரும்பு தோட்டம், செந்நெல் வயல்கள் மற்றும் வாழை மரங்கள் இருந்ததைக் கண்டு பசியாற எண்ணி அங்கு செல்ல, அங்கே பூக்களுடன் தேவ கன்னியரும், ஓயாது பால் பொழியும் நிலையில் காமதேனுவும் பிரளய காலேசுவரருக்கு நடக்கும் பூஜை கண்டது.


'நானும் எனக்கு தகுந்தபடி இறைத்தொண்டு செய்வேன்' என்று கூறி திறந்தவெளியிலிருந்து ஈசனுக்கு ஒரு மண்டபம்போல் தானே நிழலாக நின்று காத்தது.

தேடிச் சென்றவர்கள் ஒருவரும் திரும்பி வராமல் போகவே, இந்திரனே அவர்களைத் தேடி மண்ணுலகம் வந்து இறுதியில் கன்னியரும் காமதேனுவும் வெள்ளை யானையும் சேர்ந்து இருந்த வெள்ளாற்றங்கரையை அடைந்தான்.

அவனும் அங்கிருந்த ஈசனால் ஆட்கொள்ளப்பட்டு சிவபோகத்தில் மூழ்கி சிவானந்தத்தைத் துய்த்து அருள் பெற்றபின், வந்தவர்களை அழைத்துக் கொண்டு இந்திரலோகம் சென்றான்.

தேவகன்னியர்கள் பெண், காமதேனு ஆ (பசு), வெள்ளை யானை கடம் ஆகியோர் சிவபூஜை செய்தமையால் இத்தலத்திற்கு பெண்+ஆ+கடம்= பெண்ணாகடம் எனப் பெயர் வழங்கலாயிற்று.





அதுவே நாளடைவில் மருவி பெண்ணாடம் ஆயிற்று.

திருஞானசம்பந்தரும், திருநாவுக்கரசரும் தங்களுடைய பதிகங்களில் இத்தலத்தை கடந்தை என்று குறிப்பிடுகின்றனர். வெள்ளையானை ஈசனுக்கு, தான் நின்றபடி விமானம் போல் நிழல் காத்து நிற்பதால், இத்தலத்திற்கு தூங்கானை மாடம் என்று பெயர். இந்திரன் வழிபட்டதால் மகேந்திரபுரி, நஞ்சுண்ட ஈசனின் களைப்பைப் போக்கியதால் சோக சாசனம், பார்வதி தேவி வழிபட்டதால் பார்வதிபுரம், எங்கும் காணக் கிடைக்காத மலர்வனம் இருந்ததால் புஷ்பவனம், புட்பாரண்யம், ஐராவதம் வழிபட்டதால் தயராசபதி என்ற பெயர்கள் வழங்கின.

ஈசன் பெயர்

ஒருமுறை பிரளயம் எனப்படும் ஊழிக்கால வெள்ளம் பெருக்கெடுத்து மண்ணுலகையும் உயிர்களையும் அழித்தபடி முன்னேறிய போது, சைவமும் தமிழும் தழைத்தோங்கிய வெள்ளாற்றிற்கும் தென்பெண்ணை ஆற்றுக்கும் இடைப்பட்ட நடுநாடு மட்டும் வெள்ளத்தால் உயர்ந்த நிலையில் இருந்ததைக் கண்ட தேவர்கள் இதற்கான காரணத்தைத் தேடினர்.

நடுநாட்டில் வெள்ளாற்றங்கரையில் குடிகொண்டிருந்த ஈசனே எனக் கண்டறிந்து அந்த ஈசனை நாடி ஊழி வெள்ளத்தில் இருந்து உலகை உய்விக்க வேண்டினர். ஈசனும் மனமிறங்கி நந்தி பெருமானுக்கு வெள்ளத்தைத் தடுக்கும்படி ஆணையிட்டார். உடனே நந்திகேஸ்வரர் கிழக்கு நோக்கி திருப்பி ஊழி வெள்ளத்தை உறிஞ்சி விட்டார் என்று திருக்கடந்தை புராணம் பிரளயம் காத்த சருக்கத்தில் கூறப்பட்டுள்ளது. இதனால் இத்தலத்து நந்திகேஸ்வரருக்கு அதிகார நந்தி என்று பெயர்.

சிவன் கோயில்களில் பொதுவாக நந்தி ஈசனை பார்த்த நிலையில் இருக்கும். ஆனால் இங்குள்ள நந்தி ஈசன் ஆணைப்படி செயல்பட்டதால் கிழக்கு நோக்கி அமர்ந்திருக்கிறது. அதேபோல் பிரளயத்தில் இருந்து மக்களை காத்தமையால் இத்தல ஈசன், பிரளய காலேசுவரர் என்றானார்.


கலிக்கம்பர்

63 நாயன்மார்களில் ஒருவரான கலிக்கம்பர் இத்தலத்தில் வணிகர் குலத்தில் தோன்றியவர். அவரும் அவரது மனைவியும் வீட்டிற்கு வருகின்ற சிவனடியார்களுக்கு பாதத்தில் நீர் வார்த்து அதன்பின் உணவளித்து சிவத்தொண்டு செய்து வந்தனர்.

ஒருநாள் உண்ண வந்த அடியார்களின் திருவடிகளுக்கு மனைவி நீர் வார்க்க, முன்னர் தம் வீட்டில் ஏவலராக இருந்து ஏவலை வெறுத்துச் சென்ற ஒருவர், சிவனடியாரது வேடத்தில் வந்தார் என்பதை அவருக்கு நீர் வார்க்கப் போகும் சமயத்தில் தெரிந்து, தன் கணவரிடத்தில் நீர் வார்க்காது தெரிவித்தார். மனைவியிடம் இருந்த நீர் சொம்பை வாங்கிக் கொண்டு அவளது கையை வாளினால் வெட்டினார். அதன்பின் வந்தவர்களுக்கு திருவமுது படைத்தார். ஈசன் அருளால் இழந்த கையை மீண்டும் வழங்கியதால், ஈசனுக்கு கை வழங்கீசர் என்று பெயர்.

மெய்க்கண்ட தேவர்

இத்தலத்தில் 13ஆம் நூற்றாண்டில் வாழ்ந்த அச்சுதக் களப்பிரரது புதல்வர் மெய்க்கண்ட தேவர். இவர் 14 சைவ சித்தாந்த தலையான சிவஞான போதத்தை இயற்றினார். மெய்கண்டாரது பிரதான மாணவர் அருளந்தி சிவாச்சாரியார். அவரது மாணவர் மறைஞான சம்பந்தர் ஆகியோர் இத்தலத்தில் வழிபட்டுள்ளனர். இத்தலத்திற்கு தென்மேற்கே களப்பாளர் மேடு என்ற இடத்தில்



மெய்க்கண்டாருக்கு தனிக்கோயில் எழுப்பப்பட்டு திருவாவடுதுறை ஆதினத்தால் நிர்வகிக்கப்பட்டு வருகிறது.

கோயில்

கோயிலுக்கு நாற்புறமும் உயரமான மதிற்சுவர்கள். வாயிலின் முகப்பின் மீது பஞ்சமூர்த்திகளின் திருவுருவங்கள் சுதையில் வடிக்கப்பட்டுள்ளன. உள்ளே முதலில் இருப்பது குடவரை விநாயகர். இதற்கு சற்று மேற்கில் பலிபீடம். அடுத்து 9 மீட்டர் உயரம் உள்ள கொடிக் கம்பம். அடுத்து மண்டபங்கள். மூலவர் பிரளய காலேசுவரரை நோக்காது கிழக்கு நோக்கி இருப்பது அதிகார நந்தி. நந்திக்கு சற்று மேற்கே ஏழு கலசங்கள் கொண்ட ஐந்து நிலை ராஜகோபுரம். இதன் அடிப்பகுதி கருங்கற்களாலும் மேற்பகுதி செங்கற்களாலும் கட்டப்பட்டது. அதன் உட்புறம் தென்மேற்கில் மேற்கு நோக்கி உள்ள சன்னதியில் நின்ற கோலத்தில் மெய்க்கண்டார். தென்புறம் மடப்பள்ளி.

கருவறையில் மூலவர்

கருவறை தெற்கில் சனகர் மற்றும் நால்வரும் உள்ளனர். கல்லால மரநிழலில் அமர்ந்து உபதேசம் செய்யும் தட்சிணாமூர்த்தி, தென்மேற்கு மூலையில் கிழக்கு நோக்கி கோடிவிநாயகர், அருகில் சமயக் குரவர்கள் நால்வர். அடுத்து முறையே மெய்க்கண்டார், மறைஞானசம்பந்தர், கலிக்கம்ப நாயனார், சேக்கிழார், தண்டபாணி ஆகியோரது உருவங்கள் தனித்தனியே உள்ளன.

கருவறை மேற்கு கோட்டத்தில் லிங்கோத்பவர். வடக்கில் பிச்சாடனார். அடுத்து சண்டிகேஸ்வரர் பக்கத்தில் வடக்கு நோக்கி துர்க்கை. இத்துடன் தனியே துர்க்கை சன்னதி ஒன்று உள்ளது. தனிச்சன்னதியில் வெள்ளிக்கிழமை ராகு காலத்தில் மகளிர் பூஜை செய்து வழிபடுகின்றனர். வழிபட்டால் பல துயர்கள் நீங்கும் என்பது நம்பிக்கை.

ஈசன்

கருவறையில் ஈசன் சுடர்க் கொழுந்தீசர், சுடர்க் கொழுந்து நாதர் என்னும் பெயர்களில் லிங்க வடிவில் கிழக்கு நோக்கி எழுந்தருளியுள்ளார். இதையொட்டி நந்தி தேவர் சன்னதி. கருவறை மூன்று புறங்களிலும் கல்பலகணி போல் (சன்னல்) இடைவெளிகள் விட்டுக் கட்டப்பட்டுள்ளது. ஈசனை சுற்றுப் பிரகாரத்தில் இருந்தபடியே தரிசிக்கலாம். யானை நிழல் காப்பதுபோல் தூங்கானை மாடமாக விமானம் போல் வடிவமைக்கப்பட்டுள்ளது. கருவறை விமானத்தின் வடக்குக் கோட்டத்தில் பிரம்மா, சிவ பூஜை செய்யும் தேவ கன்னியர், உமா மகேஸ்வரர் போன்ற சிற்பங்கள். கிழக்குப் பகுதியில் இடபாருடர். அம்மன், மெய்க் கண்டார் போன்ற சிற்பங்கள் உள்ளன.

மலைக்கோயில்

வடக்கே முப்பது மீட்டர் உயரத்தில் கட்டப்பட்டுள்ளது மலைக்கோயில். இங்கு சௌந்தரேசுவரர் சிவலிங்க வடிவில் கிழக்கு நோக்கியபடி அருள் புரிகின்றார். இதன்மீது ஏறுவதற்கு படிக்கட்டுகள் உள்ளன. இதற்கு கட்டுமலைக் கோயில் என்று பெயர். இத்தலத்திற்கு அருகில் உள்ள சௌந்தர சோழபுரத்தில் வாழ்ந்து வந்த சவுந்தரவல்லி என்னும் அம்மையார் பண்டமாற்றம் செய்ய (அக்காலத்தில் பணம் புழங்காத காலத்தில் தன்னிடம் உள்ள நெல், வாழை போன்ற விளைப் பொருட்கள் கொடுத்து அதற்கு ஈடாக தங்கள் குடும்பத்துக்கு தேவையான பருப்பு, துணிமணி, மிளகு, சீரகம் என்பனவற்றை வாங்கிக் கொள்வதற்கு பண்டம் மாற்று என்று பெயர்) பெண்ணாடம் கடை வீதிக்கு வருவதை வழக்கமாகக் கொண்டிருந்தவர்.

கடைவீதியில் இருந்தவாறே ஈசனை வழிபட விரும்பியதாகவும், அவள் விருப்பத்தின் பேரில் மலைக்கோயில் கட்டப்பட்டது என்பர்.



சோழ மன்னன் ஒருவன் வெள்ளாற்றின் கரைக்கு வந்தபோது ஆற்றில் வெள்ளம் கரைபுரண்டதால் வரமுடியாமல் அங்கிருந்து தவம் செய்ய, அவனது பேரன்புக்கு இறங்கி லிங்கத்தை அங்கிருந்தபடி வழிபாடு செய்வதற்காக ஈசனை வழி வகுத்தார் என்றும் கூறுகின்றனர். இக்கோயில் ஒரு தளமும், வட்டமான கழுத்துடன் வட்டச் சிகரமும் கொண்டு ஒற்றைக் கலசத்துடன் உள்ளது. இக்கோயில் விமான கோட்டங்களில் தட்சிணாமூர்த்தி, கண்ணன், பிரம்மா போன்ற சுதைச் சிற்பங்களும், நந்தி, திருமால், குழலூதும் வேணுகோபாலும் சிற்ப வடிவில் உள்ளனர்.

அம்மன் சன்னதி

மலைக்கோயில் சன்னதிக்கு வடக்கே அம்மன் சன்னதிக்குச் செல்லும் நுழைவு வாயில். அதை ஒட்டிச் சென்றால் அம்மன் வடக்கு பிரகாரம் சென்று அம்மனின் கிழக்கு பிரகாரத்தை அடையலாம். அம்மன் சன்னதிமுன் பலிபீடம், கொடிமரம். நந்தியை வலம் வந்தால் அம்மன் சன்னதி கருவறையில் ஆமோதனம்பாள், கடந்தை நாயகி, அழகிய காதலி என்னும் பெயரில் கிழக்கு நோக்கி அருள்பாலிக்கின்றார். இங்குதான் அம்பாள் வேள்விச்சாலை அமைத்து தவம் இருந்து வழிபட்டார்.

பிரளய காலேசுவரர் கருவறையை அடுத்து உள்மண்டபமும் அதற்கு அடுத்து மகா மண்டபமும், அதை ஒட்டி 20 தூண்களைக் கொண்ட மண்டபம் உள்ளன. அம்மன் சன்னதியை அடுத்து உள்மண்டபமாக மகா மண்டபத்தைத் தொடர்ந்து முன் மண்டபமும் உள்ளன. அதிகார நந்தி சன்னதி வடபுறம் 60 தூண்களைக் கொண்ட வாகன மண்டபம் உள்ளது.

நடராஜர்

வடக்கு பகுதியில் யாகசாலை. இதனை அடுத்து நடராஜர் சன்னதி. வெண்கலத்தால் ஆன சிலை வடிவில் நடராஜர் தெற்கு நோக்கி உள்ளார். பக்கத்தில் சிவகாமசுந்தரி. ஒரு தள சாபகார விமானம். மூன்று கலசங்களைக் கொண்டது. இதன் நாற்புறங்களிலும் யாளிகள் தாங்குவது போல் அமைந்துள்ளன. அருகில் சைவத்திருமுறைகள் அடங்கிய பேழைப்பட்டி வழிபாடு செய்யப்படுகிறது. இதன் பின்னால் பைரவர், சூரியர் சன்னிதி. அடுத்து தென்புறத்தில் மேற்கு நோக்கி கலிக்கம்பர் சன்னதி. இதன் எதிரில் வாயிலின் தென்புறம் மெய்க்கண்டார் கோயில்.

அம்மன் சன்னதி முன்மண்டபத்தின் விதானத்தின் சுற்றுச்சுவர்களில் இத்தல வரலாற்றை விளக்கும் வகையில் ஓவியங்கள் தீட்டப்பட்டுள்ளன. சிவபெருமான் நஞ்சுண்ட காட்சி ஓவியமாக வரையப்பட்டுள்ளன.

பதிகம்

திருஞானசம்பந்தர் 11 பதிகங்களும், திருநாவுக்கரசர் 3 பதிகங்களும் பாடியுள்ளனர். சமணராக இருந்து சைவராக திரும்பவும் மாறிய திருநாவுக்கரசர், ‘சமணரோடு வாழ்ந்த இந்த உடலோடு உயிர் வாழேன்! இவ்வுடலை யான் ஏற்கும் பொருட்டு எனது தோள்களில் உமது (ஈசன்) இலச்சினை சூலம், இடபம் (ரிஷபம்) பொறித்தருள வேண்டும்!’ என ஈசனை வேண்ட திருநாவுக்கரசர் தோள்களில் இலச்சினை பதித்தார் இத்தலத்து ஈசன் என்று பெரிய புராணம் கூறுகிறது.

கல்வெட்டு

இத்தல ஆலயத்திலும் சற்று தொலைவில் இருக்கும் பரிமள ரங்கநாதர் ஆலயத்திலும் 40 கல்வெட்டுகள் உள்ளன என்று தொல்பொருள் துறையினரால் கண்டெடுக்கப்பட்டுள்ளன. இக்கல்வெட்டுகளில் இக்கோவிலுக்கு தானம் அளித்த விளைநிலங்கள், மானியங்கள் அளித்த பொருட்கள், திருப்பணி


VARSHA™
Ready to Cook
Made with Quality Natural Products
Idli / Dosa Wet Mix
இட்லி / தோசை மாவு
ఇడ్లీ దోస పిండి
ಇಡ್ಲಿ ದೋಸೆ ಹಿಟ್ಟು
ഇഡ്ഡലി / ദോശ മാവ്
CRISPY DOSA * SOFT & FLUFFY IDLI
100% Pure Vegetarian
ઈડલી ડોસા નું ખીરું
इडली/ दोसा आटा



செய்த பணிகள் பற்றியும் திருவிழாக்கள் பற்றியும் பொறிக்கப்பட்டுள்ளன. அந்நாளில் இக்கோயில் மாடக் கோயிலாக கோச்செங்கட் சோழன் கட்டினான் என்று கல்வெட்டு மூலம் தெரிய வருகிறது. இக்கோயிலுக்கு 52 ஏக்கர் நஞ்சை புஞ்சை நிலங்களும் மற்றும் கோயில் அருகில் 30 கட்டிடங்களும், அடிமனைகளும் மேலும் பல இடங்களும் சொந்தமாக உள்ளன. நிலங்களில் இருந்து வரும் குத்தகை வருவாய், கட்டிடங்களின் வாடகை, அடிமண் வாடகை போன்றவற்றால் வருமானம் வருகிறது.

தல மகிமை

பிற சிவத்தலங்களில் செய்த பாவம் சுயம்புலிங்கத் தலங்களில் மாயும்! சுயம்புலிங்கத் தலங்களில் செய்த பாவம் காசியில் தொலையும்! காசியில் செய்த பாவம் குடந்தையில் அழியும்! குடந்தையில் செய்த பாவம் கடந்தையில் போகும்!' என்று இத்தல கடந்தை புராணம் கூறுகிறது என சிவஞானப்பிரான் பிள்ளை புட்பவன மான்மியத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது.

திருவிழா

கார்த்திகை தீபத் திருவிழா, அன்னாபிஷேகம், ஆடிப்பூரம், திருக்கல்யாணம், நவராத்திரி, நடராஜர் அபிஷேகம் போன்ற உற்சவங்கள் நடைபெறுகின்றன. சித்திரை மாதம் 12ஆம் நாள், ஐந்தாம் நாள் திருவிழாவின் போது திருநாவுக்கரசருக்கு சூல இடப முத்திரை பதிக்கும் நிகழ்ச்சியும், 9ஆம் நாள் தேரோட்டமும் நடக்கும்.

குடமுழுக்கு

இத்தலை ஈசனுக்கு 2006 இல் குடமுழுக்கு நடந்தது. அதற்கு முன்பு 10.5. 1983 ஆம் ஆண்டு நடைபெற்றது. தற்போது குடமுழுக்குக்கான திருப்பணிகள் நடந்து கொண்டிருக்கிறது என கோயில் நிர்வாக அலுவலர் தெரிவித்தார். தொடர்புக்கு: 96779885074.

நேர்த்திக்கடன்

கை சம்பந்தப்பட்ட நோய்கள் அனைத்திற்கும் இத்தல ஈசனை வழிபட்டால் நீங்கும் என்பது ஐதீகம்! சிவனுக்கு அபிஷேகம் செய்து புது வஸ்திரம் சாற்றுகின்றனர். பெண்ணாடத்தின் மேற்கில் கருங்குழி தோப்பு என்னும் பகுதியில் அமைந்துள்ள பரிமள ரங்கநாதர் பெருமாள் கோயில் பிரளய காலேசுவரர் கோயில் நிர்வாகத்துடன் இணைந்த கோயிலாகும்.

கோயில் திறக்கும் நேரம்

தினமும் காலை 6:00 மணி முதல் 11.30 மணி வரையிலும், மாலை 5 மணி முதல் இரவு 8 மணி வரையிலும் திறந்திருக்கும்.

இருப்பிடம்

சென்னை திருச்சி இருப்புப் பாதையில் பெண்ணாடம் ரயில் நிலையம் உள்ளது. இங்கிருந்து இவ்வாலயம் 2 கி.மீ. தூரத்தில் அமைந்துள்ளது. தொழுதூரில் இருந்து கிழக்கே 28 கி.மீ. தொலைவிலும், விருத்தாச்சலத்தில் இருந்து மேற்கே 15 கி.மீ. தூரத்திலும் அமைந்துள்ளது.

(தொடரும் வலம்.....)





# சிலப்பதிகார விருந்து

**ஆசிரியர்: ந. சஞ்சீவி**

**விலை : ரூ. 200**

**வெளியீடு:**
**காவ்யா பதிப்பகம்,**
**சென்னை–24.**




*குடிமக்கள் காப்பியமான ‘தேனிலே ஊறிய செந்தமிழின் சுவை தேரும் சிலப்பதிகாரத்தையும்‘ அதன் உரைகளையும் எத்தனை முறை வாசித்தாலும் சலிப்பதில்லை. சிலப்பதிகாரத் தேன், சிலப்பதிகார விருந்து என்ற ந.சஞ்சீவியின் இரு நூல்களை, அவற்றின் 23 கட்டுரைகளை ஒரே நூலாக்கி வெளியிட்டுள்ளனர்.*

*‘திங்களைப் போற்றுதும், மங்கல வாழ்த்துப் பாடலை எடுத்து நாட்டுப்பற்றை விளக்கும் ஆசிரியர், ஒவ்வொரு கட்டமாகத் தொடர்கிறார்; செங்கோல் தென்னவர் காக்கும் நாடென கோவலன் பக்தியையும் தேச பக்திக்குச் சோதனை பற்றிய கட்டுரையில் கண்ணகியின் பக்தியையும் யானோ அரசன், யானே கள்வன்... கெடுக என் ஆயுள்’ எனப் பாண்டியனின் பக்தியையும் விவரிக்கிறார்.*

*சிலம்பின் சிறப்பு, குறிக்கோள், புகழ் எனப் பேசி, அரசியல் துறையிலும் இலக்கியத் துறையிலும் ஆன்மிகத் துறையிலும் தமிழ் மக்கள் ஒற்றுமையையே உயிர்நாடியாகக் கொண்டு உய்ய வேண்டும் என்பது இளங்கோவடிகள் கண்ட பெருங்கனவு என்று நிறைவு செய்கிறார் ஆசிரியர். சிலம்பின் பாடல் வரிகள் சித்தரிக்கும் காட்சிகள் ரசனைக்குரியவை. படிக்கப் படிக்கப் புதிய பொருள்களைத் தருபவை. ந. சஞ்சீவியின் எழுத்துகளும் அந்த அனுபவத்தைத் தரத் தவறவில்லை.*

சிறுகதை

# வழிவிட்டவள்

## உஷா தீபன்

‘என்னோட கொஞ்ச நேரம் அங்கே உன்னால உட்கார்ந்திருக்க முடியுமாம்மா?” என்று கேட்டான் சந்துரு.

‘வெயில்ல நடந்துட்டே இருந்தாத்தான் தலை சுத்தும். விழுந்துடுவோமோன்னு பயம்மா இருக்கும். உட்கார்ந்திருக்கிறதுக்கு என்ன?” என்று பிச்சு என்கிற பிச்சம்மாள் பையனைப் பார்த்துச் சொன்னாள்.

‘அதுக்கில்லைம்மா? அங்க திண்ணையில் உன்னை உட்கார்த்திட்டு, மாடிக்குப் போய் நான் ஜாதகப் புத்தகங்களைக் கேட்டு வாங்கி எழுதணும். குறைஞ்சது ஒரு மணி நேரமாவது ஆகும். எதிர்த்தாப்புல ஐயப்பன் கோயில் இருக்கில்லையா? அங்க ராஜேந்திரா காபி கடை இருக்கு. வாங்கிட்டு வர்றேன். சூடா குடி. அப்புறம் நான் மேலே போய் எழுத உட்கார்றேன். சரியா? உன்னால மாடிப்படி ஏற முடியாது. ஒடுக்கமா பலகைல படி அமைச்சிருப்பாங்க அங்கே! அதனால சொன்னேன்.”

‘காபி எதுக்குடா கண்ணா? இந்த ஃபிளாஸ்க்ல வெந்நீர் வச்சிருக்கனே” என்று கொண்டு வந்த பிளாஸ்க்கை காட்டினாள் பிச்சு.

‘இப்படித் தொட்டதுக்கெல்லாம் காசு செலவழியுமேன்னு பார்க்கப்பிடாது. வெளியே வந்தா தேவையானதை சிலது செய்யத்தான் வேண்டியிருக்கும். வெட்டிச் செலவுன்னு நினைக்கப்படாது. உட்காரு இங்கே. இதோ வர்றேன்” என்று சொல்லிவிட்டு, அந்தக் கடையை நோக்கி நடந்தான் சந்துரு.

உள்ளே நேர் ஹாலில் மேஜை போட்டு உட்கார்ந்திருப்பவர் இவர்கள் பேச்சைக் கேட்டுக் கொண்டே பார்த்துகொண்டிருப்பது தெரிந்தது.

‘ஜாதகம் பதிவு பண்ணியிருக்கேளா?” என்று அவர் கேட்டார்.


‘ஜாதகமும் பதிவு பண்ணியிருக்கோம். மாசப் பத்திரிகைக்கும் பணம் கட்டியிருக்கோம்‘‘ என்று பிச்சு அவரைப் பார்த்துச் சொன்னாள்.

‘அப்போ எதுக்கு இங்கே வந்து எடுத்துண்டு. அதான் தபாலிலே வருமே?”

‘அது போறலை. ஒண்ணும் அமையலை. இங்க நிறைய இருக்குமாமே. அதனான் என் பையன்தான் சொல்லி கூட்டிண்டு வந்தான்.”

‘அது சரி. நீங்க எதுக்கு அலையறேள் இந்தப் பதைபதைக்கிற வெயில்ல? அவன் குறிப்புகளை எடுத்துண்டு வரமாட்டானா?”

‘வருவான் மாமா. இங்கே கோயிலுக்கு வந்தோம். அப்டியே இதையும் முடிச்சிண்டு போவமேன்னு. நல்ல ஜாதகமா இருந்தாச் சொல்லுங்களேன்.



எம் பொண்ணுக்கு. பிரைவேட் ஸ்கூல்ல டீச்சரா இருக்கா? வைதேகின்னு பேரு..”

‘அப்படியா.. இந்தக் காலத்துல எல்லாம் ஐ.டி., சாப்ட்வேர் என்ஜினீயர்ங்கிறா.. அவாளுக்கே பையன் ஜாதகம் கிடைக்க மாட்டேங்குறது. பசங்களுக்கு ஏத்த பெண் ஜாதகமும் வறட்சி

தான். வெறும் டீச்சருக்கு என்ன கிடைக்கும்?” என்றார் அவர். பரிதாபப்படுகிறாரா அல்லது பரிகாசம் செய்கிறாரா? என்று அவரை பிச்சு கருணையோடு பார்த்தாள். ‘வெறும் டீச்சர் என்றால்? என்ன அர்த்தம்?’ என்று பிச்சு யோசித்தாள்.

‘என்னவோ மாமா. ஒரு கவர்ன்மென்ட் ஆபீஸ்ல வேலை பார்க்குற கிளார்க் கிடைக்க மாட்டானா? அதுக்குக் கூடவா என் பெண் தகுதியில்லாமப் போயிட்டா? அவனும், வர்றவ தனக்கு சமமா சம்பாதிக்கணும். அப்பத்தான் வண்டியோட்ட முடியும்ங்கிற நிலைமை வந்தாச்சு. ஏன்னா முன்னமாதிரி பென்ஷன் கிடையாதோல்லியோ? இப்பத்தான் பங்கு பென்ஷன்ங்கிறாளே? அதுவும் கைக்குக் கிடைக்காமே நிறையப் பேர் திண்டாடிண்டிருக்கா? இப்படியிருக்கச்சே. பிரைவேட் ஸ்கூல் டீச்சரை யார் கட்டுவா சொல்லுங்கோ?”

பிச்சு அமைதியானாள். ‘இவரென்ன இப்படி பேசறார்?’ என்றிருந்தது. ‘அவாவாளுக்குன்னு கடவுள் ஒண்ணைப் போட்டு வச்சிருக்க மாட்டாரா? அந்த அவனைக் கண்ணுல காமிக்காமயா போயிடப் போறார்? பார்த்துக்கலாம்‘ என்று நினைத்துக் கொண்டாள்.

‘அம்மா.. இந்தா..சூடு ஆறுவதுக்கு முன்னாடி குடி..” என்று சொல்லியவாறே காபி கப்பை நீட்டினான் சந்துரு. பார்த்துப் பதவாகமாய் வாங்கி உதட்டில் வைத்து உறிஞ்சினாள் . போன உயிர் திரும்பி வந்தது போலிருந்தது.

‘முன்னால நிக்கிறது நகர்ந்தாத்தானே அடுத்தடுத்து வெளியேறும். அதுக்கு நல்ல நேரம் வரணும்.’ என்று பலரும் இப்படித்தான் சொல்கிறார்கள்.

‘இந்தப் பாழாப் போனவ லேசுல வெளியேற மாட்டா போலிருக்கே! அவளென்ன செய்வாள் இதற்கு? அமைந்தால்தானே? இது வேண்டாம். அது வேண்டாம்னு ஒவ்வொண்ணையும் ஒதுக்கித் தள்ளினா? மனசுக்குப் பிடிச்சாதான் ஒத்துக்குவேன்னு சொல்றாள்’ என்று மனதுக்குள் பிச்சு நினைத்துகொண்டாள்.

‘உனக்கெப்படி அப்பா அமைஞ்சார். ஆயிரம் கஷ்டம் வந்தாலும் கலங்காத மனுஷனா நீ பிடிச்சிட்டே. நானும் அப்படி ஒரு ஆளைத் தேர்ந்தெடுக்கணும்னு நினைக்கிறபோது, அதிலென்ன தப்பு? ஏன் அலுத்துக்கிறே? உனக்கென்ன அப்படி அவசரம்? என்னை வீட்டை விட்டு சீக்கிரம் கழுத்தைப் பிடிச்சு தள்ளறதுதான் உனக்குக் குறிக்கோளா? நான் வெளியேறிட்டேன்னா மத்ததெல்லாம் சரியாயிடுமா? உன் கஷ்டமெல்லாம் தீர்ந்திடுமா? உன் தரித்திரம் போயிடுமா? கொஞ்சம் பொறு. எனக்கேத்த ஆளாப் பார்த்துத் தேர்ந்தெடுத்துண்டு நானே போயிடுறேன். அதுவரை கொஞ்சம்

பொறுமையாயிரு..! குணநலன்தான் எனக்கு முக்கியம். பணநலனில்லே! அது அளவா இருந்தாப் போதும். சமாளிச்சிப்பேன். அந்த தைரியம் எனக்கு உண்டு. எனக்கப்புறம் மீதம் ரெண்டு பேர் இருக்காங்கிற நினைப்பும் உண்டு. பொறுப்பும் உண்டு. புரிஞ்சிதா?' என்றல்லவா வைதேகி விடாமல் பேசுகிறாள்.

வைதேகியுடனான முந்தைய சம்பாஷனைகள் பிச்சுவை அதிர வைத்தது. 'இங்கேயிருந்து எத்தனை ஜாதகக் குறிப்புகள் எடுத்துண்டு போனா என்ன? அவளுக்குப் பிடிக்கணுமே?பொண்ணைப் பையனுக்குப் பிடிக்கிறதாங்கிறதைவிட, பையனை என் பொண்ணுக்குப் பிடிக்கிறதாங்கிறதுதான் இப்போ அதிமுக்கியமாப் போச்சு. எப்படி நடக்கப் போறதோ? யாரைத் தேரந்தெடுக்கப் போறாளோ? ஈஸ்வரா! என்று எதிரே சற்றுத் தள்ளி, உயர் கட்டடங்களையும் மீறி வானளாவ நின்ற கோயில் கோபுரக் கலசங்களைப் பார்த்துக் கன்னத்தில் போட்டுக் கொண்டாள் பிச்சு.



'பொண்ணு போட்டோ வச்சிருக்கேளா?" என்று உள்ளிருந்து குரல் வந்தது மீண்டும். பேச்சு நின்று ஒரு மணி நேரம் ஆகப் போகிறது. இதென்ன திடீரென்று? திரும்பிப் பார்த்தாள் பிச்சு.

'போட்டோ இருக்கான்னு கேட்டேன். அதைத்தானே கொண்டாங்கிறா இப்போ!" என்று மறுபடியும் கேள்வி வேகமாய் வந்தது.

'இருக்கே மாமா. இதோ. ஒன்றுதான் இருக்கு. அதுவும் எப்பயோ எடுத்தது.." என்று தான் வைத்திருந்த ஒரு பழைய பர்ஸின் உள் பகுதியில் பார்வையாய் வைத்திருந்ததை உருவி நீட்டினாள் பிச்சு.

'ரொம்பப் பழசு போலிருக்கே. லேட்டஸ்டா எடுத்து ஒரு பத்து போட்டோக்கள் கைவசம் வச்சிக்க மாட்டேளா? இதெல்லாம் சொல்லித் தரணுமா? இப்போ உங்க பொண்ணுக்கு என்ன வயசிருக்கும்?" சளைக்காமல் கேட்டார்.

'முப்பது ஆயிடுத்து மாமா. நாலஞ்சு வருஷமாப் பார்த்திண்டிருக்கேன். அமையலை. என்னைப் பிடிச்சு ஆட்டி வைக்கிறது. என்ன பண்ணட்டும் சொல்லுங்கோ? எதிலயும் மாட்டிக்காமே அவர் போய்ச் சேர்ந்துட்டார். புண்ணியவாளன். நான் மாட்டிண்டு முழிக்கிறேன். இன்னிக்குத் தேதிக்கு இதைவிட அழகாயிருப்பா நேர்ல. நிறம்தான் கொஞ்சம் மட்டு. ஆனா முகம் திருத்தமாயிருக்கும் மாமா. உங்களப் பார்த்த விசேஷம். எம்பொண்ணுக்கு ஏதாச்சும் ஒண்ணு அமையட்டுமே. உங்களுக்குக் கோடிப் புண்ணியம். முடிச்சு வையுங்கோ" என்று கையெடுத்துக் கும்பிட்டாள்.

'வருத்தப்படாதீங்கோ.இந்தஜாதகப்பரிவர்த்தனை சங்கம் பத்தி யாருமே உங்களுக்குச் சொல்லலை போலிருக்கு? நம்மடவாளுக்குன்னு வருஷக் கணக்கா இயங்கிண்டிருக்கு தெரியுமோல்லியோ? இப்பவாச்சும் வழி தெரிஞ்சிதே? எவ்வளவோ பேருக்குக் காரியம் கைகூடின அதிர்ஷ்டமான இடமாக்கும் இது! புண்ணியச் சேத்திரம்னு சொல்லணும்.."

'ஆகட்டும் மாமா.. உங்க வாய்முகூர்த்தம்.அவளுக்கு மாங்கல்யதாரணம் ஆகணும். அந்த அம்பாள் மீனாட்சிதான் கருணை செய்யணும்."

'ஆகும். எல்லாத்துக்கும் வேளை கூடி வரணுமோல்லியோ.. மனுஷப் பிரயத்தனங்கள் மட்டும் போறாதே!" என்று தேஜஸஸாடு கூடிய அவர் முகத்தை ஒரு முறை நன்றாகப் பார்த்துக் கொண்டாள் பிச்சு.

நல்லதாவே பேசுறார் மனுஷன். 'பகவானே முன்னே வந்து கேட்குற மாதிரியிருக்கு.நல்ல நேரம் கூடி வரட்டும்' என்று நினைத்துக் கொண்டாள். கண்களில் நீர் கசிந்தது.

'ஆஞ்சநேயர் கோயில், பஜனை மடம், விஸ்வ விநாயகர் கோயிலுன்னு சனி, ஞாயிற்றுக்கிழமைகளில் ஜாதகம் கொண்டு வந்து படலம் படலமாக் காட்டத்தான் செய்யுறா? எதுவுமே நமக்குப் பொருந்தி வரலை. முடிஞ்சதெல்லாம் நீக்குவாளோ?, மாட்டாளோ? பட்டியல் நீண்டுண்டேதான் போறது. ஏழெட்டு ஜாதகமுனு கஷ்டப்பட்டு குறிச்சிண்டு போனாலும் லெட்டர் போட்டா பையன் ஜாதகம் ஜெராக்ஸ் அனுப்ப மாட்டேங்கிறா? பதிலே போட மாட்டேங்கிறா? நாமளே பொண்ணு ஜாதகத்தை ஜெராக்ஸா எடுத்து எடுத்து அனுப்பினாலும் பதில் எதுவும் வர்றதில்லை. ஒரு போட்டோ அனுப்புங்கோன்னாவது யாராவது கேட்க மாட்டாளோ? மூச். நாயா அலைஞ்சதுதான் மிச்சம். மலைப்பா போச்சு மாமா. எங்காத்து மொதப் பொண்ணை என்னைக்கு வெளியில் தள்றேனோ

அன்னைக்குதான் விடியல். அப்புறம்தான் மத்ததை நகர்த்த முடியும் என்னால. இன்னும் ரெண்டு வச்சிண்டிருக்கேனே. புத்தி கெட்டவ! என்ன பண்ணச் சொல்றேள். பெத்தாச்சு.. கழுத்தை நெரிச்சா கொல்ல முடியும்? இல்ல விஷம் வச்சுக் கொல்ல முடியுமா? இந்தக் காலத்துல .எல்லாரும் ரொம்ப உஷாரா இருக்கா? ஒண்ணே ஒண்ணு.. கண்ணே கண்ணுன்னு இருந்துடறா? ரொம்பத் தப்பினா ரெண்டு கண்ணுல படறது. பெரும்பாலும் ஒண்ணுதான். ஒண்ணுக்கு ஒண்ணு துணை வேண்டாமோ? வேண்டாம்ங்கிறா? அதுக்குக் கல்யாணம் பண்ணிக் கொடுத்தா துணை தானா வந்துட்டுப் போறதுன்னு விட்டுட்டா?இந்தப் புத்தி மூத்த தலைமுறைக்கு இல்லாமப் போச்சு பாருங்கோ? ''

என்று பிச்சு தன்னை மறந்து, அவர் கேட்கிறாரா என்பதைக் கூடக் கவனிக்காமல் உளறிக் கொட்டிக் கொண்டிருந்தாள். புலம்பல்தான் என்று மனசு உறுத்திற்று. எந்தவழியிலாவது காரியம் ஆகாதா என்ற ஆதங்கம் தெறித்தது.

'அம்மா.. வா.. போகலாம். எடுத்தாச்சு.." என்று சொல்லியவாறே கீழே இறங்கி வந்தான் சந்துரு. மரப் படிகளில் இறங்கி வருவது சத்தத்தைக் கிளப்பியது. அவன்தான் பொறுமையோடு அலைகிறான். விடாமல் ஜாதகங்களை எடுத்து வருகிறான். வண்டிக்கு அச்சாணிபோலக் கடமையைச் செய்கிறான்.


'ஆச்சா.. போகலாமா? நாங்க வரோம் மாமா. நீங்கதான் சொல்லணும். தெரிஞ்சவா சொன்னாத்தான் புண்ணியம். காரியமாகும்."

'இருங்கோ.. இருங்கோ.. நீ எடுத்த குறிப்புகளைக் கொண்டா பார்ப்போம்'' என்றார் அவர்.

உள்ளே நுழைந்தான் சந்துரு. அவர் மேஜைக்குப் பின்னே, 'கைலாசநாதன், காரியதரிசி' என்ற போர்டு இருப்பதைப் பார்த்தான்.

ஒவ்வொன்றாகக் குறிப்பாய் கவனித்தார். பிறகு, 'சரி.. கொண்டு போய் உங்க பொண்ணோட ஜாதகத்தோட பொருந்தறதா பாருங்கோ. எட்டுப் பொருத்தம், ஒன்பதுன்னு அலையாதீங்கோ. ஆறு, ஏழு பொருந்தினாப் போதும். குறிப்பாக, வம்ச விருத்தி வேணும். அதான் முக்கியம். கவனத்துல வச்சிக்குங்கோ?" என்றவர் ஒரு குறிப்பிட்ட குறிப்பைச் சுட்டி, 'இது பொருத்தமா இருக்கான்னு பார்த்திட்டு வந்து எனக்குச் சொல்லுங்கோ?" என்றார்.

'ஆகட்டும் மாமா." என்று பிச்சு நம்பிக்கையோடு கிளம்பினாள். 'வரேன் அங்கிள்" என்று சொல்லிவிட்டு படியிறங்கினான் சந்துரு.



'ஒரு நிமிஷம். உங்க பொண்ணு ஜாதகம் பதிஞ் சிருக்கேளே. அது சீரியல் நம்பர் என்னன்னு சொல்லுங்கோ? கேட்க விட்டுட்டேன்.."

'நானூற்றி முப்பத்தியேழு மாமா. வைதேகின்னு பேரு. வோல்டாஸ் காலனில இருக்கோம்."

வந்த கையோடு குறித்து வந்த இடங்களுக்கு எழுதிப் போட்டாயிற்று. 'இனி பதில் வருமா, போன் வருமா' என்று காத்திருக்க வேண்டும். கடிதம் எழுதுவதே குறைந்து போன காலம். இருந்தாலும் இந்த மாதிரி விஷயங்களுக்கு இன்னும் எழுத்து மூலமான அக்கறை இருக்கத்தான் செய்கிறது. அப்போதுதான் நம்பிக்கையும் வருகிறது. நமக்குத்தான் வேளை வர வேண்டும். தினமும் தபால்காரரை எதிர்பார்த்து திண்ணையிலேயே பழி கிடக்க வேண்டும். வெறுமே அவர் கடந்து போகையில்தான் எத்தனை ஏமாற்றம்? இந்த உலகமே இரக்கமற்றதாய்த் தோன்றும் அந்தக் கணம்.

ஒரு வாரம் கழித்து மதியம் கடந்த பொழுதில், அந்த போன் வந்தது.

'அதிசயமா இருக்கே. அடடா.. சந்துரு கூட இல்லையே.. வெளில போயிட்டானே. இந்த நேரம் பார்த்து வருதே.. ஈஸ்வரா.. என்னவோ ஏதோ' என்று மிகுந்த பதற்றத்தோடு அந்தச் சின்னக் கையடக்க சாதா போனை எடுத்து சந்துரு சொல்லிக் கொடுத்திருந்ததுபோல் பச்சை பட்டனை விரல் நடுங்க அழுத்தினாள் பிச்சு.

'ஹலோ.. ஹலோ.." என்றாள். 'லைன் கிடைத்ததா?'

என்ற பதற்றம் வேறு. வேறு என்னென்னவோ சத்தமெல்லாம் குறுக்கிட்டது. பிறகு நின்றது.

'யாரு பிச்சு மாமி பேசறேளா. நான்தான் சங்கத்திலேர்நது செக்ரட்டரி பேசறேன். என்னைத் தெரியறதா?" என்று எதிர்க் குரல்

சத்தமாக வந்தது.

'நமஸ்காரம் மாமா. பையன் வெளிய போயிருக்கான். அதான் கொஞ்சம் பதட்டமா இருந்தது. எடுக்க லேட்டாயிடுத்து."

'அதானே பார்த்தேன். மணியடிச்சிண்டே இருக்கேன்னு. பரவால்லை. ஒரு விவரம் சொல்லணும். அதுக்காகத்தான்!"

'எப்படி மாமா போன் நம்பர் கிடைச்சது?" என்று பதற்றம் குறையாமல் கேட்டாள் பிச்சு.

'என்ன இப்படிக் கேட்கிறேள். உங்க பொண்ணு ஜாதகத்துல பின்னாடி எழுதியிருக்கேளோன்னோ? குறிப்பை வச்சு ஜாதகத்தை எடுத்துட்டேனே? வேறே என்ன வேலை எனக்கு? மறந்துட்டேளா! என்னைக்கோ

பதிஞ்சது. ஞாபகமில்லை போலிருக்கு!"

'அப்படியா.. நினைவில்லே மாமா.. பையன்தானே பாரம் வாங்கிப் பதிவு செஞ்சான். நான் என்னத்தக் கண்டேன். சொல்லுங்கோ?" என்று தன்னைக் கொஞ்சம் நிதானப்படுத்திக் கொண்டு பேசியவாறே நாற்காலியில் உட்கார்ந்து கொண்டாள். 'அப்பாடா.' என்று ஆசுவாசமாய் இருந்தது.

'ஒண்ணுமில்லே. உங்க பொண்ணுக்கு ஒரு ஜாதகம் அமைஞ்சிருக்கு. அதான் சொல்லலாமேன்னு.."

'அப்டியா மாமா.. ரொம்ப சந்தோஷம். நான்தான் அன்னைக்கே சொன்னேனே. உங்களாலதான் விடியணும்னு.. விடிஞ்சிடுத்து மாமா" என்று சற்றே குதூகலமாய்க் கேட்டாள் பிச்சு. அவர் குரல் நம்பிக்கையளித்தது.

'அவா வேத்துப் பிரிவுதான். முதல்லயே சொல்லிப்புடறேன். ஆனா நம்மடவா. பிரிவெல்லாம் பார்க்கப்படாதுன்னு பெரியவாளே சொல்லியிருக்காளோன்னோ? தெரியுமோல்லியோ? நல்ல மனுஷாளாங்கிறதுதான் முக்கியம். தெரிஞ்சிதா?"

'நீங்க சொன்னா சரிதான். பரஸ்பர அன்புதான் முக்கியம்."

'இந்தக் காலத்துல என்னென்னவோ நடந்துடறது. கலப்புத் திருமணங்கள் சகஜமா நடந்துண்டிருக்கு. நல்ல குடும்பமா, மரியாதையான, பொறுப்பான மனுஷாளா? பையன் பொறுப்பா, சமத்தா பொண்ணை வச்சுக் காப்பாத்துவானா? குடித்தனம் பண்ணுவானா? ரெண்டு பேரும் சந்தோஷமாயிருப்பாளாங்கிறதுதான் முக்கியம். புரிஞ்சிண்டேளா? இன்னொண்ணு..."

'என்னது? அதான் எல்லாம் சொல்லிட்டேளே மாமா?" என்று படபடத்தாள் பிச்சு.

'பார்த்தேளா.. அதுக்குள்ளேயும் பதட்டப்படுறேளே.பையனுக்கு சித்தே வயசு ஜாஸ்தி.. முப்பத்தியெட்டு. உங்க பொண்ணுக்கு அமையாம இழுத்த மாதிரி அவனுக்கும்!"

'என்ன மாமா. முப்பத்தியஞ்சுக்குள்ளன்னாக் கூடப் பரவால்லே.. முத்திக் குரங்கான்னா தெரியறது? தாம்பத்யமெல்லாம் குறையில்லாமக் கழியணுமே மாமா! நாளைக்குக் குழந்தை பிறக்கிறதுல ஏதாச்சும் பிரச்னைன்னா.?"

'எடுத்த எடுப்புல நீங்களே இப்படிப் பேசுறது நல்லாயிருக்கா? நாற்பதுலயும் அம்பது ஆரம்பத்துலயும் கூட இந்தக் காலத்துல குழந்தை பெத்துக்கிறா? அது அவா அவா இஷ்டம். வசதி வாய்ப்புகளைப் பொறுத்தது. மெடிக்கலா எவ்வளவோ முன்னேறியிருக்கிற காலமாக்கும் இது! எதுக்கும் அச்சப்படத் தேவையில்லே. முப்பதுகள் வயசு ஜோடிக்குப் போய் இப்படி பயப்படுறேளே? அதெல்லாம் சேமமா நடக்குமாக்கும். நல்லதையே நினையுங்கோ?"

'ஹலோ மாமா. நீங்க நல்லதைத்தான் சொல்றேள். கேட்டுக்கிறேன். சம்மதம்தான்."

'வாரிசு இல்லாமப் போயிடுமோன்னு பயப்பட வேண்டாம். அதெல்லாம் அவா பார்த்துப்பா. நன்னாவே நடக்கும். டக்குன்னு முடிச்சு பொண்ணை வெளியேத்தப் பாருங்கோ? இதைவிட நல்லதா ஒரு வரன் அமையாது. பையனும் பார்க்க லட்சணமாயிருக்கான். ரெண்டு பேருக்கும் நன்னாப் பொருந்திப் போறது ஜாதகம். நீங்க சொல்ற எட்டென்ன? பத்துமே பொருந்தறதாக்கும். ரஜ்ஜு பொருத்தம் அமர்க்களம்!"

'அதெப்படி மாமா.. எங்கயுமே எல்லாமும் பொருந்தாதே. ஆறேழு பொருந்தறதே துர்லபமாச்சே?" என்று விடாமல் கொக்கி போட்டாள் பிச்சு.

' அந்த ஆறேழுலதான் இந்த ரஜ்ஜு வந்து உட்கார்றது. மனசு பொருந்திப் போனா எல்லாமே பொருந்திட்டமாதிரிதான் அர்த்தம். அதுக்கு முன்னாலேஎந்த எந்தக் கிரக விசாரம் நிற்கும்? அதைச் சொல்ல வந்தேன்."

'உங்களை மலைபோல நம்பறேன் மாமா. எனக்குப் பரிபூரண சம்மதம்."

'மத்த விபரங்களை அப்புறம் அவாளோட பேசிட்டுச் சொல்றேன். வச்சிடட்டுமா? தைரியமா இருங்கோ? எல்லாம் நல்லபடியா முடியும். உங்க பொண்ணும் நிச்சயம் சம்மதிப்பா?வேளை வந்தாச்சு..”

டொக்கென்று சத்தம் கேட்டது எதிர் வரிசையில். பேச்சு முடிந்தது.

ஒரு நிமிடம் கண்ணை மூடிக் குலதெய்வத்தைப் பிரார்த்தித்துக் கொண்டாள் பிச்சு. உடம்போடு உண்டான சிலிர்ப்பு. தன்னை மீறிக் கலங்கிய கண்கள்.



அங்கே, 'உங்களுக்கு ரொம்ப நன்றி அங்கிள். இதை முடிச்சுக் கொடுத்ததுக்கு நீங்களே பார்த்து, பொறுப்பு எடுத்துண்டு சொன்னதுக்கு என்னோட பணிவான நமஸ்காரங்கள். அவருக்குக் கொஞ்சம் கால் ஊனம்ங்கிறதை மட்டும் அம்மாட்ட சொல்ல வேண்டாம். அது அவ்வளவாத் தெரியாது. உன்னிப்பாக் கவனிச்சிப்பார்த்தாத்தான் புரியும். பின்னாடி நான் சொல்லிச் சமாளிச்சிக்கிறேன். கல்யாணம் ஆனப்புறம் என்ன? சரின்னு போய்த்தானே ஆகணும். என் மனசுக்குப் பிடிச்சிப் போச்சு அவரை. மன ஊனம் இல்லாத நல்ல மனுஷன் .

ரொம்ப வருஷப் பழக்கம் அவர்.துளியும் தெரியாது எங்க அம்மாவுக்கு. எப்படி சொல்றதுன்னே சில வருஷத்தைக் கழிச்சிட்டேன். அவரும் என்னை நம்பியே இருந்திட்டார். அந்தளவுக்கு ரெண்டு பேரும் மனசு ஒன்றிப் பழகிட்டோம். என் கூட வேலை பார்த்தவர்தான். அப்புறம் ஃபேமிலிக்காக மாறுதல்ல போயிட்டார். ஆனா மனசு மாறவே இல்லை. இனி மீதிக் காலமும் அவரோடவே போயிடட்டும்ங்கிற முடிவுக்கு நானும் வந்திட்டேன். நான்தானே வழிவிடணும் எங்காத்துக்கு? குத்துக்கல்லா இருக்கிறவ நான்தானே? அதத்தானே அம்மா சொல்லிச் சொல்லிக் குத்திக் காட்டறா? மனசுதான் வாழ்க்கை” என்று கண்களில் நீர் பனிக்க வைதேகி சங்கச் செக்ரட்டரியை விழுந்து நமஸ்கரித்தாள்.

'உனக்குப் பெரிய்ய மனசும்மா.” என்று நெஞ்சுருகக் கூறி இருகரங்களாலும் மனசார ஆசீர்வதித்தார் அவர்.

'நீ கொடுத்த அந்தப் பையனோட ஜாதகத்தை உன் தம்பி குறிச்சிருந்தானாக்கும். அதக் குறிப்பாப் பாருங்கோன்னு நானும் சொல்லியிருந்தேன். என்ன பண்ணினாளோ? இப்போ உங்கம்மாட்டயே விலாவாரியாப் பேசியாச்சு. காரியமும் முடிஞ்ச மாதிரிதான். சந்தோஷம்தானே?”

'சந்தோஷம்ங்கிறதைவிட திருப்திங்கிறதுதான் சரி. நான் கிளம்பறேன் அங்கிள். ஏண்டீ லேட்டுன்னு அம்மா துளைச்செடுப்பா. யாரோட ஊர் சுத்திட்டு வர்றேன்னு கூட ஒரு நாள் கேட்டிருக்கா! அப்பா இல்லாத குறைக்கு இப்படிப் பல வசவுகள். எல்லாம் மரத்துப் போச்சு அங்கிள்.”

'அடுத்தாப்ல தம்பதி சமேதரா நீங்க ரெண்டு பேரும்தான் ஒத்துமையா இருந்து உன்னோட தங்கைமார்கள் ரெண்டு பேத்தையும் படிப்படியாக் கரையேத்தணுமாக்கும். அந்தப் பொறுப்புமே இனிமே உனக்கும் அவருக்கும்தான். அப்புறம்தான் உனக்கு மொத்தமா விடியும். ஞாபகம் வச்சிக்கோ?”

'கண்டிப்பா அங்கிள். என் கடமையை நான் மறக்கவே மாட்டேன். பொறுப்பா எனக்கு உதவுறதுக்கு ஒரு தம்பியையும் வச்சிருக்கேனே! மலைபோல அவன் எனக்கு இருக்கான்! தங்கக் கம்பி. என் மேலே ரொம்ப அக்கறை உண்மையிலேயே அவனுக்குத்தான்னு சொல்லணும்'' என்று புன்னகையை உதிர்த்துவிட்டு விடைபெற்றுக் கொண்டாள் வைதேகி.

ரயில் நிலையம் அருகே அமைந்த அந்தத் திறந்தவெளிக் காலனி வழியே நுழைந்து அவள் நடந்து வந்து கொண்டிருந்தபோது, விரிந்து கிடந்த தண்டவாளங்கள் தொலைதூரத்தில் ஒன்றுகூடி நீண்டிருப்பதைக் கண்ணுற்றாள்.




## “சிந்தனைச் சிற்பி” சிங்காரவேலர்

ம. சிங்காரவேலர், தமிழ்நாட்டைச் சேர்ந்த ஒரு பொதுவுடமைவாதி, தொழிற்சங்கவாதி, விடுதலைப் போராட்ட வீரர் எனும் பல பரிமாணங்களைக் கொண்டவர். மயிலாப்பூர் சிங்காரவேலு எனும் வழங்குபெயரானது தமது பொதுவுடைமைச் சிந்தனைகளை தமிழ்நாட்டில் பரப்ப இவர் ஆற்றிய பணிகளுக்காக “சிந்தனைச் சிற்பி” சிங்காரவேலர் எனும் சிறப்புப் பெயராக மாறியது.

சிங்கார வேலரின் பிறப்பு

சிங்காரவேலர் 1860 ஆம் ஆண்டு பிப்ரவரி 18 ஆம் தேதி பிறந்தார். இவரது குடும்பம் பிற்படுத்தப்பட்ட மீனவர் சமூகத்தைச் சேர்ந்தது. தனது பள்ளிக்கல்வியை முடித்த பின் மாநிலக் கல்லூரியில் பட்டப்படிப்பை முடித்தார். அதன்பின் சென்னை சட்டக்கல்லூரியில் சட்டம் பயின்று வழக்குரைஞர் ஆனார். ஆங்கிலம், தமிழ் மொழிகளைத் தவிர, இந்தி, உருது, பிரெஞ்சு, ஜெர்மன் ஆகிய மொழிகளிலும் அவருக்குப் பட்டறிவு இருந்தது. வெலிங்டன் சீமாட்டி கல்வி வளாகத்தில்தான் அவர் வீடு இருந்தது. அங்கு 20,000 நூல்களுக்கும் மேல் அவர் சேகரித்து வைத்திருந்தார். வசதியான குடும்பத்திலிருந்து வந்து அவர் வழக்கறிஞர் தொழில் செய்தபோதும் ஏழைகள் பற்றியே அவரது மனம் சிந்தித்துக்கொண்டிருந்தது. அவர் இருந்த குடியிருப்பு வளாகத்தை அவரது கைதுக்குப் பிறகு அன்றைய ஆளுநர் வெலிங்டன் பிரபு கைப்பற்றி, அந்த இடத்தில் கல்வி நிலையத்தை நிறுவி, தனது மனைவியின் பெயரை வைத்துக்கொண்டார்.

சிங்காரவேலர் சென்னை உயர் நீதிமன்ற வழக்கறிஞர் சபையில் வழக்கறிஞராக 1907 ஆம் ஆண்டு தன்னைப் பதிவுசெய்துகொண்டார். வழக்கறிஞர் தொழிலில் இறங்கிய சிங்காரவேலர் எந்தச் சூழ்நிலையிலும் அடக்குமுறையாளர்கள், பேராசைக்காரர்கள் ஆகியோரின் சார்பாக வழக்காடியதில்லை என்பது குறிப்பிடத் தக்கது. 1921 ஆம் ஆண்டில் ஒத்துழையாமை இயக்கத்தின்பால் ஈர்க்கப்பட்டு தனது வழக்கறிஞர் தொழிலை அவர் புறக்கணித்தார்.

கம்யூனிஸ ஆர்வம்

1922 ல் பம்பாயைச் சேர்ந்த எஸ்.ஏ. டாங்கேயுடன் சிங்காரவேலருக்குத் தொடர்பு ஏற்பட்டது. 1922 ல் எம். என். ராய் வெளிப்படுத்திய திட்டத்தால் கவரப்பட்டு, அவருடன் தொடர்ந்து கடிதப் போக்குவரத்து வைத்துக்கொண்டிருந்தார். 1923 ல் அவர் ‘மே தினம்’ கொண்டாட இந்துஸ்தான் உழவர் உழைப்பாளர் கட்சி (லேபர் கிசான் பார்ட்டி ஆஃப் இந்துஸ்தான், எல்.கே.பி.எச்.) என்கிற கட்சியைப் புரட்சிகரத் திட்டத்துடன் ஆரம்பித்தார். ‘லேபர் கிசான் கெஜட்’ என்ற பெயரில் ஆங்கிலத்தில் வார இதழையும், ‘தொழிலாளன்’ என்ற தமிழ் வார இதழையும் ஆசிரியராக இருந்து பதிப்பித்து வெளியிட்டார். மார்ச் 1924 ல் ‘கான்பூர் போல்ஷ்விக் சதி வழக்கில்’ சிங்காரவேலர் குற்றம்சாட்டப்பட்டார். அவர் நீண்ட காலம் நோய்வாய்ப்பட்டிருந்ததால், அவருக்கு எதிரான நடவடிக்கை கைவிடப்பட்டது.

இவ்வழக்கே இந்திய மண்ணில் பொதுவுடைமை இயக்கம், மக்கள் இயக்கமாக மாற காரணமாக இருந்தது. கான்பூர் பத்திரிகையாளரான சத்திய பக்த் என்பவர் சட்டபூர்வமான ‘இந்திய பொதுவுடைமைக் கட்சி’ அமைக்கப்பட்டிருப்பதாக 1924, செப்டம்பர் மாதம் அறிவித்தார். இந்திய கம்யூனிஸ்ட்டுகளின் முதல் மாநாடு 1925—ம் ஆண்டு, டிசம்பர் 28 முதல் 30 வரை கான்பூரில் சென்னைக் கம்யூனிஸ்ட் எம். சிங்காரவேரின் தலைமையில் நடந்தது. 1927—ல் பிரிட்டிஷ் கம்யூனிஸ்ட்டும் நாடாளுமன்ற உறுப்பினருமான ஷாபூர்ஜி சக்லத்வாலா சென்னைக்கு வருகைதந்தபோது சிங்காரவேலர் கேட்டுக்கொண்டதால், சென்னை மாநகராட்சி அவருக்கு வரவேற்பு விழா ஏற்பாடு செய்தது. சக்லத்வாலா பேசிய கூட்டங்களில் அவரது உரையை சிங்காரவேலர் மொழிபெயர்த்தார்.

சிங்காரவேலர் ஆற்றிய சமூகப் பணிகள்

இந்தியாவில் முதன்முதலாக மே நாளைக் கொண்டாடியவர். (தொழிலாளர் நாள்)ரஷ்யாவின் கம்யூனிசப் புரட்சியால் கவரப்பட்டு, இந்தியாவின்

# பெருமை


கார்த்திகா வாசுதேவன்


முதல் தொழிற்சங்கமான சென்னை தொழிலாளர் சங்கத்தை 1918இல் தொடங்கினார். சென்னை பக்கிங்காம் கர்னாடிக் ஆலையில் தொடங்கப்பட்ட இச்சங்கத்தின் முதல் தலைவராகவும் பணியாற்றினார்.தொழிலாளர் நலனுக்காக மே 1, 1923 ல் தொழிலாளர் விவசாயக் கட்சியைத் தொடங்கினார்.1925ல் இந்தியப் பொதுவுடைமைக் கட்சியைத் தொடங்கிய தலைவர்களுள் இவரும் ஒருவர்.

இவர் சென்னை மாநகராட்சி உறுப்பினராக இருந்த போது பள்ளிகளில் மதிய உணவுத் திட்டத்தை வெற்றிகரமாக நடத்திக் காட்டினார். அதன் பின்னர் இத்திட்டம் இடையிலேயே கைவிடப்பட்டது. எனவே இவரே காமராஜர் தமிழகம் முழுவதும் தொடங்கிய மதிய உணவுத் திட்டத்தின் முன்னோடி ஆவார்.

தமிழ் மொழிக்காகப் பெரிதும் பாடுபட்டார். தமிழை ஆட்சி மொழியாக்கும் கோரிக்கையை வலியுறுத்தினார். பல நூல்களை எழுதியுள்ளார். மேலும் பல நூல்களை வேறு மொழிகளிலிருந்து தமிழுக்கு மொழிபெயர்த்துள்ளார். இவர் எழுதிய சிந்தனை நூல்கள் மாஸ்கோ நகர் லெனின் நூலகத்தில் இடம் பெற்றுள்ளன. இவருடைய நூல்கள் தமிழக அரசால் நாட்டுடைமையாக்கப்பட்டுள்ளன.பெரியார் ஈ. வே. ராமசாமியின் சுயமரியாதை இயக்கம் 1930களின் ஆரம்பத்தில் பொதுவுடைமைக் கொள்கையின் பக்கம் சாய சிங்காரவேலரின் தூண்டுதல் காரணமாக இருந்தது.

சிங்கார வேலர் ஈடுபட்ட போராட்டங்கள்

சிங்காரவேலர் 1918ஆம் ஆண்டு மகாத்மா காந்தியைத் தன் தலைவராக ஏற்றார். இவர் ஆங்கிலேய ஆட்சியின் ரௌலட் சட்டத்தினை எதிர்த்தார்.

மேலும் 1919ஆம் ஆண்டு நடைபெற்ற ஜாலியன் வாலாபாக் படுகொலை நிகழ்வைத் தொடர்ந்து காந்தி ஒத்துழையாமை இயக்கப் போராட்டத்திற்கு அனைத்து வழக்குரைஞர்களுக்கும் அழைப்பு விடுத்தார்.

அதன் காரணமாக இவர் தனது வழக்குரைஞர் ஆடையை எரித்தும் "இனி எப்போதும் வக்கீல் தொழில் பார்க்க மாட்டேன். என் மக்களுக்காகப் பாடுபடுவேன்!" என்று கூறியும் ஆங்கில அரசுக்குத் தனது எதிர்ப்பையும் காந்திக்குத் தனது ஆதரவையும் காட்டினார்.

ஜாலியன் வாலாபாக் படுகொலை நிகழ்வைத் தொடர்ந்து ஏற்பட்ட பதற்ற நிலையைச் சமாளிக்கும் விதமாக இங்கிலாந்தின் வேல்ஸ் இளவரசர் இந்தியாவுக்கு வந்தார். அவரது வருகையை எதிர்க்கும் விதமாக சிங்காரவேலர்





சென்னையில் பெரிய போராட்டம் ஒன்றை முன்னின்று நடத்தினார். இப்போராட்டம் ஆங்கிலேய அரசையே உலுக்கியது என்று அறிஞர் அண்ணா கூறியுள்ளார்.

1927 ல் பெங்காள் — நாக்பூர் ரயில்வே வேலைநிறுத்தத்தில் தீவிரமாக ஈடுபட்டார்.ஆகஸ்ட் 1927—ல் சாக்கோ மற்றும் வான்செட்டி ஆகியோரின் மரண தண்டனையை எதிர்த்துக் கூட்டங்களும் நடத்தினார்.1928—ல் வரலாற்றுப் பெருமை வாய்ந்த தென்னிந்திய ரயில்வே வேலைநிறுத்தத்தை நடத்திய தலைவர்கள்மீது தொடரப்பட்ட சதி வழக்கில், அவருக்குப் 10 ஆண்டுகள் கடுங்காவல் தண்டனை விதிக்கப்பட்டது. பின்னர், அந்தத் தண்டனை குறைக்கப்பட்டு ஆகஸ்ட் 1930—ல் விடுதலை செய்யப்பட்டார்.

ம. சிங்காரவேலர் மீனவச் சமூகத்தைச் சேர்ந்தவராதலால், தமிழக அரசு மீனவர் வீட்டு வசதித் திட்டத்திற்கு இவரது பெயரைச் சூட்டியுள்ளது. மேலும் சென்னை மாவட்ட ஆட்சியர் அலுவலகத்திற்கு சிங்காரவேலர் மாளிகை என்று பெயர் சூட்டியது. பேரறிஞர் அண்ணா இவரை, “வெட்டுக்கிளிகளும் பச்சோந்திகளும் புகழப்படும் ஒரு நேரத்தில் ஒரு புரட்சிப் புலியை மக்கள் மறந்தனர்!” என்று கூறியுள்ளார். “போர்க்குணம் மிகுந்தநல் செயல் முன்னோடி பொதுவுடைமைக் கேகுக அவன் பின்னாடி!” என்று பாவேந்தர் பாரதிதாசன் பாடியுள்ளார் சிங்காரவேலர் பிறந்து 150 வருடங்கள் நிறைவுறுவதை நினைவுகூரும் விதமாக தமிழக அரசு சிங்கார வேலர் பிறந்த நாளை அரசு விழாவாக கொண்டாடியது. அதன்படி ஃபிப்ரவரி 18, 2011 அன்று அனைத்து அரசு பள்ளிகளிலும் சிங்காரவேலர் பிறந்த நாள் விழா கொண்டாட ஆணை பிறப்பிக்கப்பட்டது.. அவரது சிந்தனைகள், வாழ்க்கை வரலாறு, ஆகியவற்றைக் குறித்து மாணவ மாணவிகளுக்கு கட்டுரைப் போட்டிகள், கருத்தரங்குகள் நடத்தப்பட்டன.

சிங்காரவேலரின் படைப்புகள்

உலகம் சுழன்று கொண்டே போகிறது
கடவுளும் பிரபஞ்சமும்;1934; குடிஅரசு புத்தகாலயம், ஈரோடு.
கல்மழை உண்டாகும் விதம்
கோழிமுட்டை வந்ததும் காணாமல் போனதும்
சமதர்ம உபன்யாசம்: தமிழ்மாகாண சமதர்ம மாநாட்டின் சமதர்ம உபன்யாசம்;1934; குடிஅரசு புத்தகாலயம், ஈரோடு. [9]
சுயராஜ்யம் யாருக்கு? பாகம் 1,2,3
எது வேண்டும்? சுயராஜ்யமா? சமதர்ம ராஜ்யமா?; 1934; சமதர்ம பிரசுராலயம், 22 சவுத்பீச் ரோடு, திருவல்லிக்கேணி, சென்னை. [10]
தத்துவஞான விஞ்ஞானக் குறிப்புகள் —பல பகுதிகள்
தத்துவ, விஞ்ஞான, பொருளாதாரக் குறிப்புகள்
நடத்தை என்ற நவீன ஆராய்ச்சி
பகுத்தறிவென்றால் என்ன?
பிரகிருத ஞானம்
பிரபஞ்சத் தற்காலப் பிரச்சினை
பிரபஞ்சத்தில் தற்காலப் பிரச்சினை
பிரபஞ்சப் பிரச்சினைகள்
பிரபஞ்சமும் நாமும்
பேய், பிசாசு
மனித உற்பவம்; 1934; சமதர்ம பிரசுராலயம், 22 சவுத்பீச் ரோடு, திருவல்லிக்கேணி, சென்னை.[11]
மனிதனும் பிரபஞ்சமும்
மனோ ஆலய உலகங்கள்
மெய்ஞ்ஞான முறையும் மூடநம்பிக்கையும் — பாகம் 1; 1934; பகுத்தறிவு நூற்பதிப்புக் கழகம், ஈரோடு. [12]
மெய்ஞ்ஞான முறையும் மூடநம்பிக்கையும் — பாகம் 2; 1934; பகுத்தறிவு நூற்பதிப்புக் கழகம், ஈரோடு.[13]
விஞ்ஞான முறையும் மூட நம்பிக்கையும்
விஞ்ஞானமும் மூடநம்பிக்கையும்
விஞ்ஞானத்தின் அவசியம்


படைப்பாளிகளுக்கு...
* சிந்திப்போம்..
* படைப்போம்..
* மகிழ்வோம்!
*இதழில் வெளியாகிற
கவிதைகள்,கட்டுரைகள்,எழுத்தோவியங்கள்
யாவும் படைப்பாளிகளின்
பெருமைக்கும் பொறுப்புக்கும் உரியவை!
தொடர்புகளுக்கு
editor@ithamil.com



# சிவகாமியின்

## மூன்றாம் பாகம் : பிக்ஷுவின் காதல்

### சத்ருக்னன் வரலாறு 36

வாசற்படியில் மாமல்லர் வந்து நின்றதைச் சத்ருக்னனும் ஆயனரும் கவனிக்கவில்லை. அவ்வளவுக்குத் தங்களுடைய பேச்சில் அவர்கள் ஆழ்ந்திருந்தார்கள்.

மண்டபத்துக்குள்ளே மாமல்லர் பிரவேசித்ததும் இருவரும் ஏக காலத்தில் நிமிர்ந்து பார்த்தார்கள். சத்ருக்னன் சட்டென்று எழுந்து நின்று, "பிரபு!" என்றான். மேலே ஒன்றும் சொல்ல முடியாமல் அவன் திகைத்தான்.

ஆயனரோ முகத்தில் உற்சாகமும் குதூகலமும் ததும்ப சாய்ந்து படுத்திருந்தவர் நிமிர்ந்து எழுந்து உட்கார்ந்து "பிரபு! வாருங்கள்! வாருங்கள்! தங்களைத்தான் இப்போது நினைத்துக் கொண்டிருந்தேன். சத்ருக்னன் நல்ல செய்தி கொண்டு வந்திருக்கிறான். குழந்தை சிவகாமி உயிரோடு சௌக்கியமாயிருக்கிறாளாம்!" என்றார்.

இதைக் கேட்ட மாமல்லரின் தலை சுழல்வது போலிருந்தது. ஆயனருக்கு அருகில் வந்து நின்று சத்ருக்னனை ஏறிட்டுப் பார்த்த வண்ணம், "சத்ருக்னா! இது உண்மைதானா?" என்று கேட்டார்.

"ஆம் பிரபு! உண்மைதான்!" என்று சத்ருக்னன் கூறிவிட்டுக் கைகூப்பிய வண்ணம், "பல்லவ குமாரா! சற்று முன்பு காட்டுப் பாதையில் தங்களைக் கண்டபோது பேசாமல் வந்துவிட்டேன், அதற்காக மன்னிக்க வேண்டும். திடீரென்று தங்களைப் பார்த்ததும் பேசக் கூச்சமாயிருந்தது!" என்று பணிந்த குரலில் கூறினான்.




"அந்தப் பெண் நீதானா? நல்ல வேஷம்!" என்றார் மாமல்லர்.

"ஆமாம், நானுங்கூடச் சற்று முன்பு திகைத்துப் போய் விட்டேன். பெண் பிள்ளை வேஷம் எவ்வளவு நன்றாய் இவனுக்குப் பலித்திருக்கிறது? சக்கரவர்த்தி ஒவ்வொரு வேலைக்கும் எவ்வளவு பொருத்தமாய் ஆட்களைத் தேர்ந்தெடுக்கிறார்?" என்றார் ஆயனர்.

மாமல்லர் மெல்லிய குரலில், "சக்கரவர்த்தியின் சாமர்த்தியத்தை நீங்கள்தான் மெச்சிக் கொள்ள வேண்டும்!" என்று முணு முணுத்துக் கொண்டார்.

பிறகு, சத்ருக்னனைப் பார்த்து, "எதற்காக ஸ்திரீ வேஷம் போட்டாய்?" என்று கேட்டார்.

"சத்ருக்னன் அந்த வேஷம் போட்டதனால்தான் சிவகாமியைப் பற்றித் தெரிந்து கொள்ள முடிந்தது. தயவு செய்து உட்காருங்கள். சத்ருக்னன் எல்லாம் விவரமாய்ச் சொல்லட்டும். நானும் இன்னொரு முறை கேட்டுக் கொள்கிறேன்" என்றார் ஆயனர்.

மாமல்லர் உட்கார்ந்தார், சத்ருக்னனும் உட்கார்ந்து தன் வரலாற்றைக் கூறத் தொடங்கினான் அந்த வரலாறு இதுதான்:

"ஆயனரும் சிவகாமியும் காஞ்சிக் கோட்டையிலிருந்து சுரங்க வழியாக வெளியே போய் விட்டார்கள் என்று தெரிந்ததும் சக்கரவர்த்திக்கு இடி விழுந்தது போலாகி விட்டது. உடனே தாமும் கோட்டைக்கு வெளியே





போகத் தீர்மானித்துப் படைகளை ஆயத்தம் செய்யும்படி கட்டளையிட்டார். பிறகு என்னைத் தனியாகக் கூப்பிட்டு, 'சத்ருக்னா! நீ இதுவரையில் பல்லவ சாம்ராஜ்யத்துக்கு எத்தனையோ சேவைகள் செய்திருக்கிறாய். ஆனால், அவை எல்லாவற்றையும் காட்டிலும் முக்கியமான சேவை இப்போது செய்ய வேண்டும். மாமல்லன் மட்டும் இப்போது இங்கிருந்தால் நானே அந்த வேலையை மேற்கொள்வேன். பல்லவ குலத்தின் மானத்தைக் காப்பதற்காக நான் இப்போது போருக்குப் புறப்பட வேண்டியிருக்கிறது. சிவகாமியைக் கண்டு பிடித்து அவளைத் திருப்பிக் கொண்டு வரும் வேலையை உன்னிடம் ஒப்படைக்கிறேன். சிவகாமியை மீட்டுக் கொண்டு வர முடியாவிட்டால் அவளைப் பத்திரமாகப் பாதுகாக்க வேண்டும்' என்று கட்டளையிட்டார். இதைக் கேட்டு நான் திகைத்துப் போனேன். 'பிரபு! சிவகாமி அம்மை சளுக்கரிடம் சிறைப்பட்டிருந்தால் தன்னந்தனியாக நான் என்ன செய்வேன்?' என்றேன். 'கஷ்டமான காரியமானபடியால்தான் உன்னிடம் ஒப்படைக்கிறேன், சத்ருக்னா! நீ இதுவரை எத்தனையோ வேஷங்கள் போட்டிருக்கிறாய். அவை எல்லாவற்றையும் விட உனக்கு நன்றாகப் பலிக்ககூடிய வேஷம் ஒன்று இருக்கிறது, அது பெண் வேஷந்தான்!' என்றார். சக்கரவர்த்தியின் கருத்தை நான் உடனே தெரிந்து கொண்டேன். சற்றுமுன் பார்த்தீர்களே! அம்மாதிரி வேஷம் தரித்துக் கொண்டு காஞ்சியை விட்டுக் கிளம்பி முதலில் இந்த வீட்டுக்கு வந்து சேர்ந்தேன்.

நான் வரும் சமயத்திலேதான் இவரை ஸ்மரணையற்ற நிலையில் இந்த வீட்டுக்குள்ளே கொண்டு வந்தார்கள். இவரோடு சிவகாமி தேவி வரவில்லை. எனவே, தேவி சளுக்கரிடம் சிறைப்பட்டுத்தான் இருக்க வேண்டுமென்று தீர்மானித்துக் கொண்டு புறப்பட்டேன். காஞ்சிக்




கோட்டையைச் சுற்றிச் சென்றேன். சளுக்க ராட்சதர்களின் கூக்குரல் கேட்ட இடங்களிலெல்லாம் மறைந்திருந்து கவனித்தேன். கடைசியில் காஞ்சிக்கு வடமேற்கே ஒரு பெரிய சளுக்கர் படை வட திசையை நோக்கிப் புறப்பட்டுக் கொண்டிருந்ததைப் பார்த்தேன். அந்தப் பெருங்கும்பலுக்கு மத்தியிலிருந்து ஸ்திரீகள் புலம்பி அழும் சத்தம் வந்து கொண்டிருந்தது. இன்னும் அருகில் சென்று பார்த்த போது, அவ்வாறு ஓலமிட்ட ஸ்திரீகள் நம் கிராமங்களில் சிறைப் பிடிக்கப்பட்டவர்கள் என்று தெரிந்தது. அந்தப் பெண்களுக்கு நடுவே பல்லக்கு ஒன்றும் காணப்பட்டது. அதில் இருந்தவர் சிவகாமி தேவிதான் என்று தெரிந்து கொண்டேன்.



சற்று நேரத்துக்கெல்லாம் நான் தலை விரிகோலமாய் 'ஓ' என்று ஓலமிட்டுக் கொண்டு அந்தப் படையை நோக்கி ஓடினேன். பின்னால் என்னை யாரோ துரத்தி வருவதுபோலப் பாசாங்கு செய்து திரும்பித் திரும்பிப் பார்த்துக் கொண்டு ஓடினேன். சளுக்கர்கள், 'வந்தாயா? வா!' என்று பரிகாசக் குரலில் கூறிக்கொண்டு என்னை அழைத்துப்போய் மற்றச் சிறைப்பிடிக்கப்பட்ட பெண்களுடனே சேர்த்து விட்டார்கள். சற்று நேரம் மற்றப் பெண்களைப் போல் நானும் ஓலமிட்டுக் கொண்டிருந்தேன். பிறகு மெள்ள மெள்ளப் பல்லக்கை நெருங்கிச் சென்று அதிலிருப்பது சிவகாமி அம்மைதான் என்று உறுதிப்படுத்திக் கொண்டேன். சிவகாமியை அவ்வளவு மரியாதையுடன் அழைத்துபோன காரணத்தையும் ஊகித்தறிந்தேன். அந்தச் சளுக்கர் படையின் தலைவனாகிய தளபதி சசாங்கன், சிவகாமி அம்மையைப் பத்திரமாய்க் கொண்டுபோய் வாதாபிச் சக்கரவர்த்தியிடம் ஒப்புவித்துப் பல்லவ நாட்டின் சிறந்த கலைச் செல்வத்தைக் கொள்ளை கொண்டு வந்ததற்காகப் பரிசு கேட்கப் போகிறான்! இந்த எண்ணத்தினால் எனக்கு ஒருவாறு மனநிம்மதி ஏற்பட்டது. சிவகாமி அம்மைக்கு உடனே தீங்கு எதுவும் நேராது என்று தைரியம் அடைந்தேன். ஆனால், சளுக்க ராட்சதப் படையால் சூழப்பட்ட சிவகாமியை அங்கிருந்து அப்புறப்படுத்தி அழைத்துச் செல்வது சாத்தியமான காரியமாகவே தோன்றவில்லை. எத்தனையோ உபாயங்கள் யோசித்து யோசித்துப் பயன்படாது என்று கைவிட்டேன்.

இதற்கிடையில் எல்லாரும் வடதிசை நோக்கிப்



போய்க் கொண்டேயிருந்தோம். வெள்ளாறு என்று வழங்கும் பொன்முகலியாற்றங்கரைக்குப் போய்த் தங்கினோம். இவ்விடத்தில் தளபதி சசாங்கன் பெரு மனக்குழப்பத்தை அடைந்தவனாகக் காணப்பட்டான். அதன் காரணமும் சளுக்க வீரர்களின் சம்பாஷணைகளிலிருந்து தெரிந்து கொண்டேன். மணிமங்கலத்தில் வாதாபிச் சக்கரவர்த்திக்கும் மகேந்திர பல்லவருக்கும் நடந்த பெரும் போரைப் பற்றித் தூதர்கள் கொண்டு வந்த செய்திதான் காரணம். இந்தச் செய்தி தளபதி சசாங்கனுக்கு அவ்வளவு குழப்பம் ஏன் அளித்தது என்பதையும் நான் ஊகித்தறிந்தேன்.

வாதாபிச் சைனியத்தில் பெரும் பகுதியுடன் புலிகேசி முன்னால் சென்று விட்டதாகவும், இதற்குள்ளாக அவர் வடபெண்ணைக் கரையை அடைந்திருக்க வேண்டும் என்றும் சசாங்கன் எண்ணிக் கொண்டிருந்தான். இப்போது புலிகேசி தனக்குப் பின்னால் தங்கி மாமல்லபுரத்துக்குப் பக்கத்தில் மணிமங்கலத்தில் சண்டையிட்டதாகச் செய்தி வந்ததும் சசாங்கன் திகைத்தது இயற்கைதானே? சக்கரவர்த்தியைப் பின்னால் விட்டுவிட்டுத் தான் முன்னால் ஓடி வந்தது பற்றி அவருக்குக் கோபமோ என்னவோ என்று சசாங்கன் ரொம்பவும் தவித்துக் கொண்டிருந்ததாகத் தெரிந்தது.

பொன் முகலி ஆற்றங்கரைக்கு நாங்கள் வந்து சேர்ந்த மறுநாள் சசாங்கன் தன் சளுக்கப் படைகளுடன் தென்கரையில் இருந்து கொண்டு சிறைப்பிடித்த ஸ்திரீகளாகிய எங்களை மட்டும் அக்கரைக்கு அனுப்பினான். எங்களைக் காவல் புரிவதற்குச் சில சளுக்க வீரர்களை உடன் அனுப்பி வைத்தான்.

அக்கரை சென்றதும், 'இது ஒரு நல்ல சந்தர்ப்பம். சிவகாமி அம்மையை அழைத்துக் கொண்டு போய்ப் பக்கத்தில் காணப்படும் குன்றுகளிலே ஒளிந்து கொள்ளலாம். காவலர்கள் சிலர்தான் இருப்பதால் அவர்களுக்குத் தெரியாமல் இரவு நேரத்தில் தப்பிச் செல்லலாம்' என்று தீர்மானித்தேன். அன்றிரவு, எல்லோரும் தூங்க யத்தனம் செய்த சமயத்தில் நான் சிவகாமி அம்மையின் அருகில் இருக்கும்படி ஏற்பாடு செய்து கொண்டேன். மற்றப் பெண்கள் எல்லாரும் தூங்கிய பிறகு பிராகிருத பாஷையில் என்னை இன்னாளென்று தெரிவித்துக் கொண்டேன்.

சிவகாமி முதலில் பெரிதும் ஆச்சரியமடைந்தார். பிறகு, ஆயனரைப் பற்றிக் கேட்டார். தங்களைப் பற்றியும் விசாரித்தார். ஆனால் தங்களைப்பற்றி எனக்கு அப்போது தெரிந்திருக்கவில்லை. தாங்கள் தெற்கேயிருந்து திரும்பி வந்த விவரமே தெரியாது. ஆகையால், ஆயனர் உயிர் பிழைத்திருக்கிறார் என்ற விவரத்தை மட்டும் சொன்னேன். பிறகு மெள்ள, மெள்ள என் யோசனையையும் தெரிவித்தேன். பிரபு! என்னுடைய ஏமாற்றத்தை என்னவென்று சொல்வேன்...."

(சபதம் தொடரும்)



# இயற்கை

## மன்னார் வளைகுடா கடல் பகுதியில் பவளப்பாறைகள் அழியும் அபாயம்

அமெ ரிக்காவை தலைமையிடமாக கொண்டு செயல்படும் தனியார் ஆய்வு நிறுவனம் மன்னார் வளைகுடா கடல் பகுதியில் பவளப்பாறைகள் குறித்த அதிர்ச்சி தகவல்களை வெளியிட்டுள்ளது. அதுபற்றிய விபரம் வருமாறு:—


தமிழகத்தில் உள்ள மன்னார் வளைகுடா கடல் மேற்பரப்பின் வெப்பநிலை இயல்பை விட அதிகமாக இருப்பதால் அங்குள்ள பவளப்பாறைகள் அழியும் அபாயம் உள்ளதாக சுற்றுச்சுழல் அமைப்பு சிவப்பு நிற எச்சரிக்கை விடுத்துள்ளது. கடந்த 2016 ஆம் ஆண்டில் இதேபோன்று மன்னார் வளைகுடா கடல் பகுதியில் 16 சதவீதம் பவளப்பாறைகள் அழிந்தன.

மன்னார் வளைகுடாவில் உள்ள இந்த பூங்கா 132 வகையான பவளப்பாறைகளின் தாயகமாகவும், உலகின் பணக்கார பல்லுயிர் உருவாக்கங்களில் ஒன்றாகவும் திகழ்கிறது. தமிழகம் ஏற்கனவே வறண்ட வானிலையில் சிக்கித் தவிக்கும் நிலையில், ஈரப்பதமான காற்று மற்றும் அதிக வெப்பநிலை காரணமாக வெப்பம் மற்றும் அசவுகரியமான வறண்ட வானிலை நிலவும் என்று சென்னை வானிலை ஆய்வு மையம் கடந்த செவ்வாய்க்கிழமை வெப்ப நிலை எச்சரிக்கை விடுத்துள்ளது.

மாநிலத்தின் தனிமைப்படுத்தப்பட்ட பகுதிகளில் அதிகபட்ச வெப்பநிலை இயல்பை விட 2 முதல் 3 டிகிரி செல்சியஸ் வரை அதிகமாக இருக்கும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. மத்திய பசிபிக் பெருங்கடலில் வெப்ப அலை நாட்களின் எண்ணிக்கை அதிகரிக்கும். உலகளாவிய வானிலை மாதிரியும் 2024 வெப்பமான ஆண்டாக இருக்கும் என்று தெரிவித்துள்ளது.

இந்த ஆண்டு 30 டிகிரி செல்சியஸ் மற்றும் 33 டிகிரி செல்சியஸ் அல்லது அதற்கு மேலும் இருக்கலாம் என்று கடலியல் ஆராய்ச்சியாளர்கள் உறுதிபட தெரிவித்துள்ளனர். இதுபோன்ற கடுமையான நிலைமைகள் நீடித்தால், அது பெரும்பாலான பவளப்பாறை இனங்களுக்கு கடுமையான பாதிப்புகளை ஏற்படுத்தும் என்று கூறியுள்ளது.

வளைகுடா பகுதிகளில் பவளப்பாறைகளை தீவிரமாக கண்காணிக்கும் தூத்துக்குடியை சேர்ந்த கடல் ஆராய்ச்சியாளர் சுகந்தி தேவதாசன் என்பவர் கூறுகையில், வெப்ப உணர்திறன் கொண்ட பவளப்பாறைகளின் அழிவுடன் 60





# காப்போம்

சதவீதம் பாதிக்கப்பட்டுள்ளது. தற்போது, இந்திய பவளப்பாறைகளில், லட்சத்தீவு மற்றும் மன்னார் வளைகுடா பகுதிகளுக்கு மே கடைசி வாரம் முதல் ஜூன் இரண்டாவது வாரம் வரை எச்சரிக்கை நிலை—2 விடுக்கப்பட்டுள்ளது. அந்த மானின் சில பகுதிகள் மற்றும் நிக்கோபார் தீவுகள் எச்சரிக்கை நிலை—1 விடப்பட்டுள்ளது.

காற்று, மழை, சூறாவளி போன்ற உள்ளூர் காலநிலை நிலைமைகளின் மாறுபாடுகளைப் பொறுத்து இந்த கணிப்புகளில் குறையவோ, அதிகரிக்கவோ வாய்ப்புள்ளது என்று எஸ்.டி.எம். ஆர்.ஐ.யின் இணை பேராசிரியர் திராவிய ராஜ் கூறினார். அண்மையில் முடிவடைந்த தமிழ்நாடு பருவநிலை உச்சி மாநாடு 2.0—ன் போது, மன்னார் வளைகுடாவின் பவளப்பாறைகளில் பெருமளவு மாற்றங்கள் நிகழும் என்று தெரிவிக்கப்பட்டது.

## க. மாயகிருஷ்ணன்

மன்னார் வளைகுடாவில் 2005—ம் ஆண்டில் 37 சதவீதமாக இருந்த பவளப்பாறைகளின் எண்ணிக்கை 2021—ம் ஆண்டில் 27.3 சதவீதமாக குறைந்துள்ளது. வெப்பம் உள்ளிட்ட பருவநிலை மாற்றங்களுக்கு பிறகு படிப்படியாக அதன் பாதிப்பு நிலை மாறியது. இதன் மூலம் மன்னார் வளைகுடா பவளப்பாறைகள் பாதுகாப்புடன் இருப்பதை காட்டியது.

இருப்பினும், 2010 மற்றும் 2016 ஆம் ஆண்டுகளில் அதிகப்படியான பவளப்பாறைகள் அழிந்தன. 2005 ஆம் ஆண்டில் 1,11,060 ஹெக்டேராக இருந்த





பவளப்பாறை பகுதி 2021—ம் ஆண்டில் 6,628 ஹெக்டேராக குறைந்துள்ளது. பவளப்பாறை பகுதிகளாக இருந்த பல பகுதிகள் இப்போது முழுமையாக ஆக்கிரமிக்கப்பட்டுள்ளன. இதனால் 6,628 ஹெக்டேரில், 2,631 ஹெக்டேர் தற்போது சீரழிந்த நிலையில் உள்ளது.

அமெரிக்க ஆய்வு நிறுவனம் கணித்தபடி மன்னார் வளைகுடாவில் இன்னொரு பவள வெளுப்பு நிகழ்வு ஏற்பட்டால், உயிருள்ள பவளப்பாறைகள் கடுமையாக பாதிக்கப்படும் என்று கூறப்பட்டுள்ளது.

பல்லுயிர்கள் அதிகம் வாழும் மன்னார் வளைகுடா கடல் கோளத்தில் இருக்கும் பவளப்பாறைகள் அதன் நிறங்களை இழந்து வெளிரிப்போகத் தொடங்கியிருப்பது இயற்கை மனிதனுக்கு எழுப்பும் அபாய ஒலியாக அமைந்துள்ளது.

கண்கெட்டப் பிறகு சூரிய நமஸ்காரம் என்பதுபோல, இயற்கையை மனிதன் எந்த அளவுக்கு அழித்தொழித்திருக்கிறான், இது எந்த அளவுக்கு எதிர்வினையாற்றக் காத்திருக்கிறது, அடுத்து நிலைமை எந்த அளவுக்கு மோசமாகும்? என்னவெல்லாம் நிகழும்? என்பது குறித்த நீடித்த ஆய்வுகளை கடலுக்கடியில் நடத்த மாநில வனத்துறை உத்தரவிட்டுள்ளது.

கடந்த மார்ச் மாதம், மன்னார் வளைகுடாவிற்கு சிவப்பு எச்சரிக்கையை வெளியிட்டது பற்றி செய்தி வெளியிடப்பட்டது. அதாவது, “இயல்பு அளவுக்கு மேல்” மன்னார் வளைகுடாவின் கடல் மேற்பரப்பின் வெப்பநிலை (எஸ்எஸ்டி) காரணமாக பவளப் பாறைகள் வெளிரிப்போனத் தொடங்கி, அது விரைவில் மரணமடையலாம் என்று எச்சரித்திருந்தது. இதனால், வரும் மே மாதம் கடைசி வாரம் அல்லது ஜூன் முதல் வாரத்திற்கு இடையில் பவளப்பாறைகள் வெளிரிப்போகத் தொடங்கும் என்று தேசிய கடல் மற்றும் வளிமண்டல ஆய்வுக் கழகத்தால் கணிக்கப்பட்டிருந்தது.

ஆனால், கணிக்கப்பட்டதைக் காட்டிலும் முன்கூட்டியே அதாவது ஏப்ரல் மூன்றாவது வாரத்தில் இருந்தே பவளப்பாறைகள் வெளிரிப்போகத் தொடங்கியிருப்பது, நிலைமை இன்னும் மோசமடையலாம் என்பதையே காட்டுகிறது.

மன்னார் வளைகுடா உயிர்க்கோள காப்பகத்தின் இயக்குநர் ஜெகதீஷ் எஸ் பாக்கன், எக்ஸ்பிரஸ் குழுமத்திடம் அளித்த பேட்டியில், சில இடங்களில் வெளிரிப்போன பவளப்பாறைகளை கடந்த வாரமே ஆய்வாளர்கள் கண்டறிந்தனர் என்று தெரிவித்திருந்தார்.

இது குறித்து தேசிய கடல் மற்றும் வளிமண்டல ஆய்வுக் கழகத்தின் அறிவுறுத்தலைத் தொடர்ந்து நாங்கள் தொடர்ச்சியாகக் கண்காணிப்புப் பணியில் ஈடுபட்டு வருகிறோம். துத்துக்குடியைச் சேர்ந்த சுகந்தி தேவதாசன் கடல் ஆராய்ச்சி மையம்,

சென்னையைச் சேர்ந்த தேசிய கடல் ஆராய்ச்சி மையம் இணைந்து, இப்பகுதியில் ஆய்வுகளையும் மாதிரிகளையும் சேகரித்து ஆராய்ச்சி செய்து வருகிறார்கள் என்றார்.

மன்னார் வளைகுடா மற்றும் பால்க் விரிகுடாவின் பவளப் பாறைகள் நிறைந்த பகுதிகளைச் சுற்றியுள்ள கடல் வெப்பநிலையின் பரவலைப் புரிந்துகொள்ள கடல் சுழற்சி

வெளிரிவிட்டன. மற்றவை பகுதியாக வெளிரத் தொடங்கியிருக்கின்றன.

மோண்டிபோரா, அக்ரோபோரா போன்ற கிளைகளைக் கொண்ட பவளப்பாறை வகைகள், ஆரம்பத்தில் வெளிரிப்போகத் தொடங்கின, ஆனால், முழுமையாக வெளிரிப்போகவில்லை.

கடலுக்கடியில் நடக்கும் இந்த நிகழ்வு அடுத்த 2 அல்லது 3 வாரங்களுக்கு அதி முக்கியத்துவம்



மாதிரியை மேற்கொள்வதில் சென்னை நிறுவனம் நிபுணத்துவம் பெற்றுள்ளது.

அதுபோல, ஏப்ரல் முதல் ஜூன் 2024 வரை கடல் மேற்பரப்பில் நிலவும் வெப்பநிலையைக் கண்காணிக்க எம்ஓடிஐஎஸ் செயற்கைக்கோள் அளிக்கும் தரவு பயன்படுத்தப்படும் என்று அதிகாரி கூறினார்.

தூத்துக்குடி, மண்டபம், பால்க் வளைகுடா பகுதிகளில் நடத்தப்பட்ட ஆய்வுகளின் அடிப்படையில், மன்னார் வளைகுடாவில் வெப்பநிலை இயல்பை விட அதிகமாகப் பதிவாகியிருக்கிறது. அதாவது, 33 டிகிரி செல்சியஸ் அளவுக்கு வெப்பம் பதிவாகியுள்ளது. இதனால் பவளப்பாறைகள் வெளிரிப்போக ஆரம்பித்துள்ளன. குறிப்பாக, பழமையான பவள இனமான போரிடீஸ் அதிகளவில் வெளிரத் தொடங்கியிருக்கிறது. கிட்டத்தட்ட 50 சதவீத போரிடீஸ் பவளப்பாறைகள் வெளுக்கத் தொடங்கிவிட்டன. அதில் 10 சதவீதம் முற்றிலும்

வாய்ந்தது என்றும், தொடர்ந்து கண்காணிக்கப்படும் என்றும் அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

ஒருவேளை இப்பகுதியில் மழை பொழிந்தால், இந்த வெளிர்ந்த தோற்றம் மாறிவிடும். ஒருவேளை, இந்த வெப்பநிலையே தொடர்ந்து நீடித்தால், நிச்சயம்இது மிகப்பெரிய இழப்பை ஏற்படுத்தலாம், அடுத்த ஆய்வானது மன்னார் வளைகுடாவின் 21 தீவுப்பகுதிகளிலும் நடத்தப்பட்டு, பவளப்பாறைகள் வெளிரிப்போகமல் தடுக்கும் நடவடிக்கை குறித்து ஆராயப்படும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

கடைசியாக இப்படி பவளப்பாறைகள் வெளிரிப்போனது கடந்த 2016ஆம் ஆண்டில்தான், அப்போது, இங்குள்ள பவளப்பாறைகளின் பரவல் 38.9 சதவீதத்திலிருந்து 22.7 சதவீதமாகக் குறைந்தது குறிப்பிடத்தக்கது.




## ஆயுர்வேதம்: கழுத்து, இடுப்பு வலிக்கு ஆயுர்வேத தீர்வுகள் !

இடுப்பு வலியால் அவதிப்படுபவர்கள் இன்று ஏராளம். இளைய தலைமுறை முதல் வயதானவர்கள் வரை இன்று சந்திக்கும் ஒரு பிரச்னை இடுப்புவலி.

அதிகபட்ச நேரம் அமர்ந்து வேலை செய்பவர்களுக்கு இடுப்பு ஏற்படுகிறது. குறிப்பாக கணினியின் முன்பு அமர்ந்து வேலை செய்யும் இளைய தலைமுறைகள் முதுகுத் தண்டுவடம் பாதிக்கப்பட்டு, இடுப்புவயால் துடித்துப் போகின்றனர்.

காரணம் இடைவிடாமல் உட்கார்ந்து கொண்டே கணினியின் முன்பு அமர்ந்திருப்பதுதான்.

இதற்குத் தீர்வு என்ன?

அடிக்கடி அமர்ந்திருக்கும் இருக்கை விட்டு எழுந்து செல்லலாம்.

சரியான உயரத்தில் அமைக்கப்பட்ட மேசைகளை பயன்படுத்த வேண்டும்.

கணினி வைத்திருக்கும் மேசையை ஏற்றி இறக்கும் வகையில் அமைக்க வேண்டும்.

அமர்ந்திருக்கும் இருக்கை நன்கு சுழலுமாறும், மேசையின் உயரத்திற்கு தகுந்தவாறும் இருக்கையின் உயரத்தை வைக்க வேண்டும்.

பணி முடிந்ததும் நாள்தோறும் தவறாமல் உடற்பயிற்சி மேற்கொள்ள வேண்டும்.

சரியான முறையில் நாற்காலியில் உட்கார்ந்து பணியாற்ற வேண்டும்.

தொடர்ச்சியாக கணினியின் முன்பு அமர்ந்து பணியாற்றுவதால் இடுப்புப்பகுதியில் சதைகள் அழுத்தப்பட்டு, முதுகுத் தண்டின் சவ்வில் தேய்மானம் ஏற்பட வாய்ப்பு ஏற்படும். இதனால் தாங்க முடியாத இடுப்பு வலி ஏற்படும். தொடர்ச்சியாக இதே நிலை நீடித்தால், இறுதியில் அறுவை சிகிச்சை செய்ய வேண்டிய நிலை ஏற்படும். எனவே வரும் முன் காப்பதே சிறந்த வழி. மேற்கொண்ட முறைகளை நடைமுறைப்படுத்த, விரைவில் இடுப்பு வலியிலிருந்து மீள முடியும்.

இடுப்பு வலியை குணமாக்கும் கொள்ளு...

கொள்ளு பல பிரச்னைகளைத் தீர்க்கும் ஒரு இயற்கை உணவுப் பொருள். கிராமங்களில் அதிகமாக இது கிடைக்கும்.

கொள்ளு ரசம் வைத்து குடிக்க இடுப்பு வலி பறந்து போகும்.

உடல் பருமனாக உள்ளவர்கள் கொள்ளை வாரம் மூன்று முறை சேர்க்க உடல் தசைகள் இறுகி, ஒரு ஆரோக்கியமான உடல் வாகை பெற முடியும். உடலில் தேவையற்ற நீரை வெளியேற்றுகிறது.

அரை தம்ளர் தண்ணீரில் ஒரு கரண்டி அளவு ஓமம் சேர்த்து அதில் 100 மிலி தேங்காய் எண்ணெய்யை சேர்த்து கொதிக்க வைத்து வடிகட்டி கொள்ள வேண்டும்.பிறகு அவற்றுடன் கற்பூரப் பொடியை சேர்த்து இளஞ்சூடாக






மருத்துவர்
எஸ். சுவாமிநாதன்

இருக்கும் போது தேய்க்க வேண்டும். முருங்கைப் பட்டை, சுக்கு இவை இரண்டையும் சேர்த்து நன்றாக அரைத்து மேலே பூச வலி போகும்.

நல்லெண்ணையில் மருதாணி இலையை போட்டு காய்ச்சி பூசவும்

பூண்டை போட்டு காய்ச்சிய வேப்பெண்ணை தடவவும்.

பச்சைக் கற்பூரத்துடன் புதினா இலைச் சாறு கலந்து தடவவும்.

விழுதி இலையை எடுத்து சாறு பிழிந்து அதனுடன் நல்லெண்ணையை கலந்து 5 மி.லி வீதம் மூன்று நாட்கள் சாப்பிட்டு வந்தால் இடுப்பு வலி குறையும்.

பெண்களுக்கு இடுப்பு வலி நீங்க:

மாதவிடாய் காலங்களில் பெண்களுக்கு வயிற்று வலியும் இடுப்பு வலியும் ஏற்படுவது இயற்கை. இந்த வலிகளைப் போக்க வெந்தயத்துடன் நூறு கிராம் அளவுக்கு வெந்தயத்தை நன்றாக பொடியாக்கி, அதில் இருநூறு கிராம்

சர்க்கரையை கலந்து சாப்பிட வயிற்றுவலி, இடுப்பு வலி நீங்கும்.

வெள்ளைப் பூண்டுடன் கருப்பட்டியை கலந்து சாப்பிட இடுப்புவலி பெருமளவு குறைந்துவிடும்.

இளம்பெண்களுக்கு இடுப்பு வலி நீங்க:

நீங்கள் ஹைஹீல்ஸ் அணியும் பழக்கமுள்ளவர் எனில் அதன் மூலம் கூட உங்களுக்கு இடுப்பு வலி ஏற்பட வாய்ப்புள்ளது. அதிக உயரமுள்ள குதிகால் உடைய செருப்புகளை அணிவதை தவிர்க்க வேண்டும்.

ஹைஹீல்ஸ் அணிந்து நீண்ட நேரம் நடந்து செல்வதால் உடல் எடை முழுவதும் பாதத்தை நோக்கி அழுத்தப்படுவதால் முதுகு வலி, மூட்டு வலி, இடுப்பு வலி ஏற்படும்.

மிளகை பொன் வறுவலாக வறுத்து அதில் எள் எண்ணையை கலந்து சாப்பிட இடுப்பு வலி குறையும்.

## Reasons for back pain (Nidana)

- Muscle or ligament injuries or spasms .
- Excessive intake of cold,dry lite foods.
- Excessive sexual indulgence, exercises.
- Lack of sleep
- Underlying inflammatory diseases like Ankylosing spondylitis, Arthritis etc.
- Infectious - Urinary tract infections,abscess.
- Obesity or sudden weight gain.

## Signs and Symptoms of Back Pain (Lakshana)

- Stiffness in the morning when awakening and lessened back pain with activity.
- Worsening pain when resting, sitting, or standing.
- Pain that radiates away from the back into the buttocks, leg, or hip.
- Back pain that comes and goes.
- Numbness or weakness in your legs or feet.

தளுதாளி இலையுடன் பூண்டு, எள் எண்ணெய் (நல்லெண்ணெய்) சேர்த்து துவையல் செய்து சாப்பிட இடுப்பு வலி குணமாகும்.

ஆயூர்வேத சிகிச்சை முறைகள்:

ஆயுர்வேதத்தில் 'கிரிதரஸி' எனப்படும் இடுப்பு வலி வாயுவால் உண்டாகும் என கருதப்படுகிறது. தவறான அங்கஸ்திதி, முதுகுவலி, சுளுக்கு இவைகளை ஆயுர்வேதம் காரணமென்கிறது. குளிர்காலமும், மலச்சிக்கலும் ஸியாடிகாபாதிப்புகளை தூண்டிவிடும். அறிகுறிகள்

'சியாடிகா' உடலின் ஒரு பக்கத்தை முடக்கும் கீழ் இடுப்பிலிருந்து பாதம் வரை வலி, இழுப்பு ஏற்படும். கால் விரல்களில் பாதத்தில் ஊசி குத்துவது போன்ற வலி, விட்டு விட்டு வலி, தீடீர் வலி இவை ஏற்படும். வலி குறைவாக இருக்கலாம்.

இல்லை தீவிர பொறுக்க முடியாத வலியும் ஏற்படும். பிட்டம், தொடை, ஆடுகால் தசை, பாதம் இங்கெல்லாம் வலி வரும். இந்த பாகங்களில் மரத்துப்போனது போன்ற உணர்ச்சிகளிருக்கும். இந்த மரத்துபோகும் சமயத்தில் முதுகு வலி

(சில வேளைகளில்) இருக்காது.

1) அபதர்பன சிகிச்சை — உணவு கட்டுப்பாட்டின் மூலம் உடற்பருமனைக் குறைத்தல்.

2) ஆலேபனம் — நாகராதி சூர்ணம், ஜடாமயாதி சூர்ணம், கொட்டம் சுக்காதி சூர்ணம், கருத்த மர்மனி குளிகை போன்றவற்றைக் கொண்டு பத்து போடுதல்.

3) பரிசேக சிகிச்சை — தான்யாம்லத்தில் (காடி) தாரை சிகிச்சை செய்தல். இச்சிகிச்சை வலியிலிருந்து விரைவில் நிவாரணம் அளிக்கும்.

4) அப்யங்கம் — சஹசராதி தைலம், சஹசராதி குழம்பு, தன்வந்தரம் தைலம், முறிவெண்ண, மஹா நாராயண தைலம், கற்பூராதி தைலம், மஹா மாஷ தைலம் போன்ற தைலங்களைக் கொண்டு ஆயில் மசாஜ் செய்தல் நல்ல பலனையளிக்கும்.

5) ஸ்வேதன சிகிச்சை — (SUDATION) இலைகிழி, ஜம்பீர பிண்டம், வாலுகா பிண்டம் வைத்து ஸ்வேதன சிகிச்சை செய்தல்.

6) விமலாபன சிகிச்சை — ஸ்பைனல் மசாஜ் (SPINAL MASSAGE) ட்ராக்ஸன் மசாஜ் (TRACTION MASSAGE) செய்தல். பொதுவாக 2.5 kg + 2.kg, 2.5kg+2.5kg எடை பயன்படுத்துதல் நன்று.

7) உபநாக சிகிச்சை — ஜடாமயாதி சூர்ணம், ஆமணக்கு இலை மற்றும் ஊமத்தை காய் அல்லது ஆமணக்கு விதையுடன் எள் சேர்த்து அரைத்து உபநாகம் செய்தல்.

விரேசன சிகிச்சை — இந்துகாந்த கிருதம், திக்தக கிருதம் கொண்டு ஸ்நேக பானம் செய்த பிறகு கந்தர்வஹஸ்தாதி ஏரண்டம், திரிவிருத் லேஹ்யம், அவிபத்தி சூரணம் கொண்டு பேதி செய்வித்தல். விரேசனம் மிக முக்கியசிகிச்சையாக கருதப்படுகிறது.

10) பந்தன சிகிச்சை (BANDAGE) — ட்ரக்ஸன் செய்த பிறகு முறிவெண்ணெய் வைத்து கட்டு போடுதல் நல்ல பலனையளிக்கும். L.S CORSET அணிய பரிந்துரைக்கப்படுகிறது.

11) ஸ்நேக வஸ்தி — சஹசராதி குழம்பு, தாந்வந்தரம் குழம்பு எனிமா கொடுக்க மென்தட்டில் ஏற்படும் அழுத்தம் குறையும்.

12) கடி வஸ்தி — கடி கிரகத்தில் (SCIATICA M™) கடி வஸ்தி மிக முக்கிய சிகிச்சையாக மேற்கொள்ளப்படுகிறது. முறிவெண்ணெய் மற்றும் சஹசராதி தைலம் கொண்டு கடி வஸ்தி அல்லது பிச்சு செய்ய நல்ல பலனையளிக்கும்.

13) சஹசராதி கஷாயம், குக்குலு ராஸ்னாதி, மஹா ராஸ்னாதி, சிறிய ராஸ்னாதி போன்ற கஷாயங்கள் உள்ளுக்கு சாப்பிட நல்ல பலன் கிடைக்கும்.

14) யோகாசன சிகிச்சை — புஜங்காசனம், பவன முக்தாசனம் பரிந்துரைக்கப்படுகிறது.

உடல் எடையை பராமரித்தல், மிதமான உடற்பயிற்சி, அதிக எடை தூக்காதிருத்தல், முறையின்றி நீண்ட நேரம் அமர்ந்திருத்தல், அதிக அளவில் டூ வீலர் பயணம் செய்யாமை, எண்ணெய் தேய்த்து குளித்தல் போன்றஉபாயங்களைக்கையாண்டால் IVDP ஏற்படாமல் தடுக்கலாம்.உணவு கட்டுபாடும் உதவும். காரம், எண்ணெய், அதிக புளி, கிழங்கு வகைகள், பொறித்த வறுத்த உணவுகள் இவற்றை தவிர்க்க வேண்டும்.

1. முன்பே சொன்னபடி ஓய்வெடுத்துக் கொள்ள வேண்டும். ஆனால் படுக்கையிலேயே முடங்கி விட வேண்டாம். அவ்வப்போது எழுந்து சிறு நடை பயிலுங்கள்.

2. குப்புற படுக்கக் கூடாது.

3. நெடுநேரம் ஒரே இடத்தில் உட்கார்ந்து பணி செய்கின்ற போது முதுகெலும்பு அதிக அழுத்தத்திற்கு ஆளாகிறது. குறைந்தது ஒரு மணி நேரத்திற்கு ஒரு முறையாகிலும் இருக்கையை விட்டு நிமிட நேரம் நின்று சிறிது தூரம் நடந்துபின்னர் வந்து அமருங்கள்.

4. நெடுநேரம் இருக்கையில் அமர வேண்டி வந்தால் சாய்ந்தோ அல்லது தொய்வாகவோ




இராமல் நன்கு நிமிர்ந்து உட்காரப் பழகுங்கள்.

5. உங்கள் பணி நிமித்தம் நெடுநேரம் நிற்க வேண்டி வந்தால் அது உங்கள் இடுப்பு மூட்டுக்களையும், முதுகு எலும்பையும் பாதிக்கக் கூடும். ஒரு காலை நேராகவும், மற்றொரு காலைச் சற்று மடக்கிய நிலையிலும் வைத்து நிற்கலாம். சிறிய பலகை அல்லது குட்டி ஸ்டூலின் மேல் ஒரு காலை வைத்துக் கொள்ளலாம்.

6. இயன்றவரை மிகத் தட்டையான தலையணை ஒன்றைப் பயன்படுத்தி மல்லாந்த நிலையில் படுத்துத் தூங்குவது நல்லது.

7. ஸ்பாஞ்ச், இலவம் பஞ்சு நிறைந்த மென்மையான மெத்தைகளைத் தவிர்த்து தேங்காய்நார் மெத்தைகளில் படுப்பது நல்லது.

8. ஸ்பிரிங் இல்லாத தட்டையான மரக்கட்டிலில் அல்லது கோத்ரெஜ் கட்டில் போன்ற ஒன்றில் படுக்க முயலுங்கள்.

9. படுக்கையிலிருந்து திடுமென எழுந்திராமல் மெல்ல உருண்டு படுக்கையின் ஓரத்திற்கு வந்து கால்களைத் தரையில் ஊன்றி எழுந்து உட்காருங்கள்.

10. நீண்ட நடைப்பயிற்சியில் ஈடுபடுங்கள்.

11. பளுதூக்குவது போன்ற பயிற்சிகளைத் தவிருங்கள்.

12. தரையில் கிடக்கும் பொருள்களைக் குனிந்து எடுக்காதீர்கள். குத்துக்காலிட்டு உட்கார்ந்து அதன் பின் எடுங்கள்.

13. தரையிலுள்ள பொருள்கள் எதையேனும் தூக்க வேண்டி வந்தால் மண்டியிட்டு உட்கார்ந்து அதன் பின்னர் தூக்குங்கள்.

14. கழுத்துவலி, தோள்வலி இருந்தால் அதற்கு மருத்துவம் செய்து கொள்ளுங்கள். இல்லாவிடில் அது முதுகு வலியில் போய் முடியலாம்.

15. உடல் எடையை இயன்ற அளவு கட்டுக்குள் வையுங்கள்.

16. பெண்கள் தங்கள் பிட்டப் பகுதியின் எடை பெரிதும் மிகாதவாறு பார்த்துக் கொள்ள வேண்டும். தினமும் 4 கிலோ மீட்டராவது நடக்கின்ற பயிற்சியை மேற்கொள்ள வேண்டும்.

17. முதுகுவலி பற்றியே எந்த நேரமும் சிந்தனை செய்து வாழ்வை நரகமாக்கிக் கொள்ளாதீர்கள். எல்லோருக்கும் வரக்கூடிய ஒன்று தான் என்று இயல்பாக எடுத்துக் கொள்ளுங்கள்.

18. பெரும்பாலான ஆர்த்ரைடீஸ், முதுகெலும்பு பிரச்சனைகள் வர காரணம் மலச்சிக்கல். இதை தவிர்க்கவும்.

உணவு முறை:

• குளிர் உணவு / பானங்களை தவிர்க்கவும். ஐஸ்கீரிம், குளிர்பானங்களை தவிர்க்கவும்.

• பழைய உணவுகளை தவிர்க்கவும்.

• கத்தரிக்காய், முளைகட்டிய பீன்ஸ், கொய்யாப்பழம், வாழைப்பழம், சீதாப்பழம், அன்னாசி, வறுத்த உணவு, கடல் உணவு, இனிப்புகள், தயிர், ஊறுகாய் — இவற்றை தவிர்க்கவும்.

• எள்ளை சிறிதளவு எடுத்து தண்ணீர் விட்டு அரைத்து வலிக்கும் இடத்தில் பல தடவை தடவவும்.

• இரண்டு தேக்கரண்டி சீரகத்தை பொடித்து ஒரு டம்ளர் தண்ணீரில் காய்ச்சவும். ஒரு துணியை இந்த சீரகத் தண்ணீரில் நனைத்து, வலியுள்ள இடத்தில் ஒத்தடம் கொடுக்கலாம்.

• இரவில் படுக்கும் முன்பு, ஒரு சிட்டிகை மஞ்சள் பொடி, 2—3 ஏலக்காய் போட்டு காய்ச்சிய பாலை பருகவும்.

• இயற்கை வைத்திய முறையில், சுடுதண்ணீரில் இடுப்பு வரை அமிழ்ந்து உட்காருவது வலியை குறைக்கும்.

• இஞ்சியும், மஞ்சளும் ஸியாடிகாவை தவிர்க்கும் இயற்கை மருந்துகளாக கருதப்படுகின்றன. இவற்றை வைத்தியரின் ஆலோசனைப்படி உபயோகிக்க வேண்டும்.

# முதுமை

## வேரைத் தாங்க வேண்டும் விழுதுகள் !

ஒரு மனிதன் பிறந்து அறுபது ஆண்டுகள் நிறைகிறபொழுது, தமிழர்கள் அதனை மணிவிழா என்று கொண்டாடுகிறார்கள். ஏறத்தாழ இந்தப் பிறப்பின் மிகுந்த காலம் செலவாகிவிட்டது என்று பொருள். பேரக்குழந்தைகளோடு பெருமையுடன் கொண்டாடும் அந்த விழாவில் மீளவும் தங்களின் திருமணத்தை நடத்திக் காட்டுவது எதற்காக?

முன்னர் நடந்த திருமணத்தில் இல்லறம் புகுந்து தொழில் புரிந்து பொருள் ஈட்டியதுபோல், இப்போது நடக்கும் திருமணத்திற்குப்பின்னர் நல்லறம் பேணித் தொண்டுகள் புரிந்து அருள் ஈட்ட வேண்டும் என்பதற்காக. அந்த நிலையில் பொறிபுலன்களின் துய்ப்பில் இருந்து விடுபட்டு, மனத்தை ஒருமுகப்படுத்தி, நிறை அமைதியை நோக்கி முன்னேற வேண்டும் என்பதற்கான அறிவிப்பு இது.


அதுவரையில் தான் ஏற்ற பொறுப்புகள் அனைத்தையும் பெற்ற பிள்ளைகளிடம், பேண வந்த மருமக்களிடமும் விட்டுவிட்டு, அமைதியான முறையில் எஞ்சிய பொழுதுகளைக் கழிக்கத் தலைப்படவேண்டும் என்பது இதன் பொருள். உடல்நலத்தோடு உளநலனும் குன்றாதிருக்க அமைதியாக இருத்தலே அப்போதைய தேவை.

தனியார் நிறுவத்திலோ, அரசு நிறுவனத்திலோ ப ணி ய ா ற் று ப வ ர் க ள் பணிக்காலம் முடித்து ஓய்வு பெறுவதுபோல், வாழ்வின் இயக்கப்பெரும்பொறுப்புகளில் இருந்து விடுதலை பெறுகிற மகத்தான காலம்தான் மணிவிழாக் காலம். அதன்பின், பேரக்குழந்தைகளுடன் மகிழ்ந்து விளையாடவும், ஆன்ம ஈடேற்றத்திற்குப் பக்தியில் திளைக்கவும் நேரத்தைச் செலவிட வேண்டும். வசதி வாய்ப்புள்ளவர்கள் அவரவர்களின் சமயநிறுவனங்களோடு இணைந்து ஆன்மிகத் தொண்டில் ஈடுபடுவதும் உண்டு.

இந்தப்புரிதல், இல்லத்துப் பெரியவர்களுக்கும் வேண்டும். இளைய தலைமுறையினருக்கும் வேண்டும். முந்தைய வாழ்வின் சூட்சுமங்களை முறையாகப் பேரக் குழந்தைகளுக்குச் சொல்லிக் கொடுக்கவும், அன்பின் நெகிழ்வை அனுபவிக்கவும் இதுவே அவர்களுக்குத் தகுந்த தருணம்.

தாய்தந்தையர் விட்ட இடத்தில் இருந்து தம் பணிகளைத் தொடங்கும் அடுத்த தலைமுறையினருக்குத் தத்தம் குழந்தைகளைக் கொஞ்சவோ, அவர்களின் கேள்விகளுக்கு விடை சொல்லவோ நேரம் இருக்காது. பொறுப்போடும் பொறுமையோடும் அவர்களைக் கவனித்துக் கொள்ளவும், அவர்களைப் போலவே, தங்களை ஆக்கிக் கொள்ளவும் இல்லப்பெரியவர்களுக்கு இத்தகு வாய்ப்பினை இயற்கை வழங்கியிருக்கிறது. இது மனித குலத்திற்கு மட்டுமே கிட்டுகிற மகத்தான வாய்ப்பு.

பணியின் பொருட்டுப் பெற்ற பிள்ளைகளை




# பேணுவோம்

## கிருங்கை சேதுபதி

எடுத்துக் கொஞ்சவோ, அவர்களிடம் பிரியம் காட்டி மகிழவோ அவகாசம் இன்றி அலைந்த ஆன்மாக்களுக்கு இப்போதுதான் முற்ற முழுக்கக் குழந்தைகளுடன் இருக்கிற வாய்ப்பு வந்திருக்கிறது. இளம் வயதில் தான் பெற்ற பிள்ளைகளின் இயக்கங்களைப் பொறுமையுடன் கண்டு அனுபவிக்க முடியாத ஏக்கத்தைத் தீர்த்துக் கொள்கிற சூழல், முதுமையில்தான் வாய்க்கிறது.

குழந்தைமையின் அறியாமையும், முதுமையின் ஆற்றாமையும் இணைகிற புள்ளி வாழ்க்கையை வட்டமாக்கிவிடுகிறது. ஒருபுள்ளியில் கால் ஊன்றி, மறுபுள்ளியில் பென்சிலை இணைத்துக் கொண்டு வட்டமாகச் சுற்றி வரும் காம்பஸ் என்கிற கணிதக் கருவி போடும் வட்டம்போல் அமைகிற வாழ்வில் உள் நிற்கும் குடும்பம் எதுவோ, அது பாதுகாப்பும் பக்குவம் வாய்ந்த வளர்ச்சியும் அடைகிறது.

முதல் வட்டத்தை முடித்த பெற்றோர்களை அடுத்து, அடுத்த வட்டத்திற்கு ஆயத்தமாகும் பிள்ளைகளைப் பேணுதற்கு அவர்கள் பெற்ற பிள்ளைகள் தங்களைத் தயார் செய்துகொண்டு விடுவார்கள். வாழையடி வாழையென வளர்ந்து வரும் இத்தகு வாழ்க்கைச் சுழற்சியில் எங்கேனும் தடுமாற்றம் வந்துவிட்டால், தடம் மாற்றம் நிகழும். அது பல சிக்கல்களை உருவாக்கும். அப்போது எத்தனை பொருள் இருந்தும் அனுபவிக்கும் அமைதியும், ஆரோக்கியமும் கிட்டாது போய்விடும். அது நல்லறமாக வளரவேண்டிய இல்லறத்தைத் தொல்லை தரும் அல்லறமாக ஆக்கிவிடும்.




இந்தச் சூழலில்தான் இப்போது பல குடும்பங்கள் சிக்கி வருகின்றன. வாழ்க்கைக்கு வேண்டிய பொருள் தேடும் அவசரத்தில், அவசியத்தில், வாழ்வுக்கான பொருளைத் தேடாது விட்ட மனக்குறைக்கு ஆளாகிவிடுகிற மனிதர்கள் மிகுந்து வருகிற காலமாக இது வளர்ந்து வருகிறது.



துய்க்கும் நுட்பத்தை உணர்த்துகிற அருஞ்சொல், அது.

அதனைத் தம் திறத்தால் பேணி, இல்லறத்தை நல்லறமாக்கும் மதிநுட்பம் வாய்ந்தவர் பெண் என்பதால், திருவுடன் மதியும் இணைந்து பெண்ணுக்கு அடைமொழியாகிறது. தான் பிறந்த இல்லத்தைத் துறந்து, தான் புகும் இல்லத்திற்குத் தலைவியாகும் பெண்மைக்குத் திருவும் வேண்டும், மதியும் வேண்டும். அல்லவா?

இது எந்தப் பல்கலைக்கழகத்திலும் சென்று பயிலக்கூடிய பாடம் அன்று. குடும்பத்தையே பல்கலைக் கழகமாக ஆக்கிப் பெறுகிற பயிற்சி. அதில் முதிர்ச்சி அடைந்த பெரியவர்களின் அனுபவங்களை உள்வாங்கிக் கொள்ள வேண்டிய பரிபக்குவம் பெண்மைக்கு இயல்பாகவே அமைந்திருக்கிறது. பேணுதல் என்கிற பொருண்மையில்தான் பெண் என்ற சொல்லே அமைகிறது.

பேணுபவள் பெண்ணாக இருக்கிறாள். ஆளுபவன் ஆணாக இருக்கிறான். அவன் தலைவன். அவனையும் பேணிக் காக்கிற அவள் அவனுக்கும் தலைவி. கவனித்துப் பார்த்தால் ஆணைவிடவும் அதிக ஆற்றலும் அதிகாரமும் பெண்ணுக்கே உண்டு. மண்ணகத்தில் வீடெடுத்து, வாழும் இடம் அமைப்பவர் தந்தை என்றால், தன்னகத்தில் இடம் கொடுத்துப் பேணும் பெண் தாய் ஆகிறார்.

பிள்ளைகளைக் காட்டிலும் பெரிய செல்வம் வேறு இல்லை என்பதற்காகத்தான், பதினாறு செல்வங்களில், பிள்ளைப்பேறான சந்தானத்தையும் சேர்த்துச் சொல்லினர் முன்னோர். அவர்கள் தம்மைப்போல் பெரியவர்கள் ஆகிற வரைக்கும் செல்வர்கள்தாம்; செல்வியர்தாம். அவர்கள் பெரியவர்கள் ஆகித் திருமணம் புரிகிறபோது, திருவாளர்களாகவும், திருமதியராகவும் ஆகிவிடுகிறார்கள்.

அதிலும் ஒரு சிறப்பு, செல்வனாக இருக்கிற மைந்தன், திருமணத்திற்குப் பிறகு, 'திரு' என்னும் முன்னொட்டினை அடைமொழியாகப் பெறுகிறான். செல்விக்கோ, இந்தத் 'திரு'வுடன் 'மதி'யும் இணைந்துவிடுகிறது.

'திரு' என்னும் பெருஞ்சொல்லுக்கு அரும்பொருள்கள் பல. செல்வம் என்கிற நிலை கடந்து அருளையும் பொருளையும் இணைத்துச் சிந்திக்க வைக்கிற நறுஞ்சொல் அது. அறத்தால் பொருள் ஈட்டி, அதனைப் பலருக்கும் ஈந்து இன்பம்

இப்படித் தன்னை உருக்கி, பெற்று வளர்த்த பெரியவர்களை விட அரிய செல்வம் வேறொன்றில்லை என்பதை, இயற்கை சொல்லிக் கொடுக்கிறது. அரிச்சுவடி கற்கவரும் குழந்தைகளுக்கு ஆத்திசூடி தந்த ஔவையார் 'தந்தைதாய்ப் பேண்' என்று சொல்லிக் கொடுக்கிறார்.

குலை தள்ளிய வாழைக் குடும்பத்தை, அதன் அடியில் வளரும் இளம் வாழைக் கன்று நிலைநிறுத்துவதுபோல, முற்றிப்பருத்துத் தளர்ந்த ஆலமரத்தின் அடிமரத்தைச் சூழ விரிந்து தொங்கும் விழுதுகள் மண் இறங்கித் தாங்குவதுபோல, மனிதகுலம் தன் மூத்தோரைப் பேணும் கடப்பாடு உடையது.

தனக்கு முன்னோரான பெற்றோரைப் பிள்ளைகள் தாங்கினால், தாம் பெற்ற பிள்ளைகள் தம்மைத் தாங்கும் என்கிற எளிய உண்மையை இயற்கை பல வழிகளில் எடுத்துக் காட்டியிருக்கிறது.




அது சொல்லும் அரிய உண்மை, குழந்தைகளாக இருந்து வளர்ந்த மனிதவுயிர்கள் முதுமையிலும் அந்தக் குழந்தைமையை அடையும் என்பதுதான்.

முளைத்த பற்கள் விழுந்துவிடுகின்றன. அடர்ந்து வளர்ந்த தலை முடி, நரைத்துப் பின் உதிர்ந்துவிடுகிறது. பருத்த மேனி சுருங்கிவிடுகிறது. தளர்நடை, குழந்தைகளின் தளிர்நடை போல ஆகிவிடுகிறது. கைப்பிடித்து அழைத்துச் செல்லவேண்டிய கட்டாயத்திற்கு ஆளாகும் பெரியவர்கள் மீளவும் குழந்தைகள் ஆகிறார்கள் என்கிற புரிதல் இடைப்பட்ட தலைமுறையினருக்கு வந்துவிட்டால், வருத்தமோ, கோபமோ வருவது குறையும்.

சின்னக் குழந்தைகளுக்கு உரிய பிடிவாதமும், அடமும், கூடவே மறதியும் கொண்டுவந்து சேர்க்கும் முதுமை, பின்னர் தமக்கும் வந்துசேரும் என்பதை நடுத்தர வயதுப் பிள்ளைகள் கண்டு பழகவேண்டும் என்பதற்கான இயற்கை நடத்தும் அரிய பாடம் இது.

பிஞ்சுவயதில் எப்படி, பெற்றோர்களைப் பார்த்துப் பேசவும் செயல்படவும் பிள்ளைகள் பழகினார்களோ, அதுபோல், அவர்கள் பெரியவர்கள் ஆனபிறகு, தம்மிலும் பெரியவர்கள் படுகிற முதுமையின் அனுபவங்களை உற்றுக் கவனித்துத் தம்மையும் அவ்வாறு பராமரித்துக் கொள்ளவும் பக்குவமாக நடந்துகொள்ளவும் கற்றுக் கொள்ள வேண்டும். தாம் எவ்வாறு பெற்றோரை அந்தப் பருவத்தில் பேணுகிறோமோ, அதுபோல்தாம் தாம் பெற்ற பிள்ளைகளும் தம்மைப் பேணும் என்று சொல்லியா தெரிய வேண்டும்?

‘குழந்தையும் தெய்வமும் குணத்தால் ஒன்று’ என்பது உண்மை என்றால், குழந்தைமை நிலை அடையும் முதுமையும் அந்த வரிசையில் அடங்கும் அல்லவா? குழந்தைகளாக இருந்து வளர்ந்தவர்கள் முதுமை அடையும்போது, மீளவும் முதிய குழந்தைகள் ஆகிறார்கள் என்பது உண்மையல்லவா?

பொன்போற் புதல்வர்களைப் பெறாதவர்களுக்குத்தான் புகலிடமாக அயலிடம் வேண்டும். அது முற்காலத்தில் சமயம் சார்ந்த மடங்களாக இருந்தன; தற்காலத்தில் முதியோர் இல்லங்களாக இருக்கின்றன. அவற்றில் இருந்து வாழ ஒருவிதப் பயிற்சியும் பக்குவமும் வேண்டும். எல்லாருக்கும் அத்தகு சூழல் இருக்க வாய்ப்பில்லை.

வளர்ப்புப் பிராணிகளான பூனைக்கும் நாய்க்கும், இடம் இருக்கிற வீட்டில், வளர்த்த பெரியவர்களுக்கு இடம் இல்லாமல் போகலாமா? முதியவர்களுக்கான இல்லங்களைத் தேடுவதைவிட, தத்தம் இல்லங்களில் முதியவர்களுக்கான இருப்பிடத்தை அமைப்பதற்கு வாஸ்து சாஸ்திரத்தில் வல்லுநர்கள் நல்ல பலன்களைச் சொல்லி, ஆற்றுப்படுத்தினால் நல்லது.

# தமிழ் 2024

நற்றமிழரின் நாடித்துடிப்பு

## JANUARY




## FEBRUARY




## MARCH




## APRIL




## MAY




## JUNE

| S | M | T | W | T | F | S |
|---|---|---|---|---|---|---|
| | | | | | | 1 |
| 2 | 3 | 4 | 5 | 6 | 7 | 8 |
| 9 | 10 | 11 | 12 | 13 | 14 | 15 |
| 16 | 17 | 18 | 19 | 20 | 21 | 22 |
| 23 | 24 | 25 | 26 | 27 | 28 | 29 |
| 30 | | | | | | |

## JULY

| S | M | T | W | T | F | S |
|---|---|---|---|---|---|---|
| | 1 | 2 | 3 | 4 | 5 | 6 |
| 7 | 8 | 9 | 10 | 11 | 12 | 13 |
| 14 | 15 | 16 | 17 | 18 | 19 | 20 |
| 21 | 22 | 23 | 24 | 25 | 26 | 27 |
| 28 | 29 | 30 | 31 | | | |

## AUGUST

| | M | T | W | T | F | S |
|---|---|---|---|---|---|---|
| | | | | 1 | 2 | 3 |
| 4 | 5 | 6 | 7 | 8 | 9 | 10 |
| 11 | 12 | 13 | 14 | 15 | 16 | 17 |
| 18 | 19 | 20 | 21 | 22 | 23 | 24 |
| 25 | 26 | 27 | 28 | 29 | 30 | 31 |

## SEPTEMBER

| S | M | T | W | T | F | S |
|---|---|---|---|---|---|---|
| 1 | 2 | 3 | 4 | 5 | 6 | 7 |
| 8 | 9 | 10 | 11 | 12 | 13 | 14 |
| 15 | 16 | 17 | 18 | 19 | 20 | 21 |
| 22 | 23 | 24 | 25 | 26 | 27 | 28 |
| 29 | 30 | | | | | |

## OCTOBER

| S | M | T | W | T | F | S |
|---|---|---|---|---|---|---|
| | | 1 | 2 | 3 | 4 | 5 |
| 6 | 7 | 8 | 9 | 10 | 11 | 12 |
| 13 | 14 | 15 | 16 | 17 | 18 | 19 |
| 20 | 21 | 22 | 23 | 24 | 25 | 26 |
| 27 | 28 | 29 | 30 | 31 | | |

## NOVEMBER


| S | M | T | W | T | F | S |
|---|---|---|---|---|---|---|
| | | | | | 1 | 2 |
| 3 | 4 | 5 | 6 | 7 | 8 | 9 |
| 10 | 11 | 12 | 13 | 14 | 15 | 16 |
| 17 | 18 | 19 | 20 | 21 | 22 | 23 |
| 24 | 25 | 26 | 27 | 28 | 29 | 30 |


## DECEMBER

| S | M | T | W | T | F | S |
|---|---|---|---|---|---|---|
| 1 | 2 | 3 | 4 | 5 | 6 | 7 |
| 8 | 9 | 10 | 11 | 12 | 13 | 14 |
| 15 | 16 | 17 | 18 | 19 | 20 | 21 |
| 22 | 23 | 24 | 25 | 26 | 27 | 28 |
| 29 | 30 | 31 | | | | |

அய் தமிழ் முகநூல்:
http://www.facebook.com/pages/Ithamil-Magazine
www.ithamil.com

Email: editor@ithamil.com




VARSHA™
IDLI/DOSA BATTER
Eat the Best!
Eat Fresh!
VARSHA
Idli / Dosa Wet Mix
1Kg
Traditional taste that Lingers